www.padippakam.com

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

பின்வரும் இதழ்களிலிருந்து தொகுக்கப்பட்ட கட்டுரைகள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் (இலங்கை)

இதழ்கள்.442நவம்பர்12.1993.,443டிசம்பர்.17.1993.,444ஜனவரி 07.1994.,445ஜனவரி 28.1994

தொகுப்பு இலக்கம் 10. மார்ச் 1994. விலை.3-,

## பகிரங்கக் கூட்டம்

★ யூ.என்.பி. அடக்குமுறைச் சட்டங்களை தோற்கடி!

★ உலக சோசலிசத்திற்காக, போராடு!

இடம்: அட்டன் நகர சபை மண்டபம்

பெப்ரவரி13ம் திகதி ஞாயிறு மாலை 5 மணி

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
இளம் சோசலிஸ்டுகள்

# சமசமாஜ—கம்யூனிச—நவசமசமாஜ—சீஎம்யூ தலைவர்கள்

# யூஎன்பி பொலிஸ் அரச சட்டங்களுக்கு ஆதரவு

யூஎன்பி அரசாங்கம் புதிதாக இயற்றிக் கொண்டுள்ள அடக்குமுறை பொலிஸ் அரச சட்டங்களை எதிர்த்துத் தாம் எதுவுமே செய்யப் போவதில்லை என சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ கட்சிகளின் தொழிற்சங்கத் தலைவர்களும் மற்றும் சீ.எம்.யூ, அ.லி.சே.ச. தலைவர்களும் மீண்டும் ஒரு தடவை சபதம் எடுத்துள்ளனர். ஜனவரி 11ம் திகதி நாரஹேன்பிட்டி தொழிற்சங்க சம்மேளன மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கிலேயே இந்த உறுதிமொழியை யூஎன்பி அரசாங்கத்துக்கும் ஆளும் வாக்கத்துக்கும் இந்தத் துரோகத் தலைவர்கள் வழங்கியுள்ளனர்.

'தனித்து எதுவும் செய்ய முடியாது' என ஊழையிட்டு வந்த சமசமாஜ, கம்யூனிச, சி. ல. சு. க., நவசமசமாஜ தொழிற்சங்கத் தலைவர்கள், ஜனவரி 11ம் திகதிய கூட்டத்துக்கு சீஎம்யூ, இலங்கை வங்கி ஊழியர் சங்கம், யூஎன்பி, இதொகா சங்கத் தலைவர்களையும் அழைத்திருந்தனர்.

இக்கூட்டத்தில் தீவிர வலதுசாரி தொழிற்சங்கமாகப் பேர்போன சீஎம்யூ வின் பொதுச் செயலாளர் பாலாதம்பு முக்கிய பேச்சாளராக விளங்கினார். வாயடிப்புக்குப் பேர் போன அவர் கூறியதாவது: ''அவசரகாலச் சட்டம் ஒரு பெரிய மரம். அதில் பல்வேறு கிளைகள் உண்டு. ஒரு கிளையை வெட்டியதும் வேறொரு கிளை தளிர்க்கும். கிளையை வெட்டிச் சரிப்படாது. மரம் சம்பந்தப்பட்ட பிரச்சினை உள்ளது...''

முழு அவசரகாலச் சட்டத்துக்கும் எதிரான போராட்டத்தில் இறங்க வேண்டும் என தம்பு எண்ணுவதாக எந்தவொரு தொழிலாளியோ அல்லது ஒடுக்கப்பட்டோரோ ஏமாந்து போகக் கூடாது. முதலாளித்துவ அரசு, யூஎன்பி சம்பந்தமான தனது சுயகோலத்தைக் காட்டும் விதத்தில் பேச்சைத் தொடர்கையில் தம்பு கூறியதாவது: ''இந்தச் சட்டம் பற்றி பொலிசுக்கும் இராணுவத்துக்கும் விளக்கம் இல்லாததால் அவர்கள் இந்தச் சட்டத்தை தவறான வழியில் பாவிக்கின்றார்கள்,'' தம்பு கூறுவது என்ன? யூஎன்பி அரசாங்கத்தின் இந்தக் காட்டுமிராண்டிச் சட்டத்தை உரிய முறையில் நடைமுறைப் படுத்த வேண்டும்! இதற்குப் பொலிசாருக்கும் ஆயுதப்படைகளுக்கும் ஆலோசனை வழங்க தம்பு தயார். இதை ஊர்ஜிதம் செய்யும் விதத்தில் அவர் கூறியதாவது:

''சட்டத்தையும் கடமையையும் பற்றி இராணுவத்துக்கும் பொலிசாருக்கும் நனவூட்டும் வகையில் சமீபத்தில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்படி எனக்கும் அழைப்பு வந்தது. வேறு வேலையிருந்ததன் காரணமாக எனக்குப் போகக்கிடைக்கவில்லை. நான் அதற்குப் போகத்தான் இருந்தேன்...''

சுருங்க சொன்னால் தம்பு இந்தக் காட்டுமிராண்டி சட்டங்களை தொழிலாளர்களுக்கும், ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராக உரிய முறையில் அமுல் செய்ய முதலாளித்துவ ஆயுதப்படைகளுடன் இணைந்து கொள்ளத் தமது உஜார் நிலையைக் காட்டிக் கொண்டுள்ளார்.

அன்டன் மாகஸ், ஜயரத்ன மாரியகொடை (இலங்கை பொது ஊழியர்சங்கம்) சுபசிங்க (ஸ்டாலினிச தொழிற்சங்க தலைவர்) ஆகியோர் 'அரசியல் கட்சிகளை இழுக்காது தொழிற்சங்கங்கள் மூலம் எதிர்ப்பைக் காட்ட வேண்டும்' எனக் கூறினார். 'சகலரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதைச் செய்ய வேண்டும்' என ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்க முதல்வர்களில் ஒருவரான டபிள்யூ. ஏ. பியதாச குறிப்பிட்டார். இந்தப் பிற்போக்கு கூற்றை மேலும் தெளிவுபடுத்துகையில் அவரின் 'தோழர்' சுபசிங்க பின்வருமாறு கூறினார்: ''ஒவ்வொரு அரசியல் கட்சியும் அவரவருக்கு உசிதமான விதத்தில் தொழிற்படும். தொழிற்சங்கங்கள் வேறாக இணைந்து அனைவருக்கும் பொருத்தமானதைச் செய்ய வேண்டும்'' என்றார்.

இந்த பிற்போக்கு தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் முன்வைப்பது தொழிலாளர் வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் பொருத்தமானது அல்ல; 'அனைவருக்கும் பொருத்தமானதே'. அதன்படி முதலாளித்துவ யூஎன்பி அரசாங்கம் உட்பட்ட ஏகாதிபத்தியச் சார்பு 'கொம்பிரதோர்' முதலாளி வர்க்கத்துக்கு ஏற்றதைச் செய்ய வேண்டும். தொழிலாளர் வர்க்கம் உள்ளடங்கலான ஒடுக்கப்படும் மக்களுக்கும் யூஎன்பி அரசாங்கம் உட்பட்ட முதலாளி வர்க்கத்துக்கும் பொருத்தமான பொது அவசியங்கள் கிடையாது. தொழிலாளர் வர்க்க அவசியங்கள் முதலாளி வர்க்க அவசியங்களுக்கு முற்றிலும் முரணானது.

கூட்டத்தின் இறுதியில் எடுக்கப்பட்ட முடிவு என்ன தெரியுமா? அன்று அழைப்புக் கிடைத்தும் அதில் கலந்து கொள்ளாத--அதாவது யூஎன்பி ஜுன்டா தொழிற்சங்கங்கள் இதொகா—சங்கங்களையும் திரும்பவும் கூட்டிக் கலந்துரையாட வேண்டும் என்பதே. இது யூஎன்பி அரசாங்கத்துக்கு ஏற்றதைச் செய்ய இடம்பெறப் போகும் ஒரு கலந்துரையாடல் ஆகும்.

இதற்கு முன்னர் நடைபெற்ற தொழிற்சங்கக் கூட்டுக் குழுவின் கூட்டங்களில் பேசிய சமசமாஜக் கட்சி அகில இலங்கை வர்த்தக கைத்தொழில் தொழிற்சங்கத்தின் தலைவர் சிறிவர்த்தன இந்த 'தனித்து ஒன்றும் செய்ய முடியாது' என்ற இராகத்தை இசைப்பதில் முன்னணியில் நின்றார். ''தனித்து ஒன்றும் செய்யமுடியாது. யூஎன்பி எதிர்ப்பு கட்சிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவசரகாலச் சட்டத்தின் சகல பிரிவுகளையும் சேர்த்து எதிர்ப்பு வேலைத்திட்டத்தினை குறிப்பிட்டால் மக்கள் பயப்படுவர். அப்போது ஆட்சேர்ப்பது கஷ்டம்'' இதற்கு மேலும் ஒத்தூதிய ஸ்டாலினிச தொழிற்சங்கவாதி டபிள்யூ. ஏ. பியதாச 'மறியலுக்குக் கூட ஆட்களை சேர்க்க முடியாது' என்றார். ந. ச. ச.க. தலைவர் சரணபால டி. சில்வா தமது கட்சியின் 'ஜன அரகலய'வேலைத்திட்டத்தின் கோலத்தைக் காட்டுகையில் 'கறுப்புப் பட்டி கட்டி எதிர்ப்பைக் காட்ட வேண்டும்' என்றார்.

இத்தலைவர்கள் எவரும் புதிய அவசரகாலச் சட்ட விதிகளை எதிர்த்து எதுவும் செய்வர் என்ற நப்பாசையை எந்தவொரு தொழிலாளியோ அல்லது ஒடுக்கப்படுவோரோ வளர்த்துக் கொள்ளக் கூடாது. இச்சட்டத்தினை எதிர்த்து இத்துரோகத் தலைவர்கள் சின்னி விரலைத் தன்னும் உயர்த்தப் போவதில்லை. இதற்கு இவர்களின் அறிக்கைகளே நல்ல சான்று. அத்தோடு அவர்கள் யூஎன்பி அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்து தொழிற்படும் தயார் நிலையையும் காட்டிக் கொண்டுள்ளனர். இச்சட்டங்களுக்கு எதிராகத் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களிடையே வளர்ச்சி பெறும் எந்தவொரு பிரச்சார இயக்கத்தையும் சிதறடிக்க இவர்கள் செயற்படுவர். தொழில், சேவை நிலைமைகள், வாழ்க்கைத்தரம், நலன்புரி சேவைகளுக்கு எதிராக யூஎன்பி அரசாங்கம் தொடுக்கும் மிலேச்சத் தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களிடையே வெடிக்கும் போராட்டங்களுக்கு எதிராக இந்த அடக்குமுறைச் சட்டங்களை பயன்படுத்தவும், அத்தகைய போராட்டங்களை ஒடுக்குவதில் யூஎன்பி அரசாங்கத்துடன் இணைந்து செயற்படவும் இத்துரோகத் தலைவர்கள் ஆயத்தமாயுள்ளனர் என நாம் எச்சரிக்கின்றோம்.

முதலாளித்துவ வர்க்க ஆட்சியைத் தூக்கி வீசி, இலங்கை—தமிழீழம் சோசலிசக் குடியரசினை நிறுவும் போராட்டம்' யூஎன்பி அரசாங்கம் உட்பட்ட முதலாளி வர்க்கத்தின் தமிழர் விரோத இனவாத யுத்தத்துக்கும் விடுதலைப் புலிகள் உட்பட்ட முதலாளித்துவ தேசியவாத அமைப்புக்களின் பிற்போக்குக்கும் எதிராக சிங்கள—தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் தொழிலாளர்களிடையே அனைத்துலக வாதத்தினை கட்டியெழுப்பும் போராட்டமாகும். இலங்கையில் இப்போராட்டத்தினை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே முன்னெடுக்கின்றது.



"சோவியத் யூனியனுள் ஸ்டாலினிசத்துக்கு எதிரான நிஜ மார்க்சிசப் பதிலீடு இருந்தது"

பக்கம்– 18

வடக்கு —கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!

படிப்பகம்

www.padippakam.com



எண்ணம்

# விடுதலைப் புலிகள் இயக்க வேட்டையும் கருத்துவேறுபாடும்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய இரண்டு தலைவர்களாக விளங்கிய கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா), திலீப் யோகி, மற்றும் நால்வர் இயக்கத்தில் இருந்து விலக்கப்பட்டு, விசாரணை தொடர்ந்து நடைபெறுவதாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான அன்டன் பாலசிங்கம், ஒல்லாந்து வானொலிச் சேவையான UPRO வின் பொஜே என்ற எழுத்தாளருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். இந்திய உளவுச் சேவையான றோவு(Raw)டன் சேர்ந்து செயற்பட்டமை, விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் கிட்டு (கிருஷ்ணகுமார்) பயணம் செய்து கொண்டிருந்த கப்பல் பற்றி றோவுக்கு உளவு செய்தி வழங்கியமை என்பன இந்த விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளாகும்.

மகேந்திரராஜாவுக்கும் அவரின் சகாக்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக முதலாளித்துவப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தச் செய்தியை மறுத்துள்ளது. 'தொழிலாளர் பாதை' இந்த தமிழர் விரோத இனவாத முதலாளித்துவப் பத்திரிகைச் செய்திகளை அடிப்படையாகக் கொள்ளாத போதிலும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உள்ளே அத்தகைய இரத்தப் பலியெடுப்புக்களில் தலைமை இறங்கப் பெரிதும் இடமுள்ளது.

## விடுதலைப் புலிகளின் நெருக்கடியும் புதிய பிற்போக்கு நடவடிக்கையும்

அனைத்து முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ தேசியவாத இயக்கங்களின் தலைவர்களைப் போலவே விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களும் சதிகாரர்கள். இந்த அரசியல் குழுக்கள் ஒரு கும்பலுக்கு எதிராக மறு கும்பல் திடீரென 'குற்றச்சாட்டு' முன்வைத்து இரத்தக் களரியில் ஈடுபடுகின்றார்கள். விடுதலைப் புலிகள் மற்றும் தமிழ் முதலாளித்துவ அமைப்புக்களிடையேயும் விடுதலைப் புலிகள் இயக்கத்தினுள்ளேயும் அத்தகைய இரத்தப் பலியெடுப்புக்களில் இறங்கியது இது முதல் தடவை அல்ல. இன்று அம்பலமாகியுள்ள விடுதலைப் புலிகளின் 'கருத்து வேறுபாடு'களும் வேட்டைகளும் இந்த முதலாளித்துவ அமைப்புக்களுக்கிடையேயான ஆழமான நெருக்கடியையும், வடக்கு — கிழக்கு தமிழ் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களை ஒடுக்கித் தள்ளும் புதிய பிற்போக்கு நடவடிக்கைகளுக்கு ஆயத்தமாவதையும் சுட்டிக்காட்டுகின்றது.

மகேந்திரராஜா, யோகி உட்பட்ட குழுவுக்கு எதிராக முன்வைக்கப் பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள், பலியெடுப்புக்கான குற்றச்சாட்டாகும். அத்தோடு இந்தக் குற்றச்சாட்டுக்கள் வி. பிரபாகரன், அன்டன் பாலசிங்கம் உட்பட்ட முழுத் தலைமைக்கும் பொருத்தமானவை. இனவாத ஒடுக்குமுறைக்கு எதிரான தமிழ் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களின் எதிர்ப்பின் அடிப்படையில் ஆளுமையைப் பரப்பிய முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ தேசியவாத இயக்கங்கள், தமது பிற்போக்கு அரசியல் தேவைகளுக்காக இந்திரா காந்தி அரசாங்கம், எம். ஜி. இராமச்சந்திரன் — ஜெயலலிதா மாநில அரசாங்கம், மு. கருணாநிதி கும்பல் உட்பட்ட முழு இந்திய முதலாளித்துவக் கும்பல்களையும் பயன்படுத்தின. இதில் இந்திய உளவுச் சேவை உட்பட எதிர்ப்புரட்சி அமைப்புக்களை பயன்படுத்தியவற்றுள் விடுதலைப் புலிகள் இயக்கம் முக்கியமானது.

வி. பிரபாகரன் தலைமையிலான முழு விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமையும் மற்றும் தேசியவாத இயக்கங்களைப் போன்றே 1987 இந்திய—இலங்கை உடன்படிக்கைக்கும், இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை தருவிப்பதற்கும் அங்கீகாரம் வழங்கியது. விடுதலைப் புலிகள் பிரேமதாச அரசாங்கத்துடன் காதல் களியாட்டங்களில் இறங்கிய 1989—90 கொழும்பு பேச்சுவார்த்தைகளில்—மகேந்திரராஜா, யோகி, பாலசிங்கம்—ஈடுபட்டது பிரபாகரனின் பணிப்பின் பேரிலேயே ஆகும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முழுக் கொள்கையும் இன்று ஏகாதிபத்திய சக்திகளின் தலையீட்டின் மூலம் சிங்கள முதலாளி வர்க்கத்துடன் சமரசத்தில் ஈடுபடுவது அல்லது ஏகாதிபத்தியவாதிகளின் பிடியின் கீழான தனியொரு குட்டி அரசு ஆட்சியைத் திணிக்கும் வேலைத் திட்டத்தினை சார்ந்துள்ளது. இந்த இலக்கில் ஏகாதிபத்தியத்துக்கு அழைப்பு விடுக்கும் பொருட்டு விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளையும், பிரச்சாரகர்களையும் களத்தில் இறக்கியுள்ளது. இதன் பேரில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் தம்மை ஏகாதிபத்தியவாதிகளுக்கு விற்றுத்தள்ள தயாராக உள்ளனர், சுயநிர்ணய உரிமை பற்றிய சுலோகம் இன்று இந்த முதலாளித்துவ தேசியவாதத் தலைவர்களின் கைகளில் ஏகாதிபத்திய தலையீட்டுக்கு அழைப்பு விடுக்கும் ஒரு ஆயுதமாகியுள்ளது. இந்திய முதலாளித்துவ அரசாங்கம் அமெரிக்க முதலாளிகளுடன் மிகவும் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திக் கொண்டுள்ள நிலைமையில் பிரித்தானியா, மேற்கு ஐரோப்பிய நாடுகள் பக்கம் விடுதலைப்புலிகள் தலைமை திரும்பியுள்ளதோடு இரத்தம் தோய்ந்த பீஎல்ஓ--இஸ்ரேல் உடன்படிக்கையின் சிருஷ்டி கர்த்தாக்களான நோர்வே ஆட்சியாளர்களின் பிரதிநிதிகள் 'சமாதானத் திட்டத்'தினையும் முன்வைத்துள்ளனர். பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் தலைமையிலான பொதுநலவாய நாடுகளின் பொதுச் செயலாளரிடம் அத்தகைய தலையீட்டுக்கான அவசியத்தினை விடுதலைப் புலிகள் கடந்த அக்டோபரில் சுட்டிக்காட்டினர். விடுதலைப் புலிகளால் வெளியிடப்படும் "ஈழநாதம்" பத்திரிகை அந்தப் பிரித்தானிய தலையீட்டுக்கான யோக்கிய தாம்சங்களை பின்வருமாறு குறிப்பிட்டது.

"இந்நிலைமையில் பொது நலவாய சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வேண்டுகோளுக்கு பிரித்தானியா நிஜ அக்கறை காட்ட வேண்டும். பழைய காலனிகளில் முக்கிய மக்கட் பிரிவினரின் நலன்களைப் பேணும் பழைய கொள்கையை அது (பிரித்தானியா) கைவிட வேண்டும். பிரித்தானியா தனது கடந்த கால நடவடிக்கைகளால் தீய தாக்கங்களை உண்டுபண்ணிய சிறுபான்மை மக்களுக்கு மிகவும் சிறிய அளவில் தன்னும் உதவுவதற்கு முன்வர வேண்டும். அதற்குக் காரணம், அதனால் சிருஷ்டிக்கப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்கும் உடனடி தார்மீக கடமை அதற்கு இருப்பதேயாகும்". ('ஈழநாதம்' ஆசிரியத் தலையங்கம் அக்டோபர் 25 1993)

கடந்தகாலத்தில் இழைத்த தவறுகளைச் சீர்செய்யும்பேரிலாவது பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளே இன்று தலையிடுங்கள்! அதன் ஏஜன்சியாக விடுதலைப் புலிகளை நியமனம் செய்யுங்கள்! என இதன் மூலம் கேட்டுக்கொண்டுள்ளனர். விடுதலைப் புலிகள் மிலேச்ச உழைப்புச் சந்தையைத் தேடி நாட்டுக்கு நாடு பாய்ந்து கொண்டும், ஆளுக்கான் எதிரான இராணுவ முகாம்களைப் பலப்படுத்திக் கொண்டும் உள்ள ஏகாதிபத்தியவாதிகளுக்கே இந்த அழைப்பை விடுத்துள்ளனர். 'சுயபூர்த்தி பொருளாதாரம்' பற்றிய பொய் வாயடிப்புக்கள். மறுபுறத்தில் ஏகாதிபத்தியவாதிகளுடனான இந்தக் கொடுக்கல் வாங்கல்களுடன் பிணைக்கப்பட்டுள்ளது. மகேந்திரராஜா. யோகி உட்பட்ட குழுவினர் பிரபாகரன் பாலசிங்கத்துடன் பங்கிட்டுக் கொண்டிருந்தது இந்த வேலைத் திட்டத்தையேயாகும். இதை நடைமுறைக்கிடுவது தொடர்பாக மட்டுமே அவர்களிடையே வேறுபாடுகள் இருந்தன. இந்த உபாயப்பிரச்சினை இரண்டாம் தரமானது. அப்படியானால் அவர்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டை முன்வைத்து தண்டனை வழங்கும் வேட்டை இயக்கத்தின் அர்த்தம் என்ன?



தலைவர் பிரபாகரனின் கட்டளையின் பேரில் பிற்போக்கு பிரேமதாச ஆட்சியுடன் பேச்சுவார்த்தைக்கென கொழும்பு வந்திருந்த மாத்தையா, யோகி, பாலசிங்கம் குழு

சிங்கள முதலாளி வர்க்கத்தின் கொடூர இனவாத யுத்தத்தினால் ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனம் காட்டுமிராண்டி நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஏகாதிபத்தியச் சார்பு வேலைத்திட்டம், இம்மக்களை படுகுழிக்குள் தள்ளியுள்ளது. சரியாகச் சொன்னால் விடுதலைப் புலிகளின் வங்குரோத்து பிற்போக்கு வேலைத் திட்டத்தினால் யுத்தத்தின் நாசங்கள் மேலும் உக்கிரம் கண்டுள்ளன. வெளிப்படையாக அம்பலமாகாது போயினும் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களிடையே பதட்டம் வளர்ச்சி காண்பது நிச்சயம். மகேந்திரராஜா—யோகி வழக்கு எல்லாவற்றிற்கும் மேலாக இம்மக்களின் கண்களில் மண்ணை வீசி, நிஜ அரசியல், சமூக, பொருளாதார பிரச்சினைகளில் இருந்தும், விடுதலைப் புலிகளின் வங்குரோத்து பிற்போக்கு வேலைத் திட்டத்திலிருந்தும் கவனத்தைத் திருப்ப விடுதலைப் புலிகள் தலைமை செய்யும் கையாலாகாத்தனமான ஒரு முயற்சியாகும்.

வடக்கு—கிழக்கு மாகாண தமிழ் மக்கள் இனவாத யுத்தத்தின் இடைவிடாத தாக்குதலுக்கு மட்டும் பலியாகிக் கொண்டிருக்கவில்லை. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரமாண்டமான ஒடுக்குமுறை இயந்திரத்துக்கும் பலியாகிக் கொண்டுள்ளனர், பொலிஸ் படை திணிப்பும் நீதிமன்றம், தண்டனை, சிறை என்பனவும் இந்த ஒடுக்குமுறை இயந்திரத்தின் ஒரு பாகமாகும். அனைத்து அரசியல் அமைப்புக்களும் உத்தியோகபூர்வமற்ற முறையில் தடை செய்யப்பட்டுள்ளன. எந்தவொரு அமைப்பும் சரி விடுதலைப் புலிகளின் கருத்துக்கு அங்கீகாரம் அளிக்கும் விதத்தில் விடுதலைப் புலிகள் இயக்க அங்கத்தவரையோ அல்லது அங்கத்தவர்களையோ அதனுள் சேர்த்துக் கொள்ள வேண்டும். பாடசாலைகளில் கல்விப் போதனையும் வெளியீடுகளும் விடுதலைப் புலிகளின் ஆளுமைக்கு உட்பட்டுள்ளது. நெருக்கடிக்குள்ளான எந்தவொரு முதலாளித்துவ ஆட்சியையும் போலவே விடுதலைப் புலிகளுக்கும் பொதுமக்களை நசுக்கித் தள்ளுவதும் தமது பிற்போக்கு வேலைத்திட்டங்களை கொண்டு செல்வதற்கான சர்வாதிகாரம்கொண்ட ஒரு அமைப்பும் அவசியப்படுகின்றது.

## ஒரே வேலைத்திட்டம்

விடுதலைப் புலிகளின் நெருக்கடியும் புதிய வேட்டை இயக்கமும், பிற்போக்குத் திருப்பமும் அடிப்படைப் பிரச்சனைகளை முன்னணிக்குக் கொணர்ந்துள்ளது. யுத்தத்துக்கு முடிவு கட்டுவது எப்படி? இனவாத ஒடுக்குமுறையை ஒழிப்பது எப்படி? தொழிலாளர்— ஒடுக்கப்படும் மக்களின் முன்னால் உள்ள ஒரே வேலைத்திட்டம் தொழிலாளர் வர்க்கத்தின் மார்க்சிச வேலைத்திட்டமாகும்.

(6ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# சூரியகந்த புதைகுழிகளும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் பணியும்






1988—90 காலப்பகுதியில் ஜேவீபி பாசிஸ்டுகளதும் யூஎன்பி அரசாங்கத்தினதும் பயங்கர இயக்கம் கோலோச்சிய சமயத்தில் எம்பிலிபிட்டிய மத்திய மகாவித்தியாலயத்தினைச் சேர்ந்த பதினாறு மாணவர்கள் 'காணாமற் போன'தோடு, 'செவன' இராணுவ முகாமைச் சேர்ந்த பத்து இராணுவ அதிகாரிகளையும் எம்பிலிபிட்டி மகா வித்தியாலய அதிபர் தயானந்த கலப்பதியையும் ஆட்கொணர்வு மனுமீதான விசாரணையின் பேரில் 1992 நவம்பரில் பதில் தாக்கல் செய்யும்படி மேன்முறையீட்டு நீதிமன்றம் கோரியிருந்தது.

இந்த மாணவர்களின் 'காணாமற் போன' விவகாரம் தொடர்பாக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் எமது 'சகோதர ஏடான 'கம்கறு மாவத்த'வும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களிடையே பரந்த அளவிலான பிரச்சாரத்தினை முன்னெடுத்தது. இப்பிரச்சார இயக்கத்தின் தாக்கம் காரணமாக அன்றைய பிரேமதாச அரசாங்கத்தினால் நியமனம் செய்யப்பட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணைக்குழு இதன்மூலம் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாயும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தது. பொதுஜனங்களின் கண்களில் மண்ணைப் போடும் இந்த கமிசன் தொழிற்பட்ட நிலையிலும் 'காணாமற் போனோரின்' விவகாரத்தில் நெருக்கமான உறவு கொண்ட கல்லூரி அதிபரும் மற்றும் அலுகோசுகளும் சுதந்திரமாக உலாவி வந்ததோடு மக்களையும் மிரட்டி வந்தனர்: இந்நிலையில் எம்பிலிப்பிட்டிய மத்திய மகாவித்தியாலய மாணவர்கள் ம. வி. அதிபரை கைது செய்யும்படி கோரி ஊர்வலம் நடாத்தினர். இந்த பொதுஜன இயக்கம் வளர்ச்சி கண்டதையிட்டுக் கலங்கிப் போன சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ தலைவர்கள் 'குற்றவாளியான அரசியல் கைதிகளுக்கு வழக்குத் தாக்கல் செய்! குற்றம் இல்லாதோரை விடுதலை செய்! என்ற பிரச்சாரத்தில் இறங்கினர். இது அலுகோசுகளைத் காக்கும் பிரச்சாரமாய் விளங்கியது. 1988-90 பயங்கரங்களின் போது அரசாங்கத்திடம் ஆயுதம் வாங்கி உயிர்காத்த இத்துரோகிகளின் செயல் அரசியல் கைதிகளை பலியெடுக்க முதலாளித்துவ அரசுக்குள்ள உரிமையை அங்கீகரிப்பதாய் விளங்கியது. சூரியகந்தவில் கண்டு பிடிக்கப்பட்ட புதைகுழிகள் இவர்களின் பிற்போக்கு அரசியலைத் துகிலுரித்து காட்டுகிறது.

1988—90 யூஎன்பி அரச பயங்கரமும், ஜேவீபி பாசிச வெறியாட்டமும கோலோச்சிய சமயத்தில் அரச படைகளால் புதைக்கப்பட்ட சுமார் 20 மனிதர்களின் எலும்புக் கூடுகளும், உடல் பாகங்களும். உடுதுணிகளும் ஜனவரி 3ம், 8ம் திகதிகளில் எம்பிலிப்பிட்டி மஜிஸ்திரேட் திரு. பீ. ரணசிங்க முன்நிலையில் இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த சூரிய கந்தவில் அகழ்ந்தெடுக்கப்பட்டன.

சூரியகந்தவில் இதுவரை நான்கு புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டதோடு, இவற்றில் சுமார் 200 மனிதர்கள் புதைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது. இதுவரை தேடிக் கண்டுபிடிக்கப்பட்ட பௌத்த மதகுருமாரின் காவியுடைகள், இளவயதினரின் எலும்புக் கூடுகள் என்பவற்றை கொண்டு பார்க்கையில் இங்கு பல்வேறு சமூகத் தட்டையும் வயதுக் குழுக்களையும் சேர்ந்தோர் புதைக்கப்பட்டுள்ளனர் என்பது தெளிவாகியுள்ளது.

4×4 அடி அகலமும் 30 அடி ஆழமுமான ஒரு முக்கிய புதைகுழியில் இருந்து — பூமியின் மேற்பரப்பில் இருந்து 10 அடி ஆழத்தில்—எலும்புகள் மண்டையோடுகள் ஆதியன தோண்டியெடுக்கப்பட்டன. எஞ்சியுள்ள 20 அடியும் இறந்தவர்களின் சடலங்களால் நிரப்பப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. இந்தக் குழிகள் சிறிது காலத்துக்கு முன்னர் ரூபவாஹினி அலைவீச்சு சாதனங்கள் பொருத்துவதற்காகத் தோண்டப்பட்டு பின்னர் கைவிடப்பட்டதாகத் தெரிகிறது. 1989ல் பீரங்கிப் படைகள் இவ்விடத்தில் முகாமிடும் வரையும் இக்குழிகள் வெறுமனே கிடந்தன.

இழைக் கயிறு, சம்பாத்து லேஸ் போன்றவற்றால் மனிதர்களின் கைகால்கள் கட்டப்பட்ட அடையாளங்களுடன் கூடிய எலும்புகளும், துணிகளால் வாய் கட்டப்பட்ட அடையாளங்கள் கொண்ட மண்டையோடுகளும் இக் குழிகளில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு இறந்தவர்கள் பாவித்ததாகக் கருதப்படும் பல சாரங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதில் பலர் இவ்விடத்தில் வைத்து பிடரியில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்பதை தலையில் கட்டப்பட்டிருந்த துணியிலும் நிலத்திலும் படிந்துள்ள இரத்தக் கறைகள் சுட்டிக் காட்டுகின்றது.

ஜனவரி 8ம் திகதிய அகழ்வுகளின் போது சிறப்பு அடையாளங்களைக் கொண்ட இரண்டு மண்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. முதலாவதன் முகத்தில் மேற்பாகத்தில் இடது புறமாக பல்வரிசை துலாம்பரமாக தெரிகிறது. இரண்டாவது: குத்திக் கொண்டு நிற்கும் விதத்தில் தலைமயிரைக் கொண்ட ஒருவரின் மேல் முரசில் ஒரு பல் இல்லாததோடு அதற்குப் பதிலாகக் கட்டப்பட்டதென எண்ணக்கூடிய ஒரு செயற்கைப் பல்லும் அதன் அருகில் காணப்பட்டது.

இந்த உடல் சிதைவுகள் ஜனவரி 10ம் திகதி எம்பிலிப்பிட்டிய மஜிஸ்திரேட் நீதி மன்றத்தில் அடையாளம் காணும் பொருட்டு மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டன. இதில் நாம் முதலாவதாகக் குறிப்பிட்டது கெட்டகல்யார கனிஷ்ட மகாவித்தியாலய மாணவனும், மாணவர் தலைவனுமான லலித் உபசாந்தவினது என எம்பிலிபிட்டி ஹிங்குரகூரவைச் சேர்ந்த ஆர். பியசேனவும், கே. ஜீ. குசுமாவதியும் (பெற்றோர்) அடையாளம் கண்டனர்.

1989 செப்டம்பர் 6ம் திகதி தமது மகன் கடத்திச் செல்லப்பட்டதாக அவர்கள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். மேல் முரசில் செயற்கைப் பல்லைக் கொண்ட இரண்டாவது, அனில் விக்கிரமசிங்க என்ற தமது சகோதரன் எனவும், அவர் கடந்த பயங்கர ஆட்சி காலத்தில் அரச படைகளால் கடத்திச் செல்லப்பட்டதாயும் பனாமுரேயைச் சேர்ந்த சித்தா விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அங்கு கண்டெடுக்கப்பட்ட பத்திக் சாரம் உடுகம மகாவித்தியாலய 17 வயது மாணவனான ரஞ்சித் ஜயவிக்கிரம அணிந்திருந்த சாரத்துக்கு சமானமானதென அவரின் தாயார் ஆர் கே. குணவதி குறிப்பிட்டார். நாகபாலகே நாலஹாமி என்ற தாய் அங்கு கிடந்த டியூரோ சாரம் தனது மகன் எஸ். பீ. குணதிலக அணிந்திருந்தது என்றந்த சாட்சி கூறினார். இங்கு பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த ஒரு சாரம் ஊராட்சி படையினராயும் யூஎன்பி ஆதரவாளராயும் விளங்கிய சமயத்தில் ஜேவீபியினால் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்ட தமது கணவருடையது எனக் கூறி ஒலமிட்டதோடு 'அதில் ஒருவனை எனக்குத் தெரியும். அதைக் கண்டால் கடித்தெறிவேன்' என பெரும் கூச்சலிட்டு அவர் சபதம் போட்டார்.

அரசாங்கத்தின் ஊதுகுழலான 'தினமின' பத்திரிகை இந்த இறுதிச் சம்பவத்தை தனது மூதற் பக்கத்தில் தலைப்புச் செய்தியாகப் போட்டு பின்வருமாறு, குறிப்பிட்டது: ''ஜேவீபியால் கடத்திச் செல்லப்பட்ட கணவரின் சாரத்தை பனாமுரே விதவை இனங்கண்டார்''. ''எம்பிலிப்பிட்டிய மாணவர்களின் எலும்புக் கூடுகள் சூரியகந்தவில் அகப்படவில்லை'' என்றது. இந்தப் படுகொலைகளுக்கு யூஎன்பி அரசாங்கமோ அல்லது அரச படைகளோ தொடர்பில்லை என உறுதி செய்வதே இவற்றின் இலக்காகும். இதைப் புரிந்து கொள்வது கடினம் அல்ல.

அரசாங்கத்தின் இந்தப் பிரச்சாரங்களுக்கான நிலைமையைச் சிருஷ்டிக்கும் முயற்சிகள் ஏனைய முதலாளித்துவப் பத்திரிகைகளுடன் கூட்டாகச் செய்யப்பட்டவை என்பது தெளிவாகியுள்ளது. 'லங்காதீப' 'திவயின' 'த ஐலன்ட்' பத்திரிகைகளில் இந்தச் சூரியகந்த பற்றிய செய்திகளும் படங்களும் 'அவசரகால அதிகாரி'யினால் வெட்டித்தள்ளப்பட்டதாகத் தெரிகிறது. இதன்படி ஜனவரி 5ம் திகதிய 'லங்காதீப' பத்திரிகையின் 30,000 பிரதிகள் விற்பனையாவது தவிர்க்கப்பட்டது. இதற்குக் காரணம், சூரியகந்த செய்தி முதற்பக்கத் தலைப்புச் செய்தியாக வெளிவந்ததோடு அது பற்றிய பெருமளவிலான படங்களும் பிரசுரமாகியதே.

## 'சுதந்திர' பத்திரிகைகளின் செயற்பாடு

இன்று பிரசித்தமாகியுள்ளது போல் இந்தச் செய்தித் தணிக்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் வேண்டுகோளின்படி பத்திரியையாளர்களால் கடைப்பிடிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இன்று இந்த 'சுதந்திர' பத்திரிகையாளர்கள் இவ்விடயத்தையிட்டு முழு மௌனம் சாதிக்கின்றனர். இது அரசாங்கத்தை திருப்திப்படுத்த நனவான முறையில் செய்யப்பட்ட ஒரு நடவடிக்கையாகும்; இச்சம்பவத்திற்கு நிஜ வெளிச்சம் போட்டுக் காட்ட முன்னணியில் நின்றது எமது சகோதரப் பத்திரிகையான 'கம்கறு மாவத்த' மட்டுமே. 1994 ஜனவரி 7ம் திகதிய 'கம்கறு மாவத்த', ''யூஎன்பி கொலை செய்த இளைஞர்களின் பிரேத குழிகளுக்கு அருகே சி.ல.சு.க. முதலைக் கண்ணீர் வடிக்கிறது'' என்ற முதற்பக்கத் தலைப்புச் செய்தியுடன் வெளிவந்தது.


அரச படைகளதும், பொலிசாரதும் குண்டர் படைகளதும் 1988—90 காலப் பகுதியில் ஒரு இலட்சம் கிராமப்புற ஒடுக்கப்படும் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இச்சமயத்தில் சூரிய கந்தவில் இருந்த பீரங்கிப் படை முகாமுக்கு அருகேயும், சுற்றிலும் உள்ள பகுதிகளில் இருந்து ஆட்கள் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டனர். இது ஒரு சித்திரவதை கூடமாகச் செயற்பட்டுள்ளது, இந்த முகாமுக்கு அருகேயுள்ள சூரியகந்த கிராமத்தைச் சேர்ந்தவரும் நான்கு குழந்தைகளின் தந்தையுமான ஒருவர் இந்தச் சித்திரவதைகளுக்கு ஆட்பட்டபோதிலும் உயிராபத்தில் இருந்து தப்பிக் கொண்டார், 1989ல் கடத்திச் செல்லப்பட்ட இவரின் தலையில் முட்கம்பி சுருள்வளையம் வைத்து தாக்கப்பட்டார். இத்தனை அட்டூழியங்களையும் சித்திரவதைகளையும் செய்து முடிந்ததன் பின்னர், அவற்றை அனுபவித்து உணரும்படி கட்டளை பிறப்பித்து வந்தார்களாம். அவரின் ஆண் விதைகள் நொருக்கப்பட்டதன் காரணமாக அவர் காலி பெரியாஸ்பத்திரியில் தங்கி சிகிச்சை பெற நேரிட்டது. இப்போது ஜனாதிபதியை மானபங்கம் செய்தமை, அரச விரோத சுவரொட்டிகளை காட்சிக்கு வைத்தமை என்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் அவருக்கு எதிராக வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவருடன் சேர்ந்து கைது செய்யப்பட்ட ஹென்றி பத்திரான என்ற பிரதேச பொது வைத்தியர் பற்றிய தகவலும் கடந்த 8ம் திகதி சூரியகந்த அகழ்வுகளில் அகப்படலாம் என்ற நம்பிக்கையில் அந்த வைத்தியரின் மனைவி நாளணி சேனநாயக்காவும் அவரின் சகோதரரும் நாள் பூராவும் அங்கு நின்றிருந்ததை காணக் கூடியதாய் இருந்தது.

கொலன்ன, முல்ஆண்டியாவல, பனாமுரே உடவளவை, குட்டிக்கல முதலான அயல் பகுதிகளில் இருந்த இராணுவ முகாம்களால் கைது செய்யப்பட்டவர்கள் இங்கு கொணரப்பட்டு நாசமாக்கப்பட்டிருக்கலாம் என்ற நம்பிக்கையில் ஆயிரமாயிரம் மக்கள் இந்த புதைகுழிகளைப் பார்வையிட வந்திருந்தனர். பல மைல்களுக்கு அப்பால் இருந்து பாதுகாப்புடன் ஆயிரமாயிரம் மக்கள் வந்து குவிவதைப் பொலிசார் தடைசெய்தனர்.

சூரியகந்த உச்சிக்குத் திரும்பும் சந்தி கடஉச்சி என அழைக்கப்படுகின்றது. சடலங்கள் புதைக்கப்பட்டுள்ள இடத்துக்கு அதிலிருந்து 3 கி. மீட்டர் தூரம். அவ்விடம் கடல்மட்டத்தில் இருந்து 4400 அடி உயரம். சந்தியில் இருந்து 2000 அடி உயரம் அங்கு எதுவிதமான மனித சஞ்சாரமும் கிடையாது. மலை உச்சிக்குச் செல்லுகையில் தென்புறமாக சிங்கராஜா காடு உள்ளது. மனித சடலங்கள் புதைக்கப்பட்டுள்ள பகுதியில் — மலை உச்சியில் நிறுவப்பட்டுள்ள டெலிகொம் நிறுவன ஊழியர்களும், பொலிஸ் காவல் நிலைய படையாட்களும் அதிகாரிகளுமே உள்ளனர். இதற்கு மேலதிகமாக இப்போது 500 கலகம் அடக்கும் பொலிஸ்படை அங்கு நிறுத்தப்பட்டுள்ளது. அங்கு வருகை தந்த சாதாரண மக்களை மட்டுமன்றி வழக்கறிஞர்கள்,வெகுஜனத் தொடர்புச் சாதனத்தினரைக் கூட பயமுறுத்தி கலைத்துவிரட்ட இப்பொலிசார் முயன்று கொண்டிருந்தனர். 16739ம் இலக்க பொலிஸ் படையாள் கூடியிருந்தோரை 'நீங்க இங்கு திரும்பவும் ஆட வந்தால் உங்களுக்கும் இதுதான் நடக்கும். அக்காலத்தில் பாயுக்கு கீழே நுழைந்து கொண்டு கிடந்த ஆட்கள், பொலிசுக்கும் இராணுவத்துக்கும் முன்னால் விழுந்து விழுந்து வணங்கி வயிறுவளர்த்த அவர்கள் இப்போது எலும்பு பார்க்க வரு

படிப்பகம்

# சூரியகந்த புதைகுழிகளும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் பணியும்




அனில் விக்கிரம சிங்கவினது தலையென அவரின் சகோதரியால் அடையாளங் கானப்பட்டது. அதில் அவரின் மேல் வாய் பல்லுக்கு பதிலாக செயற்கைப் பல் கட்டப்பட்டிருந்தது.

கிறார்கள்'' அத்தோடு இறக்குவானை முதல் சூரியகந்த ஊடாகச் செல்லும் பிரதான பாதையின் போக்குவரத்தும் பொலிசாரினால் தடை செய்யப்பட்டிருந்தது.

ஜனவரி 8ம் திகதி இரத்தினபுரி–எம்பிலிபிட்டிய வீதியில் மாதம்பை சந்தியிலும் இன்றும் சில இடங்களிலும் இந்த புதைகுழிகளில் இருந்து தோண்டி எடுக்கப்பட்ட ஏழு எலும்புக் கூடுகளைக் காடையர்கள் வீசிச் சென்றிருந்தனர். அத்தோடு பாதுகாபபு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டு, பொலிஸ் பாதுகாப்பில் இருந்த புதைகுழிகளின் மீதும் எலும்புக் கூடுகள் போடப்பட்டிருந்தன. இந்தப் பயங்கரங்கள் சூரியகந்த தைகுழி களின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்தவர்களின் ஒத்துழைப்புடன் செய்யப்பட்டது என்பதில் சந்தேகம் கிடையாது. அத்தோடு ஜனவரி 10ம் திகதி எம்பிலிப்பிட்டிய நீதிமன்றத்தில் இடம்பெற்ற எலும்புக் கூடுகளை அடையாளம் காணும் சமயத்தில் முறைப்பாட்டாளர்களின் தலைமை வழக்கறிஞராகக் கலந்துகொண்டுவிட்டு கொழும்பு திரும்பிக் கொண்டிருந்த திரு. பிரேமரத்ன, கொடகவெல பகுதியில் ஒழிந்திருந்த காடையர்களின் துப்பாக்கித் தாக்குதலுக்கு இலக்கானார். 41 சிறி 41 இலக்க காருக்கு சேதம் ஏற்பட்ட போதிலும் அவர் உயிர் பிழைத்தார். இந்நிலையிலேயே இலங்கைப் பொலிசாரும் இரகசியப் பொலிசாரும் சூரியகந்த உச்சி ஆய்வுகளில் ஈடுபட்டிருந்தனர். இதற்குத் துணைபோன முக்கிய பகுதியினர் சி.ல.சு.க. தலைவர்களும் அவர்களின் ஆதரவாளர்களுமே.

இச்சம்பவம் காரணமாக அரசாங்கம் செல்வாக்கிழந்து போகுமா என்பதை ஆய்ந்து பார்க்கும் பொருட்டு இரகசியப் பொலிசாரை முன்கூட்டியே ஈடுபடுத்தியிருந்தது. அதன் பேரில் இரகசிய பொலிஸ் சுப்பிரின்டனின் தலைமையில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் மகேஷ் பெரேரா கொலன்ன பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உபதிஸ்ஸ பண்டார ஆகியோர் ஈடுபட்டிருந்தனர். இதற்காக ஐந்து சிறப்பு ஆய்வுக் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வா தெரிவித்துள்ளார். இவையெல்லாம் அரச ஒடுக்குமுறையைப் பாதுகாக்கவும், தொடர்ந்து நடாத்தவும் ஆளும் வர்க்கம் தமது அரச பலத்தை எந்தவிதத்தில் பாவித்துக் கொண்டுள்ளது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. ஒடுக்கு முறையினால் நலிந்து போயுள்ள இலட்சோப லட்சம் ஒடுக்கப்படும் மக்களுக்கு நீதி இந்த அரச பட்டறை ஊடாக இட்டு நிரப்பப்படமாட்டாது என்பது மீண்டும் ஒரு முறை அம்பலமாகியுள்ளது. எவ்வளவுதான் நெருக்குவாரம் கொடுத்தாலும் நெருக்கடியில் தலைமூழ்கிப் போயுள்ள இந்த முதலாளித்துவ அரசினை ஜனநாயக வழிக்குக் கொண்டு வரவே முடியாது என்பதை நாம் எப்போதும் சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

சூரியகந்த புதைகுழிகள் பற்றிய செய்திகளை 1993 டிசம்பர் 12ம் திகதிய 'ராவய' பத்திரிகை வெளியிட்டது. இந்த ஜனவரி 9ம் திகதி அதைப்பற்றி 'ராவய' கூறியதாவது: ''அத்தோடு எம்பிலிபிட்டியாவில் காணாமல் போன பாடசாலை மாணவர்களின் பெற்றோர் அமைப்பின் செயலாளர் எஸ்.எம். சந்திரபால த சில்வா, டிசம்பர் 12ம் திகதி 'ராவய'வின் அம்பலமாக்கல் பற்றி குறிப்பிடுகையில் சூரியகந்தவில் அந்தரங்கமாக புதைக்கப்பட்ட சடலங்களைத் தோண்டியெடுக்க நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதி, பிரதமர் உட்பட்ட அரசின் பொறுப்பு வாய்ந்தவர்களிடம் கேட்டுக் கொண்டார், அதன்படி அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்தவர்கள் ஏதேனும் ஒரு நடவடிக்கை எடுப்பார்கள் என 'ராவய' மூன்று கிழமைகளாகப் பொறுமையுடன் பார்த்திருந்தது. அரசு நடவடிக்கை எடுப்பதில் காட்டும் அசிரத்தை, உதாசீனத்தின் முன்னால் புதைகுழிகள் நிரந்தரமாக மூழ்ண்டு போவதை தடுக்கும் பொருட்டு எதிர்க்கட்சியின் உதவியை



சறுத்த வரிக் களிசனால் வாய் கட்டப்பட்டிருந்த தலை

நாட 'ராவய'வுக்கு நேரிட்டது.'' இதன்படியே சி.ல.சு.க.சந்திரிக்கா குமாரதுங்க தலைமையிலான குழு தலையிட்டது

'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் அல்லது பொடி அத்துல 1971 ஏப்ரல் கிளர்ச்சி ஜேவீபி தலைவராக இருந்தவர். அதன் மூலம் எண்ணுக்கணக்கற்ற தமது சகாக்களையும் மற்றும் இளைஞர்களையும் கொன்று தள்ளியதும், தாம் உட்பட ஆயிரக்கணக்கானோரை சித்திரவதை கூடங்களில் தள்ளியதுமான சி. ல, சு. க. வின் ஆலோசகராக இன்று ஐவன் மாறியுள்ளார். அவர்களின் குட்டி முதலாளித்துவ சந்தர்ப்பவாத அரசியலின் எதிர்ப்புரட்சித் தன்மையை அம்பலப்படுத்தி அதன் தர்க்கரீதியான எல்லையை நோக்கி விக்டர் ஐவன் உட்பட்ட துரோகிகள் சென்றுள்ளனர் என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

அவ்வாறே எம்பிலிபிட்டியவில் காணாமல் போன பாடசாலை மாணவரின் பெற்றோர் அமைப்பானது இலட்சக் கணக்கில் இளைஞர்களைக் கொன்று தள்ளிய யூஎன்பி அரசாங்கத்தின் ஜனாதிபதி விஜேதுங்க உட்பட்ட அமைச்சர்கள், நானாவித ஏகாதிபத்திய ஏஜன்சிகள், எதிர்க்கட்சி, 'ராவய' போன்ற குட்டி முதலாளித்துவ ஏஜன்சிகளின் பின்னால் இழுபட்டுச் செல்வதன் மூலம் இந்த கொலைகளுக்கான நிஜ நிலமைகளை மூடி மழுப்புவதோடு பிற்போக்காளர்களுக்கு இன்னுமொரு தடவை அத்தகைய நிலைமைக்கு வாய்ப்பும் வழங்குகின்றனர். அனைத்து தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களும் இந்த ஆபத்தினை நன்கு மனதில் பதித்தாக வேண்டும்.

இன்று 'ராவய' தூக்கிப் பிடித்துக் கொண்டாடும் சி.ல.சு.க. 1971 இளைஞர் படுகொலைகளைச் செய்த 23 ஆண்டுகள் கடந்த அவசரகாலச் சட்ட ஆட்சியைக் கொணர்ந்ததோடு 1988—90ல் அந்த சட்டங்களுக்கு மேலும் விசப் பற்கள் பொருத்த யூஎன்பி அரசாங்கத்துடன் அணிதிரண்டனர். சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ தலைவர்களுடனும் மற்றும் இனவாதிகளுடனும் சேர்ந்து யூஎன்பியின் இந்தக் கொலைகார இயக்கத்துக்கு ஆதரவளித்த இவர்கள் யூஎன்பி அரசாங்கத்தின் கொலைகார இராணுவத்தின் பாதுகாப்பைப் பெற்றுக்கொண்டனர். அத்தோடு அரசாங்கச் செலவில் ஆயுதம் தாங்கிய தனிப்பட்ட பாதுகாவலர்களையும் பெற்றுக் கொண்டு தமது உயிரைக் காத்தனர்.

ஒரு இலட்சம் இளைஞர் படுகொலைகளின் பின்னர் அந்த கொலைகளின் பேரில் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களிடையே வளர்ச்சி கண்ட ஆத்திரத்தை துடைத்தெறிய இந்த பிற்போக்காளர்கள் தம்மால் முடிந்ததையெல்லாம் செய்தனர். இந்தப் பிற்போக்கு இயக்கத்துக்கு அன்று தலைமை தாங்கிய சி.ல.சு.க. தேசிய அமைப்பாளர் அநுர பண்டாரநாயக்க இன்று யூஎன்பி அரசாங்கத்தின் உயர் கல்வி அமைச்சராகியுள்ளார். சிறப்பாக நவசமசமாஜக் கட்சியும் 'ராவய' கும்பலும் 'இந்த படுகொலைகளுக்கு எதிரான ஈவிரக்கமற்ற போராளி' என வருணித்த பேர்வழி இன்று யூஎன்பி அமைச்சராகியுள்ளதை நோக்குகையில் இக்கும்பல்களின் அரசியலின் பிற்போக்குத் தன்மை நன்கு அம்பலமாகிறது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஆரம்பம் தொட்டு அனைத்துலகத் தொழிலாளர் இயக்கத்திலுள் சுயாதீன தொழிலாளர் விசாரணைக்கான பிரச்சாரத்தினை முன்னெடுப்பதன் மூலமே அரசின் கொலைகார இயக்கத்தின் நிஜ நிலைமைகளைக் கண்டறியவும் அம்பலப்படுத்தவும் முடியும் எனச் சுட்டிக் காட்டி வந்தது. கிராமப்புற ஏழைகள் இலங்கை—தமிழீழம் தொழிலாளர் வர்க்கம் பக்கம் திரும்புவதன் அவசியத்தினை புகக வலியுறுத்தி வந்தது. எம்பிலிப்பிட்டி மாணவர் கொலையில் சம்பந்தப்பட்ட கொலைகாரரின் விபரங்களை முதலாளித்துவப் பத்திரிகைகள் மூடிமறைத்து வந்த வேளையில் அம்முயற்சிகளை தோற்கடிக்கும் விதத்தில் அத்தகவல்களை பு. க. க. பத்திரிகையும் அதன் சகோதர அனைத்துலகப் பத்திரிகைகளும் முன்னுரிமை கொடுத்து பிரசுரித்தன. யூஎன்பி அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ள அனைத்து தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களும். இளைஞர்களும் இந்த பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்தினை வளர்த்தெடுக்க முன்னணியில் நிற்பதன் அவசியத்தை சூரியகந்த கொலைகள் மீண்டும் சுட்டிக்காட்டுகின்றன.

www.padippakam.com



## அமெரிக்கா:

# டெட்ரொயிட் தீ வழக்கில் பெற்றோர் விடுதலை

பெப்ரவரி 17ம் திகதி டெட்ரொயிட்டில் இடம்பெற்ற தீப்பிடிப்பில் கொல்லப்பட்ட ஏழு குழந்தைகளின் பெற்றோரான லிரோய் லியோனசுக்கும், ஷெரிஷ்வில்லியம்சுக்கும் எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அவர்கள்சகல குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுதலை செய்யப்பட்டனர். அக்டோபர் 28ம் திகதி நடைபெற்ற மூன்று மணித்தியால ஜூரர் விசாரணையின் பின்பு இத்திர்ப்பு வழங்கப்பட்டது.

வறுமையின் கோரத் தாண்டவத்தினால் ஏற்பட்ட இந்த மரணங்களுக்கு ஏழைப் பெற்றோரை பலிக்கடாக்களாக்கவும் ஏழு குற்றச்சாட்டுக்களின் பேரில் — குற்றம் நிரூபிக்கப்படுமிடத்து ஒவ்வொரு குற்றச்சாட்டின் பேரிலும் தலா 15 ஆண்டு சிறைக்குள் தள்ளவும் அமெரிக்க ஆளும் வர்க்கம் எடுத்த முயற்சிக்கு ஜூரர்களின் திர்ப்பு ஒரு பலத்த அடியாகும்.

ஜூரர்களின் தலைவி அவர்களை குற்றச்சாட்டில் இருந்து விடுதலை செய்யும் திர்ப்பை வழங்கியதன் பின்னர் லியோன்சும் வில்லியம்சும் ஆரத் தழுவியதோடு தமது சட்டத்தரணிகள், குடும்பத்தினர். ஆதரவாளர்களுடன் சேர்ந்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் லியோன்ஸ் கூறியதாவது:-

''இந் நடவடிக்கை எனக்கும் எனது மனைவிக்கும் ஒரு அவமானம். நாம் சிறந்த பெற்றோர். எமது நிலைப்பாடு ருசுப்படுத்தப் பட்டுள்ளது. இது முற்றுப்பெற்றதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். நாம் எமது குழந்தைகளை நேசித்தோம். நாம் செய்யக்கூடிய அனைத்தையும் செய்தோம்'' எனச் சுருக்கமாகக் குறிப்பிட்டார்.



பிரஜைகள் விசாரணைக்குழு தலைவர் லறி றொபேட்ஸ்

இந்த வழக்குத் திர்ப்பு அமெரிக்க ட்ரொட்ஸ்கிசக் கட்சியான வேர்க்கஸ் லீக்குக்கும், மக் அவனியூ தீ பற்றிய விசாரணை நடாத்திய பிரஜைகள் விசாரணைக் குழுவுக்கும் ஒரு வெற்றி. இப் பிரச்சாரத்தின் மூலம் இந்த ஏழைப்பெற்றோருக்கு எதிரான வேட்டையை வேர்க்கஸ் லீக் எதிர்த்ததோடு தீயுக்குக் காரணமாக விளங்கிய வறுமையினதும், வேலையின்மையினதும் சமூக நிலைமையை பொதுஜனத்தின் கவனத்துக்குக் கொணர்ந்தது.

ஜூரர்கள் தெரிவு ஆரம்பமான அக்டோபர் 21ம் திகதி பிரஜைகள் விசாரணைக் கமிட்டி தலைவரான லறி றொபேட்ஸ் இந்தப் பெற்றோருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை கைவிடும்படி கோரும் 5000 பேரின் ஒப்பங்களைக் கொண்ட ஒரு பெட்டிசத்தை கையளித்தார். இந்த வழக்கு விசாரணை இடம்பெறும் அரசியல் சூழலைப் பற்றி நீதிபதி மைக்கல் ரல்பொட் கூர்மையாக அறிவார். ஜூரர்கள் தெரிவு இடம்பெற்ற சமயத்தில் தெரிவுசெய்யச் சாத்தியமான ஜூரர்கள் ஒவ்வொருவரும் வேர்க்கஸ் லீக்கினாலும் பிரஜைஜகள் விசாரணைக் குழுவினாலும் விநியோகிக்கப்பட்ட பெட்டிசத்தில் கையொப்பமிட்டார்களா எனக் கேட்கப்பட வேண்டும் என அவர் வேண்டினார்.

டெட்ரொயிட் மக் அவனியூ 2258ம் இலக்க வீட்டில் தீப்பிடித்து ஏழு குழந்தைகளும் கொல்லப்பட்டதில் இருந்து நகர அதிகாரிகளும் முதலாளித்துவப் பத்திரிகைகளும் இத் தீ இடம் பெற்ற வேளையில் பெற்றோர் வீட்டில் இருக்கவில்லை என்ற விடயத்துக்கு பொதுமக்களின் கவனத்தை ஈர்ப்பதிலேயே ஈடுபட்டிருந்தனர். டெட்ரொயிட் நகர சபையின் உதவி வழக்குத் தொடுநரான நான்ஸி பீகேல், பெற்றொர் வீட்டில் இல்லாதது முழுக் கவலையீனம் என்ற விதத்தில் வழக்கை நடாத்தினார். இப் பொய்ப் பிரச்சாரங்களுக்கு இடையேயும் சமூக நிலைமையே இந்த துயரச் சம்பவத்துக்கான அடிப்படைக் காரணம் என்பது நிரூபிக்கப்பட்டது.

டெட்ரொயிட் நீர் விநியோகப் பகுதி ஊழியர் சாட்சியமளிக்கையில் 225 டாலர் பாக்கியாக இருந்ததன் பேரில் முன்னறிவித்தல் இல்லாமல் தண்ணீர் பெப்ரவரி 27ம் திகதி துண்டிக்கப்பட்டதெனத் தெரிவித்தார். இந்தத் துண்டிப்பைப் பற்றி அறிந்திராத லியோன்ஸ் பைப் உருகிப் போய்விட்டதென நினைத்து பேப்பரில் தயாரித்த வெளிச்சம் மூலம் குழாயை உருக்க முயன்றுள்ளார் இந்த தோல்விகண்ட முயற்சியினாலேயே நெருப்புப் பிடித்தது என டெட்ரொயிட் தீயணைப்பு படை அதிகாரி லெப்டினன்ட் கோரின் பிரென்டிஸ் சாட்சியமளிக்கையில் கூறினார்.

இந்த விசாரணையில் சாட்சியமளித்தவேறு இருவர்இத்தீ இடம்பெற்ற வேளையில்தாம் லியோன், வில்லியத்துடன் கழிவு உலோகப் பொருட்கள் பொறுக்கச் சென்றிருந்ததாக தெரிவித்தனர். இந்தச் சுற்று வட்டாரத்தில் உள்ளவர்கள் கழிவு உருக்கு, செம்புப் பொருட்கள் தேடுவது வழக்கம் எனவும் அவற்றை ஒரு இறாத்தல் 40 சதத்துக்கு விற்பனை செய்ய முடியும் எனவும் தெரிவித்தார். இந்த கழிவு உருக்குப் பொருட்கள் தேடி லியோன்சும் வில்லியம்சும் சென்ற வேளையிலேயே இத் திப்பற்றி ஏழு குழந்தைகளும் பலியாகி யுள்ளனர்.

ஜூரர்களில் பெரும்பான்மையினர் தொழிலாளர் வர்க்கத்தினரைக் கொண்டவர்களாக விளங்கினர். ஏழு கறுப்பின பெண்களும் நான்கு கறுப்பின ஆண்களும், பெண் வெள்ளையர் ஒருவரும் இதில் அடங்குவர். பெற்றோர் பெரிதும் அவலப்பட்டுள்ளார்கள் என பல ஜூரர்கள் தெரிவித்தனர். தமது குழந்தைகளுக்கு ஏதும் தீங்கிழைக்க அவர்கள் எண்ணியதற்கு எதுவிதமான சாட்சியும் இல்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

'தொழிலாள வர்க்கத்துக்கு ஒரு வெற்றி' என்ற தலைப்பில் இந்த திர்ப்பு பற்றி ஆசிரியத் தலையங்கம் தீட்டிய அமெரிக்க ட்ரொட்ஸ்கிச இதழான 'இன்டர்நஷனல் வேர்க்கஸ் புலட்டின்பின்வருமறுகுறிப்பிட்டது: ''ஜூரர்கள் தீர்ப்புக்கு ஒரு பரந்த அரசியல் அர்த்தம் உண்டு. தொழிலாளர்கள் தமது தொழில், வாழ்க்கைத்தரம், ஜனநாயக உரிமைகளை காக்க ஒரு அரசியல் இயக்கத்துக்கு தயார் என்பதை இது சுட்டிக்காட்டுகின்றது. அவர்கள் ஒரு அடிப்படையான மாற்றத்தை வேண்டிநிற்கின்றனர். அத்தோடு அவர்கள் புரட்சிகர மார்க்சிச கட்சியினால் எடுக்கப்பட்ட அரசியல் ஆரம்பிப்பில் அக்கறை காட்டியுள்ளனர்... 'வேர்க்கஸ் லீக்' தொழிலாள வர்க்கத்தின் அரசியல் நனவை உயர்த்தும் தனது நடவடிக்கையை உக்கிரமாக்கும். முதலாளித்துவ அமைப்புக்கு எதிரான ஒரு சுயாதீனமான அரசியல் போராட்டத்தின் மூலம் மட்டுமே தொழிலாளர்களை விழிப்படையச் செய்ய முடியும்'' என்றது.

# ஜேர்மன் அரசாங்கம் குர்திஷ் இயக்கங்களுக்கு தடை

ஜேர்மனியில் இயங்கி வந்த 35 குர்திஷ் இயக்கங்களுக்கு அந்நாட்டு உள்நாட்டு அமைச்சர் மன்பிரெட் கன்தர் விதித்துள்ள தடை, ஜனநாயக உரிமைகளுக்கு எதிரான ஒரு பெரும் தாக்குதலாகும். அது ஜேர்மனியில் வதியும் குர்திஷ் தொழிலாளர்களுக்கு மட்டுமன்றி முழுத் தொழிலாள வர்க்கத்துக்கும் எதிராகத் தொடுக்கப்பட்டுள்ளதாக்குதலாகும். தொழிலாளர் வர்க்கம் இதனை வன்மையாக எதிர்க்க வேண்டும்.

கன்தரின் இந்தத் தடை உத்தரவுடன் நூற்றுக் கணக்கான பொலிசார் குர்திஷ் அமைப்புக்களின் அலுவலர்களதும் அங்கத்தவர்களதும் வீடுகளைச் சோதனையிடுவதில் ஈடுபட்டனர். அவர்கள் சொத்துக்களையும், அரசியல தஸ்தாவேசுக்களையும், பத்திரிகைகளையும் பறிமுதல் செய்துள்ளனர். குர்திஷ் தொழிலாளர் கட்சி (PKK) உத்தியோக பூர்வமாக ஜேர்மனியின் உள்ளே இயங்காததால் அது இந்த தடை செய்யப்பட்ட அமைப்புக்களின் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. குர்திஸ்தான் யுத்தம் பற்றிய செய்திகளையும் கலாச்சாரம் பற்றிய கட்டுரைகளையும் குர்திஷ் மொழியில் வெளியிட்டு வந்த அமைப்பே தடைக்கு இலக்காகியுள்ளது.

தடைசெய்யப்பட்ட அமைப்புக்கள் சட்டத்தை மீறி 'அனைத்துலக கருத்து நிலைப்பாட்டுக்கு' எதிராக தொழிற்பட்டு வருவதால் ஜேர்மனியின் உள்ளே பொதுமக்களின் பாதுகாப்புக்கும், உள்நாட்டுப் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக இருப்பதாக கன்தர் குறிப்பிட்டுள்ளார். எனினும் இந்தச் சாட்டுக்களை நிரூபிக்கும் எந்தவொரு சாட்சியையும் அவர் சமர்ப்பிக்கவில்லை.

நவம்பர் 4ம் திகதி ஜேர்மனியினுள் துருக்கி சொத்துக்கள் மீதான தாக்குதல் துருக்கிக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கைகளை தூக்கிப் பிடித்துக் காட்ட அவர் முயன்ற போதிலும் பி.கே.கே. யோ (அது இத்தாக்குதலில் சம்பந்தப்படவில்லை என அறிவித்துள்ளது) அல்லது ஏனைய தடைசெய்யப்பட்ட இயக்கங்களோ இந்தத் தாக்குதல்களில் சம்பந்தப்பட்டன என்பதை நிரூபிக்கும் சாட்சிகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை. நவம்பர் 4ம் திகதிய தாக்குதலை ஜேர்மன் அரசாங்கம், துருக்கிய அரசாங்கம் குர்திஷ்களை நசுக்க நடாத்தி வரும் இயக்கத்துக்கு ஆதரவளிக்கும் விதத்தில் பாவித்துள்ளது. குர்திஷ் கட்சிகளின் தடையைப் பற்றி துருக்கிய பிரதமர் சிலருக்கு அறிவிக்கும் பொருட்டு ஜேர்மன் இரகசிய பொலிஸ் அதிபர் வர்தேபால் அங்காரா சென்றுள்ளார்.

குர்திஷ் இயக்கங்களின் மீதான தடையை குர்திஷ் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறை இயக்கத்துக்கு ஜேர்மன் அரசாங்கத்திடமிருந்து கிடைத்த நிபந்தனையற்ற ஆதரவாக துருக்கி அரசாங்கம் கணிக்கிறது. துருக்கித் தொலைக் காட்சியில் தோன்றிய பிரதமர் சிலர் 'பீகேகேயின் பயங்கரவாத தன்மையைப் பற்றி அனைத்துலகப் பொதுசன அபிப்பிராயத்தை உண்டுபண்ணுவதில் தமது அரசாங்கம் வெற்றிகண்டுள்ளதாகத் தெரிவித்தார். அத்தோடு இந்த ஜேர்மன் தடை அறிவித்தல், வானொலி ஒலி பரப்புக்களை இடைநிறுத்தி அறிவிக்கப்பட்டது.

பீகேகேயின் கொள்கைகளை நிராகரிக்கும் குர்திஷ் அமைப்புக்களும் துருக்கி அரசாங்கத்தின் ஒடுக்குமுறைக்கு உள்ளாகியுள்ளன. உதாரணமாகத் துருக்கி பாராளுமன்றத்தில் 19 உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஜனநாயக கட்சிக்கு எதிராக துருக்கி அரசாங்கம் குற்றவியல் வழக்கு விசாரணைகளை நடாத்தி வருகின்றது. இதன் இலக்கு அந்த அமைப்பின் நிவ்ரோஷ் என்ற பேர் கொண்ட பத்திரிகையையும் மற்றும் வெளியீடுகளையும் தடை செய்வதே. 1980—83 இடைப்பட்டகாலப் பகுதியில் நாட்டை ஆட்சி செய்த இராணுவம் சிலர் பிரதமரானதும் துருக்கியின் உள்நாட்டுப் பாதுகாப்பை தமது பிடிக்குள் கொண்டுவந்துள்ளது. அநேக தொழிற் சங்க போராளிகளும் தொழிலாளர் கட்சிகளின் தலைவர்களும் ஒடுக்குமுறைக்குப் பலியாகியுள்ளார்கள். கலகம் அடக்கும் படையின் கொலைகாரக் கும்பல்களினால் 1992ல் மட்டும் 185 குர்திஷ் பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

குர்திஷ் இராணுவ தளபதிகளின் தேவைகளின் பேரில் குர்திஷ் அமைப்புக்களைத் தடைசெய்வதன் மூலம் ஜேர்மன் அரசாங்கம் முதலாளித்துவத்தின் அரசியல், பொருளாதார அவசியங்களின் பேரில் எந்தவொரு ஜனநாயக உரிமையையும் துவம்சம் செய்யும் தமது தயார்நிலையைக் காட்டிக் கொண்டுள்ளது. பீகேகேயை தடை செய்தமை, ஜேர்மன் முதலாளித்துவ ஆட்சியாளர்கள்

(6 ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com

## அட்டன்:

# துரோகத் தலைமைகளை தூக்கிவீச, புரட்சித் தலைமைக்காக போராடு!

அட்டன் ஸ்ரத்டன் தோட்டத்தை சேர்ந்த தொழிற் சங்கத் தலைவர்கள் உட்பட 4 தொழிலாளர்கள் வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் 24 தொழிலாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அக்டோபர் 19ம் திகதி அத்தோட்டத் தொழிலாளர்கள் ஆரம்பித்த வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்தே அவர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். அதேபோல் யூலை மாதம் 5ம் திகதி மஸ்கேலிய மரே எஸ்ரேற்றை சேர்ந்த தொழிலாளர்கள் ஆரம்பித்த வேலைநிறுத்தத்தை தொடர்ந்து 32 தொழிலாளர்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன். ஒவ்வொரு மாதமும் 15ம் திகதி மஸ்கேலிய பொலிஸ் நிலையத்திற்கு சென்று கையெழுத்து வைக்கவேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது,

தோட்டங்கள் தனியார் கம்பனிகளுக்கு கையளித்த பிற்பாடு தொழிலாளர் முகம் கொடுத்த வேலைநாட்கள் குறைப்பு, சம்பளவெட்டு வேலைப்பழு அதிகரிப்பு, வேலைநேரம் அதிகரிப்பு போன்ற பாரிய தாக்குதலுக்கு எதிராக தொழிலாளர்களின் தன்னிச்சையான எழுச்சியையே இவ்விரு தோட்டங்களில் வெடித்த வேலைநிறுத்தப் போராட்டங்கள் எடுத்துக்காட்டின; தோட்டங்கள் கம்பனிக்கு கையளிக்கப்பட்டு ஒரு ஆண்டு நிறைவு பெறும் வேளையில் தொழிலாளர் முகம் கொடுத்த தாக்குதலுக்கு எதிராக எந்த ஒரு தொழிற்சங்கமும் குரல்கொடுக்க முன்வராத வேளையிலேயே தொழிலாளர்கள் இவ்வேலைநிறுத்தத்தில் குதித்தார்கள்.

இத் தொழிலாளர்களின் தன்னிச்சையான எழுச்சியினால் தொழிற் சங்கத் தலைமைகள் பீதியடைந்துள்ளதுடன், போராட்டத்தில் ஈடுபட்ட இத்தொழிலாளர்களை தனிமைப்படுத்தி தோற்கடிப்பதில் இந்த தொழிற் சங்கத் தலைமைகள் ஈடுபட்டுவருகின்றன.

வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்குவதற்கும், அவர்களுக்கு எதிரான வழக்கை வாபஸ் பெறுவதற்கும் எந்த ஒரு போராட்டத்தையும் தயார்செய்யாதது மாத்திரமில்லை பதிலாக இத் தொழிற்சங்கத் தலைமைகள் போராட்டத்தை ஆரம்பித்த தொழிலாளர்கள் மேல் குற்றம் சுமத்தியுள்ளார்கள். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், லங்கா தேசிய தோட்ட தொழிலாளர் சங்கம், தேசிய தொழிலாளர் சங்கம், ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கம், புதிய செங்கொடிச் சங்கம் ஆகியவற்றில் இத் தொழிலாளர்கள் அங்கம் வகிக்கின்றனர். யூலை மாதம் 8ம் திகதி கொட்டகலையில் மரே தோட்டத்தை சேர்ந்த தொழிலாளர்கள் தொண்டமானை சந்தித்து கைதுசெய்யப்பட்ட 32 தொழிலாளர்களை விடுதலைசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டபோது அவர் பின்வருமாறு பதிலளித்துள்ளார்; ''மஸ்கேலியா பூராவும் உள்ள தொழிலாளர்கள் இ.தொ.கா.வை விட்டு வெளியேறினாலும் பரவாயில்லை நான் இப் பிரச்சினையில் தலையிடமாட்டேன்''

அத்துடன் அக்டோபரில் ஸ்ரத்தன் தோட்டத்திற்கு வருகை தந்த தொண்டமான் போராட்டத்தை ஆரம்பித்த தொழிலாளர்கள் குற்றவாளிகள் என தீர்ப்பளித்தார். இதனைத் தொடர்ந்து இ.தொ.கா. உட்பட பல்வேறு தொழிற்சங்களைச் சேர்ந்த தோட்டக் கிளைத்தலைவர்கள் 14 பேர் வேலைநீக்கம் செய்யப்பட்டார்கள். அத்துடன் மரே எஸ்டேட், விலதலை டிவிசனைச் சேர்ந்த இ.தொ.கா. யூனியன் தலைவர் மாமணி, இ.தொ.கா, தலைமையின் உத்தரவின்படி நிர்வாகத்துடன் ஒத்துழைக்காததற்காக, அவரை யூனியன் தலைவர் பதவியில் இருந்து நீக்கி வேறு ஒருவரை நியமித்துள்ளது.

இவ்வாறு இ.தொ.கா. யூ.என்பி. அரசாங்கத்துடன் இணைந்த வண்ணம் போராளித் தொழிலாளர்களை நசுக்குவதில் முன்நின்று தொழிற்பட்டு வருகின்றது.

தோட்டத் தொழிலாளர் தொழிற்சங்கத் தலைமைகளின் காட்டிக்கொடுப்புக்களுக்கு எதிராக சுயாதீனமாக போராட்டத்தில் குதித்துள்ளதையே இப்போராட்டங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அத்துடன் இப்போராட்டங்களுக்கு ஆதரவாக ஏனைய தோட்டத்தில் உள்ள தொழிலாளர்களும் போராட்டத்தில் குதித்துள்ளனர். ஸ்ரத்தன் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக அட்டன் பிரதேசத்தில் 10,000 பேர் வேலை நிறுத்தத்தில் குதித்தார்கள்.

வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களை நிபந்தனையின்றி மீண்டும் வேலைக்கு அமர்த்தவேண்டும் அவர்களுக்கு எதிரான வழக்கை வாபஸ்பெற வேண்டும். என்ற பிரச்சார இயக்கத்தை தொழிலாளர் நடவடிக்கை குழுக்களை அமைத்து முன்னெடுக்கவேண்டும் என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் கோரிக்கைக்கு தொழிலாளர் பலத்த ஆதரவு தெரிவித்ததுடன் நடவடிக்கை குழு அமைக்கும் கலந்துரையாடலில் தொழிலாளர்கள் பங்குபற்றினர்.

ஸ்ரத்தன், மரே தோட்ட தொழிலாளர்கள் பிரச்சினைகளையே ஏனைய தோட்டத் தொழிலாளர்களும் முகம் கொடுக்கின்றனர். இவர்களுக்கு எதிரான தாக்குதலின் படிப்பினைகளை ஏனைய தொழிலாளர்கள் கவனத்தில் எடுக்கவேண்டியுள்ளது.

எனவே இத்தொழிலாளர்களுக்கு எதிரான தாக்குதலை தோற்கடிப்பதில் சகல தொழிலாளர்களும் ஒன்றிணையுமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தால் அமைக்கப்பட்ட நடவடிக்கை குழுவில் இப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுமாறு வேண்டுகின்றோம்.

---

# ஜேர்மன் அரசாங்கம்...

(5 ம் பக்கத் தொடர்ச்சி)

பழைய சோவியத் யூனியனின் தென்பாகக குடியரசுகளின் ஊடுருவலுக்கு துருக்கியை நண்பனாக வென்றெடுக்கச் செய்யும் வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாகும். அத்தோடு இது அரசியல் அடைக்கலம் கோரும் உரிமையை நாசமாக்குவது உட்பட ஹிட்லர் அரசாங்கம் வீழ்ச்சி கண்டதன் பின்னர் திணிக்கப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டத்தில் அங்கீகரிக்க நேரிட்ட ஜனநாயக உரிமைகளை துடைத்துக் கட்டுவதற்கான முதல் நடவடிக்கையாகும். தமது வெளிநாட்டுக் கொள்கையை முன்னெடுத்துச் செலும் பொருட்டு புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைகளை ஒழித்துக் கட்டும் அரசாங்கம், தமது தேசிய நலன்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் போது ஜேர்மன் தொழிலாளர்களையும் அதே விதத்தில் நடாத்தப் பின்நிற்காது.

இந்தத் தடையை எதிர்த்து ஜேர்மன் சமூக ஜனநாயகக் கட்சி ஒரு வார்த்தை தன்னும் பேசவில்லை. சமூக ஜனநாயக அரச உள்நாட்டு அமைச்சர்கள் இதை நடைமுறைப்படுத்த தம்மால் முடிந்த அனைத்தையும் செய்து வருகின்றார்கள். தொழிற் சங்கங்களும் எந்தவிதமான எதிர்ப்பையும் காட்டவில்லை. இதற்கான காரணத்தைக் கண்டுபிடிப்பது கஷ்டம் இல்லை. 60 இலட்சம் பேர் வேலையின்றி இருப்பதனாலும் சமூக பிளவு ஆழமாகி வருவதனாலும் வெடித்துச் சிதறும் வர்க்கப் போராட்டங்கள் மூளும் நிலைமையினாலும் எஸ்.பீ.டீ. (SPD) தொழிற்சங்கங்களும் அமைதியின்' காவலனாக முன்வருமாறு அரசுக்கு அழைப்பு விடுத்துள்ளனர். எனினும் அரசு காக்கும் 'அமைதி'யின் மூலம் வறுமை, ஒடுக்குமுறை, பயங்கரம் என்பனவே கிடைக்கின்றது.

எஸ், பீ. டி; பீ. கே. கே. அமைப்பை தடை செய்ய ஆதரவளிப்பதானது 1920பதுகளில் வைமார் குடியரசு காலத்தில் புருணிணின் அவசரகால சட்டத்துக்கும், ஹிட்லர் ஆட்சிக்கு வர வழியமைத்த ஹின்டன்பர்கும் அடுத்து பாபன்டும் ஷேலைசாரும், ஜனாதிபதியாக வருகை தர ஆதரவளித்ததுமே நினைவுக்கு வருகின்றது, இன்றைய கிறிஸ்தவ ஜனநாயக கட்சியின் முன்னோடியான மத்திய தர வர்க்க கட்சி இன்னும் வெகுதூரம் சென்றது. அது ஹிட்லரின் சர்வாதிகார மசோதாக்களுக்கு வாக்களித்தது. இம்மசோதா மூலமே தொழிற்சங்கங்கள், எஸ்.பீ, டி. மற்றும் தொழிலாளர் அமைப்புக்களை தடைசெய்ய ஹிட்லருக்கு சட்டத்தின் திரை கிடைத்தது,

பீ.டி.எஸ், டீ.கே.பீ, எம்.எல்.டீ.பி. முதலான நானாவித ஸ்டாலினிச, மாஓவாத அமைப்புக்கள் அரசு பாசிச அமைப்புக்களை தடைசெய்ய வேண்டும் எனக் கோருவதன் மூலம் ஒரே முன்னணியில் இடதுசாரிகளை தயார் செய்கிறார்கள். குர்திஷ்களுக்கு எதிரான அரசின் தாக்குதல் முழுத் தொழிலாளர் வர்க்கத்துக்கும் எதிராகத் தொடுக்கப்பட்ட தாக்குதலாகும். முழுத் தொழிலாளர் வர்க்கமும் இதை எதிர்த்தாக வேண்டும். எஸ்.பீ.டீ. யினதும் தொழிற் சங்கங்களினதும் குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளதும் இந்த மௌனம், தொழிலாள வர்க்கத்தினை சோசலிச முன்நோக்கின் அடிப்படையில் வழிநடத்துவதன் மூலம் மட்டுமே ஜனநாயக உரிமைகளைக் காக்க முடியும் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது.

வாசியுங்கள்:

யூ. என். பி.
தாக்குதலுக்கு
எதிரான
போராட்ட
வேலைத்திட்டம்
புரட்சிக் கம்யூனிஸ்ட்
கழக வெளியீடு
விலை; 7–50

---

# விடுதலைப் புலிகள் இயக்...

(2 ம் பக்கத் தொடர்பு)

அதாவது, அனைத்துலக சோசலிச வேலைத் திட்டத்தின் அடிப்படையில் இனவாத யுத்தத்தினையும் இனவாத அடக்குமுறையையும் ஒழிக்கப் போராடுவதாகும், வேறு வேலைத்திட்டம் கிடையாது. முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் ஏகாதிபத்திய முகாம்களில் நுழைந்து காலனித்துவ ஏஜன்டு ஆட்சியைத் திணிக்கதொழிற்படுகின்றன. இது ஏகாதிபத்தியவாதிகளின் வேலைத்திட்டமாகும், சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இதொகா கட்சிகளும் தொழிற்சங்க அமைப்புக்களும் இனவாத யுத்தத்துக்கு ஆதரவளிப்பதன் மூலம் ஏகாதிபத்திய வேலைத்திட்டத்துடன் தம்மைப் பிணைத்துக் கொண்டுள்ளன.

ஏகாதிபத்தியத்தினை தூக்கிவீசி, அனைத்துலக சோசலிசப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்லுவதற்கு அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தினை அணிதிரட்டுவதன் ஒரு பாகமாக இலங்கையிலும் தமிழ் ஈழம் பிரதேசங்களிலும் தொழிலாளர் வர்க்கம் ஒடுக்கப்படும் மக்களைத் தம்மைச் சூழ அணிதிரட்டி, யூஎன்பி முதலாளித்துவ ஆட்சியையும், விடுதலைப் புலிகளின் பிடியையும் உடைத்து எறிவதோடு, ஈழம் — இலங்கை சோசலிச குடியரசு ஒன்றியத்தைக் கட்டியெழுப்பப் போராடுவதே தொழிலாளர் வர்க்கத்தின் வேலைத்திட்டமாகும். அந்த அனைத்துலகப் போராட்டம் இந்தியத் துணைக்கண்டத்தில் ஆளும் வர்க்கத்தை தூக்கி வீசி, இந்தியத் துணை கண்ட சோசலிச குடியரசு ஒன்றியத்தினை கட்டியெழுப்பும் போராட்டத்துடன் இணைந்துள்ளது. தமிழ் ஒடுக்கப்படுவோரின் ஜனநாயக உரிமைகள், விடுதலைப் புலிகள் — இலங்கை முதலாளி வர்க்கத்துக்கும் இடையேயான யுத்தத்தின் பெறுபேறாக அன்றி தொழிலாளர் வர்க்கம் ஏனைய ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவுடன் சோசலிச புரட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்வதன் மூலம் மட்டுமே உறுதி செய்யப்படும்,

வடக்கு — கிழக்கிலிருந்து இலங்கை இராணுவத்தை வெளியேற்று! தமிழ் ஒடுக்கப்படுவோரின் அனைத்து ஜனநாயக உரிமைகளையும் வழங்கு! என்ற பிரச்சாரத்தினை முன்னெடுப்பதன் மூலம் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கை கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இவ்வேலைத்திட்டத்தினைவே முன்வைக்கிறது. இதற்குப் போராட விடுதலைப் புலிகளின் தேசியவாத பிற்போக்கை உடைப்பதும் சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ.தொ.கா அமைப்புக்களினை அரசியல் ரீதியில் தோற்கடிப்பதும் அவசியம். இதற்கு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை புரட்சிக் கட்சியாக கட்டி எழுப்ப வேண்டும்.

---

கொழும்பு — 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90ல் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



# பிரித்தானிய ஓடுகாலிகள் 'விஷயம் தேடும்' தூதில், இலங்கைத் துரோகிகளுடன் தலைவாழையிலை சாப்பாடு

— விஜே டயஸ் —

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுச் செயலாளர் விஜே டயசினால் எழுதப்பட்ட இக்கட்டுரை, அமெரிக்க இன்டர் நஷனல் வேர்க்கர்ஸ் புலட்டின் பத்திரிகையில் 1993 நவம்பர் 22ம் திகதி வெளியானது. ட்ரொட்ஸ்கிசத்தில் இருந்து பிளவுண்ட பிரித்தானிய ஓடுகாலியான றிச்சர்ட் பிறைசின் தொழிலாளர் அனைத்துலக லீக்கின் பிரதிநிதிகள் இருவர் இலங்கையினுள் நடாத்திய சுற்றுலா பற்றி இது ஆராய்கின்றது.

இலங்கையில் மார்க்சிசம் பற்றிய ஆய்வில் ஈடுபட்டுள்ளதாகக் கூறிக்கொண்டு இங்கு காலடி வைத்த பிறைசின் ஏஜண்டுகள், இலங்கையில் தொழிலாளர் வர்க்கத்தின் உள்ளும் அதைச் சூழவும் சுற்றிச் சுழன்று கொண்டுள்ள பல்வேறு அதிகாரத்துவங்களுடனும் சந்தர்ப்பவாதிகளுடனும் துரோகிகளுடனும் உறவுகளை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தையும் தமது இந்தக் களியாட்டில் சேர்த்துக் கொள்ள முயற்சித்து புகக தலைமையகத்துக்கு வந்த போதிலும்—புகக தோழர்கள் இந்த இரண்டு ஏஜண்டுகளையும் வாலைச் சுருட்டிக் கொண்டு புறப்படச் செய்தனர்.

அன்று நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பிரித்தானியக் கிளையாக விளங்கிய தொழிலாளர் புரட்சிக் கட்சி (WRP)யினுள் 1985 அக்டோபரில் தலைநீட்டிய நெருக்கடிக்கும் பிளவுக்கும் மத்தியில் றிச்சார்ட் பிறைஸ், நீண்டகால தொ. பு. க. தலைவரான ஜெரி ஹீலி கட்சிக் காரியாளர்களைக் கெடுத்ததை மூடிமறைத்ததோடு, தமது குழுவாதப் போராட்டத்தினை உலகக் கட்சியைக் கட்டியெழுப்பும் பணிக்குக் கீழ்ப்படுத்த மறுத்த கிளிஃப் டோரன்ஸ், வனஷா சோடியினால் வழிநடாத்தப்பட்ட சிறுபான்மையினருடன் அணிதிரண்டு கொண்டார்,

இந்தக் குட்டி முதலாளித்துவ தேசியவாதக் கும்பலுடன் சேர்ந்த ஒராண்டின் பின்னர் டோரன்சில் இருந்து பிளவுண்ட பிறைஸ், தமது தொழிலாளர் அனைத்துலக லீக்கை ஆரம்பித்தார். இருப்பினும் தமது பழைய சகாக்களுடனான அரசியல் கருத்து வேறுபாடுகள் பற்றி எந்தவிதமான விளக்கத்தையோ அல்லது அவர்களுக்கு எதிரான போராட்டம் பற்றிய ஒரு அறிக்கையையோ பிறைசினால் முன்வைக்க முடியாது போயிற்று. 1985 பிளவினுள் தாம் தொபுக அங்கத்தவர்களுக்கு வேண்டுமென்றே பொய்கூறியதாக இவர் பின்னர் ஒப்புக் கொண்டார்.

சமீபத்தில் இந்த பிறைஸ் குழு பிரித்தானிய தொழிற் சங்கங்கள், தொழிற் கட்சி அதிகாரத்துவங்கள் பக்கம் மிகவும் நெருக்கமான முறையில் திருபபியுள்ளது. ஒரு வருடத்துக்கு முன்னர் ''எமக்கு வர்க்க அரசியல் அவசியம்தானா?'' என்ற பொருளில் விரிவுரை நிகழ்த்தும் பொருட்டு ஸ்டாலினிஸ்டுகள், தொழிற் கட்சி தலைவர்களுடன் சேர்ந்து பிறைசும் லண்டனில் ஒரே மேடையில் தோன்றினார்,

இலங்கையில் பிறைசின் ஏஜண்டுகள், குட்டி முதலாளித்துவச் சந்தர்ப்பவாதிகளின் கலக்கிய குட்டையுள் ஏற்ற அரசியல் சகபாடிகளைத் தேர்ந்தெடுப்பதில் வெற்றி கண்டுள்ளனர். பிரித்தானிய ஓடுகாலியான றிச்சார்ட் பிறைசின் தொழிலாளர் அனைத்துலக லீக்கின் (WIL) மாட்டின் சலிவர் என்ற பேர்வழியால் எழுதப்பட்ட கட்டுரை ஒன்று வெளியாகியது; 'இலங்கையில் மார்க்சிசம்' என்ற தவறான வழியில் திருப்பும் தலையங்கத்தில் எழுதப்பட்ட இக்கட்டுரை, அவர்களின் ''வேர்க்கர்ஸ் நியூஸ்' என்ற மாதப் புதினப் பத்திரிகையின் 1993 ஆகஸ்ட் இதழில் வெளியாகியது.




ஆர். பிரேமதாச

இதன் வெளியீட்டாளர்களின் குட்டி முதலாளித்துவத் தன்மையைக் கருத்தில் கொள்ளும்போது சலிவரின் கட்டுரையில் அடங்கியுள்ள அனைத்தும் இலங்கையினுள் மார்க்சிசத்துக்கு எதிரான தாக்குதலாகவும் இலங்கையுள் சீரழிந்து, நாற்றம் கண்ட 'இடதுசாரி' அரசியல் கட்சிகளை தூக்கிப்பிடித்துக் கொண்டாடுவதாகவும் இருப்பதையிட்டு எவரும் ஆச்சரியம் அடைய வேண்டியதில்லை. அரசியல், அமைப்பு ரீதியில் நாற்றம் கண்டுள்ள இந்த அமைப்புக்களைப் பாராட்டுவதில் இந்த அறிக்கையாளர்களோட்டம் கண்டு போயுள்ளதன் காரணமாக, தமது சார்பில் பேசுவதற்கென்று இலங்கையினுள் இல்லாத ஒரு குழுவை இவர்கள் அறிமுகம் செய்கிறார்கள்.

1991 மேயில் இருந்து ஒரு மாதாந்த புதினப் பத்திரிகையை வெளியிட்டு வருபவர்களாக இவர்களால் அறிமுகம் செய்யப்படும் இக்குழுவுக்குப் பேரும் கிடையாதா? இக்கட்டுரையினுள் இவர்கள், திரும்பத் திரும்ப 'தொழிலாளர் குரலை வெளியிடும் தோழர்கள்' அல்லது 'தொழிலாளர் குரல் தோழர்கள்' என்றே அழைக்கப்படுகின்றார்கள். இந்தச் சுற்றுமாற்று திட்டவட்டமான ஒரு கேள்வியை எழுப்புகின்றது. இந்த வெளியீட்டாளர்களின் பின்னணியில் உண்மையிலேயே ஒரு அமைப்பு உள்ளதா?

இலங்கை போன்ற ஒரு பின்தங்கிய நாட்டினுள் 'அரசு சார்பற்ற அமைப்பு (NGO), என்ற வேடத்தில் அநேக ஏகாதிபத்திய ஏஜன்சிகள் தொழிற்படுகின்றன என்பது அப்படி ஒன்றும் இரகசியம் அல்ல. அத்தகைய என்ஜிஓ க்களின் ஆதரவுடன் தாம் தெரிவு செய்யும் எந்தவொரு பிற்போக்கு இலக்கியத்தையும் பிரசுரிப்பதற்கு அவசியமான நிதி வளங்களை வழங்குவது ஒருவருக்குச் சிரமம் அல்ல. 'தொழிலாளர் குரல்' பத்திரிகையின் சந்தேகத்துக்கிடமான வெளியீட்டாளர்கள் வரையறுக்கப் பட்ட செயற்பாட்டிற்காக நிதி திரட்டும் விதம் பிரசித்தியானது.

அது எப்படி என்றாலும் உலக ஏகாதிபத்தியத்தினதும் சிறப்பாக பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளின் சார்பில் தமது பிற்போக்கு அரசியல் நடவடிக்கைகளைக் கொண்டு நடாத்தும் பொருட்டு 'தொழிலாளர் குரலுக்கு' நிதி வளங்களின் மூலம் நிதி ஒதுக்கித் தர பிறைஸ் குழு தாமாகவே வன்வந்துள்ளது. 'தொழிலாளர் குரல்', 10×8 அங்குல அளவிலான 4 பக்கப் பத்திரிகையாகும். அதை விற்பனை செய்ய யாராவது இருக்கிறார்களா? சலிவரின் அறிக்கையினுள் அதற்குப் பதில் இல்லை. அதில் சிங்கள, ஆங்கில மொழிகளில் கட்டுரைகள் பிரசுரமாகுவதாயும் ஆனால் தமிழில் கட்டுரைகள் வெளியாவதில்லை எனவும் குறிப்பிடப்படுகின்றது. அதன் வெளியீட்டாளர்கள் ஒரு சுயாதீன தமிழ் அரசுக்காக முன்நின்று வருவதாயும் சலிவர் குறிப்பிடுகின்றார். சில



1987 இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கு அரசியல் பூச்சு வழங்கிய வட்டமேசை பேச்சுவார்த்தைகளில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தனாவுடன் கலந்துரையாடிய ந,ச,ச,க. தலைவர் வாசுதேவ நாணயக்கார

வேளை தமிழ் மொழியில் ஏதேனும் ஒன்றைப் பிரசுரிப்பதன் மூலம் தமிழ் மக்களை வரவேற்க முன்பு, தமிழ் மக்கள் அத்தகைய ஒரு அரசினை அமைக்கும் வரை அவர்களைப் பார்த்துக் கொண்டு இருக்க வேண்டும்!

லங்கா சமசமாஜக் கட்சி, நவசமசமாஜக் கட்சி தொடர்பான இந்த வெளியீட்டின் மனப்பாங்கினை 'குழுநிலையல்லாத' மனப்பாங்கு என சலிவன் விபரிக்கின்றார். அவர் இப்படிக் கூறுகின்றார்: ''அநேக தொழிலாளர் வர்க்கப் போராளிகளுக்கு இடையே ந.ச.ச.க.வுக்கு ஆதரவு இருப்பதால் ந.ச.ச.க. சிறப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.''

## தொழிலாளர்களால் ஒதுக்கப் பட்டமை

இது நவசமசமாஜக் கட்சித் தலைவர்களினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுக்கே முரணாக விளங்குகின்றது. இக் கட்சியின் பொதுச் செயலாளரான விக்கிரமபாகு கருணாரத்ன 'போராளித் தொழிலாளர்கள்' ந.ச.ச.க.வை 'கைவிட்டுள்ளதை' ஒப்புக்கொண்டு, ஏர்ணஸ்ட் மண்டேலின் 'இன்டர் நஷனல் வியூ பொயின்ட்' சஞ்சிகையில் கட்டுரை தீட்டியுள்ளார்.

சலிவன் தொடர்ந்து எழுதுகையில் கூறுவதாவது; ''அவர்கள் (தொழிலாளர் குரல்) அவ்வாறே ல.ச.ச.க. அங்கத்துவத்தையும் துறக்கவில்லை....'' அது சீரழிந்து போன கட்சியென்றாலும் இன்னமும் தொழிலாளர், இளைஞர்களைக் கவர்ந்து கொண்டுள்ளதாக அவர்கள் கூறுகின்றார்கள்'' எது எப்படி இருந்த போதிலும் கடந்த ஜூனில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலைப் பற்றி ''தொழிலாளர் வர்க்கக் கட்சிகளுக்குத் தோல்வி'' என்ற தலையங்கத்துடன் 'தொழிலாளர் குரல்' பத்திரிகையில் வெளியான கட்டுரையினைக் காட்டும் படம் ஒன்றும் சலிவனின் அறிக்கையுடன் பிரசுரமாகியது. இந்தத் தேர்தலில் தமக்கு முன்னர் உரித்தாயிருந்த வாக்குக்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கினை சமசமாஜக் கட்சி இழந்தது. பிறைசுக்கோ அல்லது அவரின் இலங்கைக் கைக்கூலிகளுக்கோ அரசியல் நிலைமையைப் பற்றிய தமது அசிங்கமானதும் அவலட்சணமானதுமான மதிப்பீட்டினை விளக்க முடியாது.

## புகக வுக்கு எதிரான தாக்குதல்

மார்க்சிசத்துக்கு எதிரான பிறைஸ் குழுவின் எதிரிமனப்பான்மை, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுக்கும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கும் எதிரான அவர்களின் தாக்குதலின் மூலம் அம்பலத்துக்கு வருகின்றது. சலிவன் சந்தர்ப்பவாதிகளிடையே புதிதாகத் தேடிக் கொண்ட தமது நண்பர்களுடன் சேர்ந்து, புகக புரட்சியாளர்களை வெறுப்புக்கிடமான முறையில் ஒப்பீடு செய்கின்றார். அவர் எழுதுவது இதுதான்: ''இலங்கையினுள் நாம் மேற்கொண்ட சுற்றுலாவில் எமது உள்ளத்தை தொட்டவற்றில் ஒன்று, அரசியல் அமைப்புக்கள் எம்முடன் உரையாடியபோது காட்டிய குழுவாதம் அல்லாத கோலமாகும்... இதில் இருந்து வேறுபட்ட ஒரே அமைப்பு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே''.

(9 ம் பக்கம் பார்க்க)

# விக்கிரமபாகு கருணாரத்ன பாசிஸ்டுகளுக்கு கைநீட்டுகிறார்

## — நந்த விக்கிரமசிங்க

கடந்த அக்டோபர் மாதம் கல்கத்தாவில் நிகழ்ந்த இன்கிளாப் கம்யூனிஸ்ட் சங்ஸ்டான் (ஐ.சீ.எஸ்) என்ற இந்திய பப்லோவாத அமைப்பின் மகாநாடு, தொழிலாள வர்க்கத்துக்கு எதிரான ட்ரொட்ஸ்கிச விரோத அணி திரள்வாகும். இந்த மகாநாட்டில் 1940ம் ஆண்டுக்கால இறுதியில் இந்திய போல்ஷிவிக் — லெனினிஸ்ட் கட்சியை அழித்திட முழுமூச்சுடன் நின்று நாற்றம் கண்ட பப[illegible] [illegible] லபவரை [illegible] ஸ்டாலினிச இயக்கத்தினுள் செயற்பட்ட குழுவும் [illegible]பற்றிய தங்க அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்த (ஐ.சீ.எஸ்) அமைப்பு 1960—70 ஆண்டுக் காலங்களில் செயற்பட்ட இந்திய எஸ். டபிள்யூ. பீ. (இந்திய சோசலிஸ்டு) கம்யூனிஸ்ட் லீக் என்னும் பப்லோவாத அமைப்புக்களின் காட்டிக்கொடுப்புக்கள் முற்றாக அவமானத்துக்கு உரியதாக்கப்பட்ட சமயத்தில் தொடுக்கப்பட்டதாகும்.

ஐ.சீ.எஸ் அமைப்பு ஆரம்பிக்கப்பட்ட 1980ம் ஆண்டுகளிலிருந்து ராஜீவ் காந்தியின் திறந்த பொருளாதார நடவடிக்கைக்கும், இந்திய—இலங்கை ஒப்பந்தத்திற்கும் ஆதரவளித்தது. 1980ம் ஆண்டு இறுதியில் பாசிச எதிர்ப்பு முன்னணி என்ற பேரில் வலதுசாரி பாரதிய ஜனதா கட்சியின் ''தொழிற் சங்கத்துடன்'' இணைந்து செயற்படத் தீர்மானித்தது.


அண்மைக்காலங்களில் அவர்கள் ஸ்டாலினிஸ்டுகள் காங்கிரஸ் ஆட்சிக்கு முண்டு கொடுக்கப் பயன்படுத்திய 'மதச்சார்பற்ற முன்னணி'க்கு ஆதரவளித்தனர். இந்த அமைப்பின் முக்கியஸ்தரான குணால் சட்டோபாத்யாய உயர்மட்ட ஸ்டாலினிஸ்டின் சுவிகாரப் புத்திரனாவதுடன் இவ்வமைப்பின் பிரசுரங்களும் நூல்களும் ஸ்டாலினிஸ்டுகளின் உத்தியோகபூர்வ அச்சகத்திலேயே அச்சிடப்பட்டுள்ளன.

ஏர்னஸ்ட் மண்டேலின் ஐக்கிய செயலகத்தின் பிரதிநிதியாக, இம்மகாநாட்டில் பங்குபற்றிய விக்கிரமபாகு கருணாரத்ன, இதுபற்றி 'ஹரய' பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் ''இன்று ஏதோ ஒரு விதத்தில் முதலாளித்துவ அமைப்பை புரட்டியடிக்க நடவடிக்கை எடுப்பவர்களாக'' ஸ்டாலினிஸ்டுகளை வர்ணித்துப் புகழ்ந்ததோடு; ஸ்டாலினிஸ்டுகள் ட்ரொட்ஸ்கிசத்தை கண்டனம் செய்து எழுப்பிய சுலோகத்தை தமக்கு வழங்கிய பெரும் கெளரவமாக சரியாக வெளிப்படுத்துகிறார். உண்மையில் நான்கு தசாப்தங்களுக்கு மேல் ட்ரொட்ஸ்கிஸ்டுகளை எதிர்த்து அர்ப்பணத்துடன் போராடிய பப்லோவாதிகளுக்கு ட்ரொட்ஸ்கிசத்துக்கு எதிராக ஸ்டாலினிஸ்டுகள் எழுப்பிய நச்சுக் கூச்சல்கள் தேனிசை சங்கீதம் இல்லையா?

இந்தக் கூட்டத்தின் உண்மையான அரசியல் நோக்கத்தைக் கருணாரத்ன ஹரய பத்திரிகைக்கு எழுதிய கட்டுரை புட்டுவைக்கிறது. கருணாரத்னவின் இந்த அறிக்கை, ஏர்னஸ்ட் மண்டேலினதும் அவரது ஐக்கிய செயலகத்தினதும் அரசியல் நாற்றமெடுப்பை விளங்கப்படுத்தும் [illegible] இந்த அறிக்கையாகும். [illegible] இந்திய ஆதரவாளர்களான ஐ.சீ.எஸ். என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்குகையில் கருணாரத்ன கூறுவது இதுதான்: ''இடதுசாரிகளின் இன்றைய விவாதங்களிலும் நடவடிக்கைகளிலும் தலையிட்டு இடது பதிலீட்டுக்காகப் போராடுவதே'' என்கிறார். இத்துடன் நின்றுவிடாமல் தமது சிபார்சை முன்வைத்து கலந்துரையாடலுக்கும் இறங்குகிறார்.

அவர் குறிப்பிடும் இடதுசாரி என்பது தொழிலாளர் வர்க்கத்தை காட்டிக்கொடுத்து, சோவியத் யூனியனை அழித்த ஸ்டாலினிச கட்சியும் அதனைச் சூழ்ந்துள்ள பல்வேறுபட்ட குட்டி முதலாளித்துவ குழுக்களுமே. ''இந்தியாவின் இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் தேசியமயமாக்கப்பட்ட சொத்துடமையைப் பேணவும், மக்கள் அனுபவிக்கும் உரிமைகளை பேணிக் காக்கவும் முன்வரவேண்டும்'' என்பதன் மூலம் ஸ்டாலினிசத்தின் துரோகச் செயலை அவர் மூடிமறைக்கிறார், ஸ்டாலினிஸ்டுகளையும் அவர்களது 'இடதுசாரி' நண்பர்களையும் பற்றிக் கருணாரத்தின கூறவேண்டியுள்ள விமர்சனம் ஒன்றே ஒன்றுதான். அதாவது, இந்த இடதுசாரி பாரதிய ஜனதாக் கட்சி பாசிச சார்பானது என்று கூறுவது மட்டுமே. பீ.ஜே.பீக்குள்ளும், அதைச் சூழவும் உள்ள பாசிசப் போக்கினையும் விபரிக்காது சுற்றிவளைக்கும் கருணாரத்ன, இந்த வலதுசாரி அரசியல் போக்குகளுக்கு ஓர் புது வார்த்தையை முன்வைக்கிறார்: 'புது வெகுஜனவாதம்'. கருணாரத்ன பீ.ஜே.பீ.யை ஏகாதிபத்திய சார்பற்றதாக காண்கிறார். அக்கட்சியை அவர் ''ஏகாதிபத்திய நிர்ப்பந்தங்களால் சிதறுண்ட தேசிய முதலாளித்துவ, மத்தியதரவர்க்க பிரிவுகள்'' ஒன்றுகூடும் இடமாகக் காண்கிறார்,

அதே சமயம் இந்த மண்டேலின் ஏஜந்து, இன்று இந்தியா எதிர்கொள்ளும் பயங்கர ஆபத்து, அந்நாட்டினுள் ஏகாதிபத்திய கம்பனிகள் பாய்ச்சல் நடத்துவதே எனக் கூறுகிறார். எனினும் வாசகன் உஜாராய் இருக்கவேண்டும். மண்டேலின் எடுபிடி ''ஏகாதிபத்திய எதிர்ப்பு'' வார்த்தையை பாவிப்பது, தொழிலாள வர்க்கத்தை முதலாளித்துவத்திலிருந்து சுயாதீனமாக்கி அணிதிரட்ட அல்ல; அதற்கு முற்றிலும் முரணாக தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக மரண பொறிக்கிடங்கைத் தோண்டவே. பீ.ஜே.பீ.யை ஏகாதிபத்திய எதிர்ப்பென பெயர் சூட்டும் அதே வேளையில் ஏகாதிபத்திய மிரட்டல் மிகவும் முக்கிய பிரச்சனையாகும் என்று பேர்சூட்டுவதன் மூலம் ஒழிவு மறைவற்ற அர்த்தம் தொனிக்கிறது. இதன் மூலம் அவர் இதுகாறும் ஸ்டாலினிஸ்டுகளும் அவர்களது சகபாடிகளும் தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக பயன்படுத்தி வந்த பாசிச விரோத—பீ.ஜே.பீ. விரோத கோஷத்தை ஏகாதிபத்திய விரோத கோஷத்துள் அமுக்கிவிடும் காலம் நெருங்கிவிட்டதை 'இடதுசாரி பதிலீடாக' பிரேரிக்கின்றார்.



பீ.ஜே.பீ. மத வெறி பாசிச பிரச்சாரத்தின் போதுபம்பாய் வீதிகளில் இடம்பெற்ற ஆயிரமாயிரம் படுகொலைகளில் ஒன்று

### ஸ்டாலினிசத்தின் செயற்பாடு

1991ல் இருந்து நரசிம்மராவின் பொம்மை அரசாங்கம் உலகவங்கி, நாணய நிதி தயாரிப்புக்களை ஈவிரக்கமின்றி, இந்திய ஒடுக்கப்பட்ட மக்களின் மீது சுமத்திவந்தது. ஸ்டாலினிஸ்டுக்கள் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் அதற்கு ஆதரவு வழங்கியதன் மூலம் ராவ் அரசாங்கத்தை நீடிக்க உறுதுணை வழங்கினர். உலக வங்கி தலைவர் லூவி பிரஸ்டன், ஜோதிபாசினை சந்தித்து நடாத்திய விசேட பேச்சுவார்த்தை இதை மேலும் உறுதிப்படுத்துகிறது. 1991ல் இருந்து ஸ்டாலினிஸ்டுகள் தமது பிற்போக்கு செயலை மூடிமறைக்க ''பாரதிய ஜனதா கட்சியின் தீவிர இந்து மதவாதத்திற்கு எதிரான மதச்சார்பற்ற ஜனநாயக கட்சிகளது முன்னணி'' என்ற சுலோகத்தைப் பயன்படுத்தினர்.

இப்போது விக்கிரமபாகு கருணாரத்ன இந்த உபாயத்தை \ கைவிடவேண்டிய காலம் நெருங்கிவிட்டதென்று கூறுகிறார். தற்போது தொழிலாளர் வர்க்கத்தை தவறான வழியில் திசைதிருப்பவும் அதற்கெதிரான வர்க்க சக்திகளை அணிதிரட்டவும் சிறந்தவழி, பாசிச பீ.ஜே.பீ.யுடனும் அதன்பாசிச சகபாடிகளுடனும் சேர்ந்து கொள்வதே என விக்கிரமபாகு கருணாரத்ன கூறுகிறார், அதற்கு மேற்குறிப்பிட்டவாறான ஏகாதிபத்திய விரோத சுலோகத்தையும், முதலாளித்துவ நெருக்கடியினால் பீ.ஜே.பீ.குள்ளும் அதனைச் சூழவும் உருவாகும் முதலாளித்துவ — குட்டிமுதலாளித்துவ பிரிவின் ஏகாதிபத்திய விரோத கூச்சலையும் பயன்படுத்த வேண்டும் எனவும் அவர் கூறுகிறார்.

பிறப்பிலும், வளர்ப்பிலும், சகல விதத்திலும் முதலாளித்துவ வர்க்க கட்சியாயுள்ள, பாரதிய ஜனதா கட்சி ஏகாதிபத்திய ஏஜன்சி அல்ல— அல்லது அது இன்னமும் நிரூபிக்கப்படவில்லை என்ற கருணாரத்னவின் வாதம் மார்க்சிசத்துக்கு முற்றிலும் எதிரானது.

### தேசிய முதலாளித்துவம் பற்றி ட்ரொட்ஸ்கி

முதலாளித்துவ உற்பத்தி அமைப்பில் யுகாந்தர மாற்றங்களுக்கிடையில், தேசிய அரசு முற்றாக ஒழிந்துபோகும் நிலை உருவாகியுள்ள இன்றைய காலகட்டத்துள் ஏகாதிபத்தியத்திற்கும் தேசிய அரசுக்குமிடையிலான தொடர்பு குறித்து லியோன் ட்ரொட்ஸ்கி இற்றைக்கு 66 ஆண்டுகளுக்கு முன்கூறியவை மிகவும் பொருத்தமானவை.

''ஏகாதிபத்தியம் வெளியில் இருந்து நெருக்குவாரம் கொடுப்பதன் மூலம் பொறிமுறையில் சீனாவின் அனைத்து வர்க்கங்களையும் ஒன்றாக இணைப்பதில்லை... ஏகாதிபத்தியமானது சீனாவின் உள்ளார்ந்த உறவுகளில் பெரிதும் பலம்வாய்ந்த ஒரு சக்தியாகும், இந்தச் சக்தியின் நிஜ ஊற்றுவாய், யாங்ஷியாங் நதியில் நிறுத்தப்பட்டுள்ள (ஏகாதிபத்திய வாதிகளின்) யுத்தக் கப்பல்கள் அல்ல. வெளிநாட்டு மூலதனத்துக்கும் தேசிய முதலாளி வர்க்கத்துக்கும் இடையேயான அரசியல், பொருளாதாரப் பந்தங்களாகும்.'' (சீனப் புரட்சியின் பிரச்சினைகள் — லியோன் ட்ரொட்ஸ்கி)

உலகம் பூராவும் தொழிலாள வர்க்கத்தின் உழைப்பை சுரண்டி விழுங்கும் வர்க்கமான முதலாளித்துவ வர்க்கத்தின், இரு பிரிவினரே ஏகாதிபத்தியமும் — தேசிய முதலாளித்துவமும் அந்த இரண்டுக்குமிடையே பரஸ்பர முரண்பாடுள்ளது இயல்பே. தொழிலாள வர்க்கத்தின் உபரி உழைப்பில் தமது பங்கினைப் பற்றியதே இம் முரண்பாடாகும். தேசிய வர்த்தகச் சந்தையையும் தேசிய உற்பத்தியையும் சிதறடித்து, உலக வர்த்தக சந்தையும் உலக உற்பத்தியினதும் ஆதிக்கம்மேலோங்கும் இவ்வேளையில் ஏகாதிபத்தியம் தேசிய முதலாளித்துவத்தின் குரல் வளையை மேலும் நெரித்துக் கொண்டுள்ளது.

### பாசிசம்

பாசிசம் முதலாளித்துவ ஆதிக்கத்தின் ஏனைய வடிவங்களிலிருந்து எங்ஙனம் வேறுபடுகிறது என்பதை ட்ரொட்ஸ்கி பின்வருமாறு எடுத்துக் காட்டியுள்ளார்: ''பாசிசம், பாட்டாளி வர்க்கத்துக்கு நெருக்கமாக மேலேயுள்ளதும், அந்த வர்க்கத்தினுள் தள்ளப்படும் பீதிக்கு நிரந்தரமாக ஆட்பட்டிருப்பதுமான வர்க்கங்களை இருபுறத்திலும் எழுச்சி பெறச் செய்கிறது, அவை நிதி மூலதனத்தின் இழப்பில் நடாத்தப்படும் அரசாங்கத்தின் மூடிமறைப்பின் கீழ் அணிதிரண்டு, ஆயுதம் தாங்கி, பாட்டாளி வர்க்க அமைப்புக்களை சிதறடிக்க வழிநடாத்தப்படுகின்றது,'' (ஜேர்மனியில் பாசிசத்துக்கு எதிரான போராட்டம் — ட்ரொட்ஸ்கி)

ஏகாதிபத்திய ஒடுக்குதலின் கீழ் சிதறுண்ட பிரிவினரையும் உள்ளடக்கியுள்ளதால், பீ.ஜே.பீ.யை ஏகாதிபத்திய விரோதமானதென கூறி கருணாரத்ன கட்டித்தழுவுவது உண்மையில் இந்த சமூக நிலைப்பாட்டிலேயாம், முதலாளித்துவ நெருக்கடியினால் சிதறடிக்கப்பட்டுள்ள குட்டி முதலாளித்துவ பிரிவு — தொழிலாள வர்க்கம் தனது சுயாதீன புரட்சிகர தலைமையின் கீழ் அணிதிரட்டாது விட்டுவைக்கும் வரையும் — முதலாளித்துவ வர்க்கத்தினால் தொழிலாள வர்க்கத்திற்கு எதிரான கருவியாகப் பயன்படுத்தப்படும். வலதுசாரி பாராளுமன்ற கட்சியாக இருந்து பாசிச அமைப்பாக மாற்றமடைந்துள்ள

(9 ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com

படிப்பகம்

## ஜே.வீ.பி.யால் படுகொலையுண்ட தோழர். பிட்டவெல நினைவுக் கூட்டம்:

# "மரணத்துக்கு முன்னரே தனது கொள்கைகள் மடிந்து போக இடமளிக்கவில்லை"

''இந்தக்கூட்டம் பலவிதத்தில் முக்கியத்துவம் வாய்ந்தது. தோழர், பிட்டவெல குடும்பத்தின் அங்கத்தவர்கள் பலரும் இன்று இங்கு வருகை தந்துள்ளார்கள். அவ்வாறு வருகைதந்தமை தோழர். பிட்டவெலவை படுகொலை செய்ததன் மூலம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தையும் அவரின் குடும்ப அங்கத்தவர்களையும் துடைத்துக்கட்ட அப்பிரதேச பிற்போக்குவாதிகள் நடாத்திய பிரச்சாரம் தோற்கடிக்கப்பட்டதைக் காட்டுகின்றது. அவ்வாறே தோட்டத்தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், ஆசிரியர்கள், ஒடுக்கப்படும் மக்கள் அனைவரும் இக்கூட்டத்தில் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டுள்ளனர்.''

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பிரபல உறுப்பினரும் இலங்கை ஆசிரியர் சங்க அங்கத்தவருமான தோழர், ஆர். ஏ.பிட்டவெல, பாசிச ஜே. வி,பி. குண்டர்களால் 1988ல் படுகொலை செய்யப்பட்டதை நினைவு கூருமுகமாக கடந்த நவம்பர் 21ம் திகதி வெலிமட சூரிய சினிமா மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் பு க.க. பொதுச் செயலாளர் விஜேடயஸ்மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வெலிமட ஹங்குன்னாவை பொதுமயானத்தில் தோழர் பிட்டவெலவின் நினைவுத் தூபி ஸ்தாபிதம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இடம் பெற்ற இக்கூட்டத்தில் பேசுகையில் விஜேடயஸ் குறிப்பிட்டதாவது; ''ஏனைய அரசியல் கட்சிகளின் அங்கத்தவர்கள் பலர் ஜே. வீ. பி. பாசிஸ்டுகளால் படுகொலை செய்யப்பட்டபோதிலும் அவர்கள் நினைவு கூரப்படுவதில்லை. அக்கட்சிகள் அங்ஙனம் கொலைசெய்யப்பட்ட தமது அங்கத்தவர்களை மறந்துவிட்டார்கள். அதற்கு அக்கட்சித் தலைவர்களின் தனிப்பட்ட கயமைத்தன ' காரணம் அல்ல. அவர்கள் கொலைசெய்யப்பட்ட தமது அங்கத்தவர்களை மறந்து போக நெருக்கப்பட்டுள்ளனர். அதற்குக் காரணம், தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களின் அவசியங்களின் பேரில் அவர்கள் எந்தவிதமான போராட்டமும் நடாத்தியதாக தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்கள் முன்னிலையில் கூறமுடியாததே. இதற்கு முற்றிலும் வேறுபட்ட முறையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அமைந்துள்ளது. எம்மால் எமது வரலாற்றினை பெருமையுடன் கொண்டாட முடியும்...''

தோழர்.பிட்டவெல கொலை செய்யப்படுவதற்கு முன் துப்பாக்கிமுனையில் குற்றப்பத்திரத்தில் கையொப்பமிடும்படி ஜேவிபி பாசிஸ்டுகள் செய்த மிரட்டலை அவர் நிராகரித்ததை கூட்டத்தினருக்கு நினைவுபடுத்திய விஜேடயஸ் 'தமக்கு முன்னர் தாம் பேணிக்காத்த கொள்கைகள் உயிர் நீப்பதற்கு அவர் இடம் கொடுக்கவில்லை. அதற்குப் பதிலாக அந்தக் கொள்கைகளைக் காத்தபடியே அக்கொள்கையுடனேயே உயிர்நீக்க முடிவு செய்தார்.'' என்றார்.

தொழிற்சங்கங்களதும் மற்றும் தேசியவாத அமைப்புக்களதும் வங்குரோத்தினைச் சுட்டிக்காட்டிய விஜே அவை தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளைக் காக்க இலாயக்கற்றவையாகிவிட்டதெனக் கூறியதோடு ''தொழிலாளர்கள் புதிய பாணியிலான அமைப்புக்களை — நடவடிக்கைக் குழுக்களை கட்டியெழுப்பவேண்டும். எனினும் இது எந்தவிதத்திலும் தொழிற்சங்கங்களுக்கு பதிலீடு அல்ல. இதில் தோட்டத் தொழிலாளர்கள், மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர் அனைவரையும் அணிதிரட்டும் நடவடிக்கைக் குழுக்களை கட்டி எழுப்ப வேண்டும்'' என்றார். ''தோழர்.ஆர்.ஏ.பிட்டவெல: பாட்டாளி வர்க்க அனைத்துலகவாத போராளி' என்ற பேரில் ஒரு நூலும் கூட்டத்தில் வெளியிடப்பட்டது.

# விக்கிரமபாகு கருணாரத்ன...

(8 ம் பக்கத் தொடர்ச்சி)

பி. ஜே. பி. யின் கூக்குரலில் ஒலிப்பதும் இல்லை, ''மதச் சார்பற்ற முன்னணி'' என்ற சுலோகத்தின் கீழ் தொழிலாள வர்க்கத்தை ராவ் அரசாங்கத்திற்கு அரசியல் ரீதியில் கீழ்ப்படுத்தி, இந்த பாசிசப் போக்கின் அபிவிருத்தியை தூண்டிவிட்டது இந்த ஸ்டாலினிஸ்டுகளும் பப்லோவாதிகளுமே. தற்போது இந்த பீ. ஜே. பி.யுடனேயே ஸ்டாலினிசமும் (தொழிற் சங்க அதிகாரத்துவங்களும்) இணைய வேண்டுமென கருணாரத்ன வாதிடுகிறார்.

கருணாரத்னவின் விவாதமானது — சில காலத்திற்கு முன் பி,ஜே.பி. தொழிற்சங்கத்துடன் ஐக்கிய முன்னணி அமைக்க செயற்பட்ட இந்திய பப்லோவாதிகளது (இன்கிலாப் கம்யூனிஸ்ட் சங்ஸ்டான்) அமைப்பின் ஆதரவை பெற்றது ஒன்றும் புதுமையல்ல. அவர்களிலும் பார்க்க இந்த பாய்ச்சலை விரும்புவது ஸ்டாலினிச — தொழிற்சங்க அதிகாரத்துவ தொழிலாளர் விரோதிகளே.

இந்தத் தொழிலாளர் விரோதிகள் கும்பலுக்கு கருணாரத்ன மற்றுமோர் யோசனையையும் முன்வைக்கிறார். காலனித்துவ, அரைக் காலனித்துவ நாடுகளில் கடைகெட்ட ஏகாதிபத்திய ஏஜன்டுகளாக இயங்கிவரும் அரச சார்பற்ற அமைப்பு (என்.ஜி.ஓ)க்களையும் 'இடதுசாரி தலைமை' அணிதிரட்டிக் கொள்ளவேண்டும் என்பதே அந்த யோசனை. இதன் பிற்போக்குத் தன்மையை சுட்டிக்காட்டும் சம்பவம் சமீபத்தில் இலங்கையில் இடம்பெற்றது. விக்கிரமபாகு கருணாரத்னவின் சொந்த ஆதரவுடன் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட மோர்ஜ் இயக்கம் (இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்) ஏகாதிபத்திய அமைதிப்படையை இலங்கையுள் இறக்கவேண்டும் என்ற பிரச்சாரத்தினை அதன் 'யுக்திய' (சரிநிகரின் சகோதரன்), பத்திரிகையில் தொடுத்துள்ளது.

கருணாரத்னவின் 'புதிய வெகுஜனவாதம்' நவம்பர்5ல் வெளியான 'ஹரய' பத்திரிகையில் அம்பலத்துக்கு வந்துள்ளது; ''இடதுசாரி வெகுஜனங்களின் எதிர்பார்ப்பான தீவிரம் உயர்ந்த மட்டத்தில் கிடைக்காது போகின் மோதுதல் உக்கிரம் அடையும்... இனவாத இடது சக்திகள் வேறாகக் கட்டியெழுப்பும் (தினேஷ் குணவர்த்தன) திட்டத்துக்கு புத்துயிர் கிடைக்க இடமுண்டு. இச் சூழ்நிலை நிஜ பதிலீட்டை கட்டியெழுப்ப ந. ச. ச. க. க்கு புதிய வாய்ப்பை உண்டு பண்ணும்,'' 'இனவாத இடது சக்திகள்' என்ற வாக்கியம் கருணாரத்னவின் பேனாவில் இருந்து உதிர்ந்தது தற்செயலான ஒரு நிகழ்வு அல்ல, தமது சமூக அடிப்படை, இனவாத வெறி பிடித்த குட்டி முதலாளித்துவத் தட்டினரே என்பதைத் தெளிவுபடுத்திக் கொண்டுள்வார்.

ஐரோப்பியத் தொழிலாள வர்க்கத்தின் தொடர் போராட்டங்கள் சுட்டிக்காட்டுவது போன்று உலகளாவிய வர்க்கப் போராட்டத்தின் உக்கிரத்தினால் பப்லோவாதிகளின் இந்த துரோகப் பாத்திரம் அம்பலத்துக்கு வந்துள்ளது. இந்தியாவினுள் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களின் பணிப்பின் பேரில் நரசிம்மராவும், மன்மோஹன் சிங்கும் ஏற்படுத்தியுள்ள பேரழிவுக்கு எதிராக தொழிலாளர் வர்க்கம் ஒரு தொகை புதிய போராட்டங்களுக்குத் தயாராகி வருகின்றது. நவம்பர் முதற்பகுதியில் 25000 சென்னை பஸ் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் சுட்டிக் காட்டியது போல் அது ஆரம்பத்தில் இருந்தே தொழிற்சங்க அதிகாரிகளின் பிடியை சவால் செய்து கொண்டிருந்தது.

இந்நிலையில் தொழிலாளர் வர்க்கத்தினைத் தவிடுபொடியாக்க நரசிம்மராவ் அரசாங்கத்தைக் காட்டிலும் பெரிதும் வல்லமையான ஒரு அரசாங்கத்தினை திணிக்க — பாசிச சக்திகளைக் கட்டவிழ்த்துவிடும் அவசியம் ஏகாதிபத்தியத்துக்கு ஏற்பட்டுள்ளது. இந்தியாவைத் துண்டாடுவதன் மூலம் தொழிலாளர் வர்க்கத்தை மேலும் படுகோரமான முறையில் இரத்தக் களரியில் மூழ்கடிக்கும் அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. 1947ல் காஷ்மீரினை இந்தியாவுடன் இணைத்துக் கொள்ளும் உடன்படிக்கையைத் தாம் அங்கீகரிக்கவில்லை என அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் இன்று கூறிக்கொண்டுள்ளதன் அர்த்தம் அதுவே. இந்தப் பிற்போக்குத் திட்டங்களுக்கு நடைவெள்ளை விரிக்கும் நடவடிக்கையில் விக்கிரமபாகு கருணாரத்ன இறங்கியுள்ளார்.

# பிரித்தானிய ஓடுகாலி...

(7 ம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையில் அவர் குறிப்பிடும் ஏனைய சகல அமைப்புக்களையும் கண்டதுதான் தாமதம் அவற்றை ஏகாதிபத்தியச் சார்பு 'மைத்துனர்களாக இனங்கண்டு கொள்வதற்குப் போதுமான அளவு மோப்பம் உள்ளது. 1985ல் ஏகாதிபத்திய ஆதரவுடனான இந்திய ஆக்கிரமிப்பைத் தயார் செய்யும் முகமாக அன்று ஜனாதிபதியாக விளங்கிய ஜே. ஆர். ஜயவர்தனாவினால் கூட்டப்பட்ட சர்வகட்சி மகாநாட்டில் எதுவிதமான வேறுபாடும் இல்லாமல் இவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். அச்சந்தர்ப்பத்தில் இருந்து எந்தவொரு பிற்போக்கு ஏஜன்சியுடனும் பேச்சுவார்த்தை நடாத்துவதில் இவர்கள் எதுவிதமான தயக்கமும் காட்டியது கிடையாது.

சலிவன் போன்ற ஒரு அரசியல் கூர்மையற்றவர் கூட 'அதில் இருந்து வேறுபட்ட ஒரே அமைப்பு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்தான்' என்பதைக் கவனத்தில் கொண்டிருப்பதையிட்டுப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பெருமையடைகின்றது.

## மாகாண சபைத் தேர்தல்

சந்தர்ப்பவாதிகளுக்குத் தனது கௌரவத்தை செலுத்திக் கொண்டு எழுதுகையில் சலிவன் மேலும் கூறுவதாவது: ''அவர்களின் அரசியல் நடவடிக்கைகள் பெருமளவில் இருந்த போதிலும்— எமது வருகை மாகாண சபை தேர்தல் இயக்கத்தைத் தொடுப்பதற்கு மத்தியில் இடம் பெற்றது—தமது அமைப்புக்களின் நெறிமுறைகளை தெளிவு படுத்துவதற்காக தமது நேரத்தில் ஒன்றரை மணித்தியாலங்கள் எமக்கு வழங்க அவர்கள் எதுவித தயக்கமும் காட்டவில்லை.''

இந்த மாகாணசபைத் தேர்தல், தீவின் வடபகுதிக்கு 100,000 இந்தியப் படைகளைத் தருவித்து, ஆயிரமாயிரம் தமிழ் மக்களின் மரணத்துக்கு வழிவகுத்த இந்திய—இலங்கை உடன்படிக்கையின் திரிக்கப்பட்ட ஒரு பெறுபேறாகும். ஏனைய சகல அமைப்புக்களுக்கும் பிறைசின் ஏகாதிபத்தியச் சார்பு ஏஜண்டுகளுக்கும் இடையே இடம் பெற்ற 'தோழமைமிக்க' கலந்துரையாடல் எதுவிதத்திலும் இந்தப் பிற்போக்கு தேர்தல் நடவடிக்கைகளால் ஸ்தம்பித்துப் போகவில்லை, மாகாண சபைத் தேர்தல், தமிழ் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் வடக்கு — கிழக்கு மாகாணங்களைக் கைவிட்டு, தெற்கில் 'சிங்கள' பிராந்தியங்களிலேயே நடாத்தப்பட்டது. இந்த அமைப்புக்களின் தலைவர்கள் சலிவனையும் இறுக அணைத்துக்கொள்ளும் வகையில் தமது தேர்தல் கருமங்களில் இருந்து ஓய்வு எடுத்த அதே சமயம், தெற்கிலுள்ள வர்க்க நனவு படைத்த தொழிலாளர்கள் தேர்தலினுள் இனவாத சந்தர்ப்பவாதிகளுக்கு எதிராகத் தமது பதிலடியை தயார் செய்து கொண்டிருந்தனர். இந்தப் பதிலடி பின்னர் ந. ச. ச. க. தலைவரினால் உரியவிதத்தில் பண்பு மயப்படுத்தப்பட்டது: ''போராளித் தொழிலாளர்கள் எம்மைக் கைவிட்டுச் சென்றுள்ளனர்.''

(11 ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க:

# "நான் அமெரிக்கா வந்தது இலங்கையை விற்றுத்தள்ள"

''நான் அமெரிக்காவில் இருந்த போது 'நான் வந்தது இலங்கையை விற்பனை செய்யவென' அமெரிக்கர்களுக்கு கூறினேன். ஆடைகளின் விற்பனையை அதிகரிக்கச் சென்ற துணிநெசவுக் கைத்தொழில் அமைச்சரும் என்னுடன் அமெரிக்காவில் இருந்தார். எமது தேயிலை விற்பனை கொடுக்கல் வாங்கல்களை ஏற்படுத்திக் கொள்ள பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் இன்று வெற்றி கண்டுள்ளது போல் எனக்குத் தெரிகிறது. நாடு இன்று வெளிநாட்டு வர்த்தகர்களின் முன்நிலையில் விற்றுத்தள்ளும் இயக்கத்தில் இறங்கியுள்ளது.''

யூஎன்பி அரசாங்கத்தின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நவம்பர் 1ம் திகதி 'றினைசன்ஸ்' ஹோட்டலில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் முகாமையாளர்கள் மகாநாட்டில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறியதாக முதலாளித்துவ ஊதுகுழலான 'ஐலண்ட்' பத்திரிகை மகிழ்ச்சி ததும்பக் குறிப்பிட்டிருந்தது. அனைத்து அரைக்காலனித்துவ நாடுகளினதும், முதலாளி வர்க்கங்களினதும் அவற்றின் நிர்வாகிகளான முதலாளித்துவ அரசாங்கங்களதும் பணி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டதே. இதில் சந்தேகம் இல்லை. என்றாலும் நட்ட நடுப் பகலில் தாமது பணி தாம் ஆட்சி செய்யும் நாட்டினை விற்றுத் தள்ளுவதே எனக் கூறிய முதலாளித்துவ ஆட்சியாளர் உண்டா? ஏகாதிபத்தியவாதிகளின் மிலேச்சச் சுரண்டல் தேவைகளதும் யுத்தவெறிக் கடமைகளதும் அடிமை வலயமாக இந்நாட்டினை விற்றுத் தள்ளவும் அதன் மூலம் தமது கொம்பிரதோர் வர்க்க ஆட்சியை கொண்டு நடாத்தவும் யூஎன்பி அரசாங்கமும் இலங்கை முதலாளி வர்க்கமும் எந்தளவுக்கு வெறிகொண்டு அலைகின்றன என்பதற்கு இது நல்ல சாட்சி.

ரணில் விக்கிரமசிங்கவின் அறிக்கையின் நிஜ அரசியல் அர்த்தம் என்ன? தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் எஞ்சியுள்ள உரிமைகளையும், —தொழில், நலன்புரி சேவைகள், சேவை நிலைமைகள், வாழ்க்கைத் தரம்—துடைத்துக்கட்ட விஜேதுங்க அரசாங்கம் தயாராகிக் கொண்டுள்ளதற்கு இது சான்று பகர்கிறது. வாஷிங்டனில் இலங்கையை விற்பனை செய்ய வந்திருப்பதாக ரணில் விக்கிரமசிங்க கூறியதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் வாரென் கிறிஸ்தோபர் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடாத்தினார். அதில் அவர் ''இலங்கையின் பொருளாதார முன்னணியில் நிஜ முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது'' (லங்கா கார்டியன் 1993 நவம்பர்) எனக் கூறியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அமெரிக்க சுற்றுலாவில் பிரதமர் அமெரிக்க வெளிநாட்டு தனியார் முதலீட்டு அமைப்புக்களுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவார் எனவும் அமெரிக்க ராஜாங்க செயலாளர் சுட்டிக்காட்டினார்.

யூஎன்பி அரசாங்கம் இலங்கையை யாருக்கு விற்பனை செய்யப்போகிறது? ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளுக்கு. கடந்த ஒன்றரைத் தசாப்தங்களாக தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட புரட்சிகர மாற்றங்களைப் பயன்படுத்தி முழு உலகம் பூராவும் முதலீடுகளை மாற்றி உற்பத்தி முறையில் ஈடுபடும் ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகள் தோன்றியுள்ளன. இவை ஏகாதிபத்திய நாடுகளை மையமாகக் கொண்டுள்ளன. 1970ல் உலகப் பொருளாதாரத்தில் 7000 ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகள் இருந்தன. 1990ல் இந்த எண்ணிக்கை 24000 ஆக உயர்ந்துள்ளது. இந்தக் கம்பனிகள் மலிவான உழைப்பையும் உச்ச இலாபத்தையும் தேடி நாட்டுக்கு நாடு பாய்கின்றன.

பிரதமர் இலங்கையை கொள்ளை செய்ய அழைப்பு விடுத்துள்ள அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் யார்? உலக உற்பத்தியில் கடந்த தசாப்தங்களில் ஏற்பட்ட மாற்றங்களின் மத்தியில் மூழ்கியுள்ள தமது நாட்டின் ட்ரான்ஸ் நஷனல் கம்பனிகள் உலகப் பொருளாதாரத்தின் ஆளுமையை கைப்பற்றிக் கொள்ளுவதில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஈடுபட்டுள்ளனர். ஜனநாயகம் காத்தல், மனித உரிமை காத்தல், சமாதானத்தை சிருஷ்டித்தல் என்ற போர்வையில் இவை இதில் ஈடுபட்டுள்ளன. இத்தனை நாம் ஈராக்கிலும், சோமாலியாவிலும் ஏகாதிபத்தியவாதிகள் மேற்கொண்ட இராணுவ ஆக்கிரமிப்பில் கண்டோம். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் இன்று யப்பான், ஜேர்மன் ஏகாதிபத்தியவாதிகளுடனான தமது போட்டியின் பேரில் இராணுவ பலத்தையும், முறைகளையும் பலப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளனர். இரணவிலவில் யூஎன்பி அரசாங்கத்தின் ஆதரவுடன் திணிக்கப்பட்டுள்ள 'வொயிஸ் ஒப் அமெரிக்கா' இந்த இராணுவ பாய்ச்சலின் ஒரு தொடர்பாகும்.

பிரதமர் ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளுக்கு நாட்டை ஏலம் போடும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட அதே வேளையில் ஜனாதிபதி விஜேதுங்க தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான சட்ட திட்டங்களையும், இனவாத ஆத்திர மூட்டல்களையும் தூண்டிவிடுவதில் உள்நாட்டில் தலைகீழாக நின்று செயற்பட்டு வருகின்றார்: ''எமது தொழிலாளர்கள் வேலையில் நல்ல கவனம் கொண்ட, நல்ல ஒழுக்கம் கொண்டவர்களாக வேண்டும். திறமையைக் கவனியாமல் தொழிலாளர்களை மிக மிஞ்சி பாதுகாக்கும் சட்டங்களை சீர்திருத்த வேண்டும்.'' என்றுள்ளார். செப்டம்பர் 27ல் களுத்துறைக் கூட்ட மொன்றில் பேசுகையில் ஜனாதிபதி இதை அப்படியே நிர்வாணமாகக் குறிப்பிட்டார்: ''பழைய சட்டங்கள் இருக்கும் வரையில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வர தயங்குகிறார்கள்.''

ஏகாதிபத்திய வாதிகளதும் ஏகாதிபத்தியச் சார்பு கொம்பிரதோர் ஆட்சியாளர்களதும் விதிமுறைகளினால் ஏற்படும் பேரழிவினைத் தடுக்க தொழிலாளர் வர்க்கத்திடம் வேலைத்திட்டம் உண்டு. ஏகாதிபத்தியத்தினை தூக்கி வீசி, உலக சோசலிசப் புரட்சியை நிர்மாணிப்பதே அத்திட்டம். ஏகாதிபத்திய நாடுகளிலும், அரைக்காலனித்துவ நாடுகளிலும் தொழிலாளர் வர்க்கம் இந்த வேலைத்திட்டத்தின் அடிப்படையில் இணைந்து போராட வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவின் நாட்டை விற்றுத் தள்ளும் திட்டத்துக்கு சமசமாஜ—ஸ்டாலினிச நவசமாஜ கட்சிகளும் மற்றும் தொழிற் சங்க அதிகாரத்துவங்களும் துணை நிற்கின்றன. இவற்றின் கடந்த கால தேசியவாத வேலைத்திட்டத்தின் நாற்றமெடுப்பு இந்நிலைக்கு இவற்றை தள்ளியுள்ளது. இவற்றின் காட்டிக்கொடுப்புக்கு எதிராக அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தின் இலங்கைக்கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே போராடுகிறது. அது இலங்கையில் தோட்டத்துறை நகர்ப்புறம், கிராமப்புறங்களில் வெடித்துள்ள வர்க்கப் போராட்டமும் வடக்கு—கிழக்கும் மக்கள் ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினரின் தேசிய விடுதலைப் போராட்டமும் இந்த அனைத்துலக தொழிலாளர் போராட்டங்களின் ஒரு பாகமாக வெடித்துள்ளதைச் சுட்டிக் காட்டுகின்றது. இலங்கை — தமிழீழம் சோசலிச குடியரசு ஒன்றியத்துக்காகப் போராடும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருவதன் மூலம் புரட்சித் தலைமையைக் கட்டியெழுப்பும் போராட்டத்தில் பங்கு கொள்ளும்படி தொழிலாளர் பாதை வேண்டுகின்றது.

# நவசமசமாஜ 'ஜன அரகலய' தலைவர் யூஎன்பியில் சேர்ந்தார்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாஜி தலைவரான அனுர பண்டாரநாயக்க அக்டோபர் 29ம் திகதி லண்டனில் இருந்து திரும்பியதும் ரூபா: 5/- சந்தா செலுத்தி, யூஎன்பியில் சேர்ந்து கொள்ளும் விண்ணப்பப் படிவத்தினை ஜனாதிபதி விஜேதுங்கவிடம் கையளித்த செய்தி முதலாளித்துவப் பத்திரிகைகளில் முன்பக்கத் தலைப்புச் செய்தியாக வெளியாகியது. இன்னும் ஓரிரு தினங்களில் இந்த அரசியல் குத்துக் கரணத்துக்கான சம்பத்தை இந்த தீவிர வலதுசாரி அரசியல்வாதி தட்டிக் கொள்ள இருக்கின்றார்.

தமது வர்க்க உறவாளிகள் இணைந்து நிற்பதன் அவசியத்தினால் உந்தித் தள்ளப்பட்டு உள்ளம் குளிர்ந்து போன பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சி.ல.சு.க. தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவையும், மகள் சந்திரிக்கா பண்டாரநாயக்காவையும் யூ.என்.பியில் சேர்ந்து விடும்படி அழைப்பு விடுத்துள்ளார். அனுர பண்டாரநாயக்க, ஏற்கனவே யூ என். பி. சதியில் மாண்டு போய்விட்டதாயும் கட்சியின் ஏனைய பாப்பாக்களையும் இந்தச் சதியை விட்டு விழிப்பாக இருக்கும்படியும் திருமதி பண்டாரநாயக்கா உபதேசம்செய்துள்ளார். இந்தச் சதிகார முதலாளித்துவத் தலைவி, கட்சி அடியோடு அடியுண்டு போகுமோ என கலங்கிப் போயுள்ளார்.

'கட்சி உள்ளேயான அவதூறுகளையும் அவமானங்களையும் இனியும் சகித்துக் கொள்ள முடியாது போனதாலேயே' வெளியேறும் முடிவுக்கு வந்ததாக அனுர பண்டாரநாயக்க கூறிக்கொண்டுள்ளார். உண்மையில் இது பொய்யானது; மோசடி நிறைந்தது. இலங்கை முதலாளி வர்க்கம் படுமோசமான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது 1951ல் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க யூஎன்பியில் இருந்து வெளியேறி, சி.ல.சு.க. வை நிறுவினார். ஏகாதிபத்தியவாதிகளால் இலங்கையில் திணிக்கப்பட்ட முதலாளித்துவ வர்க்க ஆட்சி ஒரு மோசமான நெருக்கடிக்குள்ளான காலகட்டத்தில் இது இடம்பெற்றது. அன்று ஒரு ட்ரொட்கிசக் கட்சியாக விளங்கிய லங்கா சமசமாஜ கட்சியைச் சூழ தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் அணிதிரண்டு வந்ததையிட்டு கலங்கிப் போன இலங்கை ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவினர் யூஎன்பிக்கு மாற்று முதலாளித்துவக் கட்சியாக சி.ல.சு.க.வை நிறுவினர்.

இன்று நான்கு தசாப்தங்கள் கடந்ததன் பின்னர் உலக முதலாளித்துவத்தின் அடிப்படை முரண்பாடுகள் மோசமடைந்து, பொருளாதார வீழ்ச்சியை நோக்கி உலகம் சென்று கொண்டுள்ள நிலையில் பழைய அமைப்பு சுவிழ்ந்து கொட்டியுள்ளது. இந்த உலக வெளிப்பாடுகள் இலங்கையினுள்ளும் தலை நீட்டியுள்ளதோடு ஏகாதிபத்திய முகாம் கோஷ்டி திரள்வுகளில் நுழையும் பதட்டம் இலங்கை முதலாளி வர்க்கத்தையும் பிடித்துக் கொண்டுள்ளது.

அமெரிக்கக் குடியரசுக் கட்சியின் மிக நெருங்கிய ஆதரவாளரான அனுரபண்டாரநாயக்கவை நவசமசமாஜக் கட்சித் தலைவர்கள் 'ஜன அரகலய' (மக்கள் போராட்டம்) வின் முன்னணித் தலைவராகக் காட்டி வந்துள்ளனர். இந்த மார்க்சிச விரோதியை பற்றிய ந.ச.ச.க பொதுச்செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்னவின் அரசியல் மதிப்பீட்டினை இந்தக் குத்துக்கரணக் காலத்தில் நினைவு கூர்வது அம்மதிப்பீட்டின் பிற்போக்கினை அடையாளம் காண நன்கு உதவும் நவசமசமாஜ 'ஹரய' பத்திரிகை கூறியது இதுதான்.

''நவசமசமாஜக் கட்சியின் தலைவர் தோழர். கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன கூட்டத்தில் பேசுகையில் பிரேமதாசவின் ஆட்சியை உடைத்து எறிய மார்க்சிசம், முதலாளித்துவம், சிங்களவர், தமிழர், முஸ்லீம், சிறிது, பெரிது வேறுபாட்டை நோக்காமல் எதிர்க்கட்சித் தலைவர் (அநுர பண்டாரநாயக்க) பல்வேறு கருத்துக்களைக் கொண்ட கட்சிகளை ஒன்று திரட்டியதை மதிப்பதாகவும் 53ன் மாபெரும் ஹர்த்தால் போன்ற ஒரு பிரமாண்டமான மக்கள் கிளர்ச்சிக்கான ஒரு முன்னோடியை இம்மேடை வழங்குவதாயும் கூறினார்.''

1992 ஜனவரி மாத 'ஹரய' குறிப்பிட்ட இந்தப் 'பிரமாண்டமான மக்கள் கிளர்ச்சி முன்னோடி' தலைவர் நவசமசமாஜ கட்சியின் 'ஜன அரகலய' அரசியலுடன் மிகவும் நெருக்கமான உறவு கொண்டவர். 'ஹெல உருமய'வும் பவைச் சேர்ந்த திலக் கருணாரத்ன போன்ற பேர்போன இனவாதிகளை அணிதிரட்டிக் கொண்டவர். நவசம

(13ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# பிரித்தானிய ஓடுகாலிகள் 'விடயம் தேடும்' தூதில் இலங்கைத் துரோகிகளுடன் தலைவாழை இலைச் சாப்பாடு

— விஜே டயஸ் —

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுச் செயலாளர் விஜே டயசினால் எழுதப்பட்ட இக்கட்டுரை, அமெரிக்க 'இன்டர்நஷனல் வேர்க்கர்ஸ் புலட்டீன்' பத்திரிகையில் 1993 நவம்பர் 22ம் திகதி வெளியானது. ட்ரொட்ஸ்கிசத்தில் இருந்து பிளவுண்ட பிரித்தானிய ஓடுகாலியான றிச்சட் பிறைசின் தொழிலாளர் அனைத்துலக லீக்கின் பிரதிநிதிகள் இருவர் இலங்கையினுள் நடாத்திய சுற்றுலா பற்றிய ஆய்வின் இறுதிப் பாகம் இது.

புசக, இனவாத மாகாண சபைத் தேர்தலுக்கு ஆதரவளிக்கும் விதத்தில் சந்தர்ப்பவாதிகளுடன் இணைந்து கொள்ளவில்லை. இந்தத் தேர்தல் தெற்கில் சிங்கள சோவினிசத்தை கொழுந்துவிட்டெரியச் செய்யும் ஊடகமாகவும் வடக்கு—கிழக்கில் வாழும் தமிழ் தேசிய இனத்தினரின் ஜனநாயக உரிமைகளை ஒழித்துக் கட்டும் ஒரு நடவடிக்கையாகவும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இனம் கண்டது. ஆதலால் அந்தத் தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி கோரிய பு.க.க. அந்த இலக்கில் போராடும் முகமாக பரந்தளவில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கும் —ஒரு தொடர் பகிரங்கக் கூட்டங்கள் நடாத்தும் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டது. எனவேதான் எமது கட்சி பிறைஸ் குழுவின் இரண்டு ஏஜண்டுகளுடனும் 'தோழமை கலந்துரையாடல்களில்' ஈடுபடுவதற்கு பதிலாக அந்தத் தேர்தலினுள் எமது கொள்கைப் பிடிப்பான பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டது. எவ்வாறெனினும் பிறைசின் ஏஜண்டுகள் வாலை மடக்கிக் கொண்டு புறப்பட்டதற்கு நாம் ஈடுபட்டிருந்த அரசியல் பணிகளின் நெருக்குவாரம் காரணம் அல்ல. தமது அலுவலகம், தளபாடம் மற்றும் அனைத்துக்கும் மேலாக தமது காரியாளர்களின் கோட்பாட்டு மட்டத்தினை சிந்தனைமுறையிலும் வேறு வழிகளிலும் எதிரி வர்க்க சக்திகளின் பாவனைக்கென விட்டுவைப்பது பாட்டாளி வர்க்க மார்க்சிசக் கட்சியின் பணி அல்ல. அதற்குப் பதிலாக முதலாளி வர்க்கத்தினதும் அதன் ஏஜன்டுகளினதும் சகல வகையான ஊடுருவல்களுக்கும் எதிராக ஈவிரக்கமற்ற முறையில் அவற்றைக் காக்கப் போராடுவதற்குத் தொழிலாளர் வர்க்க மார்க்சிசக் கட்சி சபதம் பூண்டுள்ளது.

சலிவன் பின்வருமாறு கூறுகிறார்: ''நாம் கொழும்பில் உள்ள புகக அலுவலகத்துக்கு சென்ற போதிலும் நாம் யார் என்பதை அறிந்தது தான் தாமதம் அவர்கள் எம்முடன் பேச மறுத்தனர். ஆதலால் துர்அதிஸ்டவசமாக இக் குழுவின் வேலைத்திட்டம் பற்றிய அறிக்கையை வழங்குவது எமக்கு முடியாது போயுள்ளது.'' ''இலங்கையில் மார்க்சிசம்'' பற்றிய அவர்களின் ஆய்வு முழுமனே பல்வேறு அமைப்பு தலைவர்களுடன் தலைவாழை இலைச் சாப்பாடாக இருந்தது. அசிங்கமான அதிகாரத்துவங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தியதன் மூலம் அவர்களின் வேலைத்திட்டங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டிக் கொள்ள வேறு எந்தவொரு விதிமுறைகளையும் கையான பிறைசின் ஏஜன்டுகள் முயன்றதாய் தெரியவில்லை.

பிறைசின் ஏஜன்டுகள் இலங்கையில் மேற்கொண்ட தூதின் இலக்கானது நாட்டின் பொருளாதார, அரசியல் நிலைமைகளைப் பற்றிய ஒரு புறநிலை ஆய்வினை செய்வதோ அல்லது பல்வேறு அரசியல் போக்குக்கள் பற்றி சுயாதீனமான ஒரு மதிப்பீட்டினைச் செய்வதோ அல்ல என்பது நன்கு தெளிவாகிறது. இலங்கையில் மார்க்சிசப் போக்குக்கும் சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சிக்கும் தாக்குதல் நடாத்த தேசிய சந்தர்ப்பவாத அதிகாரத்துவங்களிடையே ஒரு நண்பர்கள் குழுவைத் தேடிக் கொள்ள முயற்சிக்கவே அவர்கள் வந்தனர்.

புகக வின் 'குழுவாதத்தை' மேலும் நிரூபிக்கும் பொருட்டு சலிவன் நவசமசமாஜக் கட்சியைப் பற்றியும் அதன் வேலைத்திட்டம் பற்றியும் புகக வின் மதிப்பீட்டினை ஆழமாகத் தள்ளி வைக்கின்றார். அவர் எழுதுவது இதுதான்: 'ந.ச.ச.க, க்கு 'ஏகாதிபத்திய சார்பு பிரேமதாச ஆட்சியுடன் கருத்துவேறுபாடு' கிடையாது எனக் குறிப்பிட்ட கட்டுரை (இன்டர்நஷனல் வேர்க்கஸ் புலட்டீன்' பத்திரிகையில் 1993 மே 3ல் வெளியானது) 'இன்று ந.ச.ச.க. துரோகப் பாத்திரம் தனது ஏகாதிபத்தியத் திட்டங்களுக்கு ஆதரவாக ஜேவீபி அழிபாடுகளில் இருந்து பாசிச—இராணுவ சக்தியை கட்டியெழுப்புவதே' என உறுதியாகக் குறிப்பிட்டது. இங்கு சலிவன் அறிவையும் புத்தியையும் வீசி எறிந்துவிட்டு இந்த ஆய்வை 'அறிவற்ற கூச்சல்' எனக் குறிப்பிடுகின்றார்.

ல.ச.ச.க. யைப் போன்று ந.ச.ச.க. யும் தனது சந்தர்ப்பவாதத்தினை நியாயப்படுத்தும் பொருட்டு ஐக்கிய சோசலிச முன்னணியுள் தமது பங்களிப்பை நியாயப்படுத்தும் பொருட்டு வர்க்க ஆய்வினை மாசுபடுத்துவதாகவும், ந.ச.ச.க. இலங்கை மக்கள் கட்சியை (SLMP) 'புதிய தொழிலாளர் வர்க்க மக்கள் முன்னணியாக' தூக்கிப்பிடிப்பதாகவும் சலிவனே ஒப்புக் கொள்ளும்படி நெருக்கப்பட்டுள்ளார். ந.ச.ச.க. யானது தொழிலாளர் வர்க்கத்தினை ஏமாற்றும் பொருட்டு பாட்டாளி வர்க்க அபிவிருத்திகளில் இருந்து விழிப்படைந்து பூச்சிட்டுக் கொண்ட ஒரு முதலாளித்துவக் கட்சியென்றாலும், அத்தகைய சந்தர்ப்பவாதிகள் பற்றி எதுவிதமான அரசியல் முடிவுக்கும் வந்து விடக் கூடாது என சலிவன் எச்சரிக்கின்றார்.

சலிவன் ந.ச.ச.ச.வைப் பாதுகாப்பது மட்டுமன்றி இரத்தம் தோய்ந்த இந்திய—இலங்கை உடன்படிக்கையைத் தயார் செய்வதில் யூ.என்.பி. ஆட்சியுடன் இக்கட்சியின் ஒத்துழைப்பை மூடிமறைக்கும் பொருட்டு அதிக தூரம் சென்றுள்ளார். முதலாளித்துவ மக்கள் கட்சி (SLMP) ஜனாதிபதி பிரேமதாசவின் அப்பட்டமான கைத்தேங்காயாக மாறியதை அவர் சுட்டிக் காட்டுவதாய் இல்லை. ந.ச.ச.க. யின் நிச அரசியல் 'றெக்கோர்ட்' பற்றி சலிவன் விழிப்புடன் மௌனம் சாதிக்கின்றார்.

## தமிழ் தேசிய இனப் பிரச்சினை

தமிழ் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக பிறைஸ் குழு ந.ச.ச.க. யில் இருந்து வேறுபடுகின்றது. எவ்வாறெனினும் அவர்களிடையேயான வேறுபாடு முழு நட்புரீதியான கருத்துவேறுபாடாகும். வர்க்க அர்த்தத்தில் பார்க்குமிடத்து அவை எந்த விதத்திலும் கொள்கைரீதியானவை அல்ல. சலிவன் கூறுவது இதுதான்: ''தமிழ் தேசிய இனப் பிரச்சினை சம்பந்தமாகப் பார்க்குமிடத்து ந.ச.ச.க. யின் நிலைப்பாடு இனிப்பு (சீனி போளா) நிலைப்பாட்டை பிரதிநிதித்துவம் செய்கின்றது.'' அவர் பேசுவது கற்கண்டைப் பற்றி அல்ல; நவசமசமாஜக் கட்சியின் அரசியல் சுற்றுமாற்றைப் பற்றியதாகும் என நாம் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். சலிவனின் படி ந.ச.ச.க. ''பிரிந்து செல்வது வரை, அதுவும் உட்பட தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை நிபந்தனையின்றி பாதுகாத்தது''. அவர் மேலும் கூறுவதாவது: 'ந.ச.ச க. இணைக்கப்பட்ட வடக்கு—கிழக்கு மாகாணங்களின் பிராந்திய சுயாட்சிக்கு' ஆதரவளிப்பதாக கூறுகின்றார்.

இந்தச் சுயாட்சி திட்டமானது உண்மையில் இலங்கையினுள் இனவாத ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியை நடாத்தும் பொருட்டு இந்திய—இலங்கை உடன்படிக்கையில் சிபார்சு செய்யப்பட்டதாகும். ந.ச.ச.க. இந்த 'தீர்வை' விமர்சனமின்றியே கடன் எடுத்துள்ளது. நவசமசமாஜக் கட்சிக்கு ''ஏகாதிபத்தியச் சார்பு யூ.என்பி அரசாங்கத்துடன் கருத்து வேறுபாடு கிடையாது'' என்பதை நிரூபிக்க இது போதுமான சாட்சி இல்லையா? ந.ச.ச.க. இனவாத சிங்கள ஆட்சியாளர்களுடன் அணிதிரண்டு கொண்டுள்ள வேளையில் பிறைஸ் குழு தமிழ் முதலாளி வர்க்கத்துக்கு ஆதரவு வழங்குகின்றது. இந்த இரண்டு நிலைப்பாடுகளும் ஒன்றுடன் ஒன்று ஒத்துப் போகாதது போல் தோன்றினும் அவை இலங்கையை மீண்டும் காலனித்துவ மயமாக்கும் ஏகாதிபத்திய திட்டங்களின் பொது அத்திவாரத்தில் நின்று கொண்டுள்ளன.

## மார்க்சிசமும் தேசியப் பிரச்சினையும்

சலிவன் கூறுவதாவது: ''எமக்குத் தோன்றுவது போன்று பிரிந்து செல்லும் கோரிக்கைக்கு இன்னமும் பெரும்பான்மையினரின் ஆதரவு கிடைக்கவில்லையாயின் (ந.ச.ச.க.) நிலைப்பாடு பொருத்தமானது. ஆனாலும் திட்டவட்டமாக வடக்கு—கிழக்கு மாகாணங்களின் தமிழ் மக்களின் பெரும்பான்மையினருக்கு வேறான ஒரு அரசு அவசியமாயுள்ளதோடு இப்பிரச்சினையின் அடிப்படையில் கடந்த ஒரு தசாப்பம் பூராவும் பிரமாண்டமான யுத்தமும் நடைபெற்றுக் கொண்டுள்ளஒரு நிலைமையில் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் பிரிந்து செல்லும் கோரிக்கைக்கு நடைமுறை ஆதரவை வழங்குவது அவசியம். நான் கருதுவது போல் தேசிய இனப் பிரச்சினை தொடர்பான மார்க்சிசத்தின் 'அ', 'ஆ' அது தான்.''

சலிவன் தாம் இன்னமும் மார்க்சிசத்தின் 'அ','ஆ'வை கற்றுக் கொள்ளவில்லை என்பதையும் அவர் தமிழ் தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாக அறிந்தது சொற்பமே என்பதையும் நிரூபித்துக் கொண்டுள்ளார். ''வடக்கு—கிழக்கு மாகாணங்களின் தமிழ் மக்களில் பெரும்பான்மையினருக்கு தனியான ஒரு அரசு அவசியம்'' என்ற தீர்க்கமான முடிவுக்குத் தாம் வந்தது எப்படி என்பதை அவர் வாசகர்களுககு கூறுவதாய் இல்லை. என்றாலும் தனியான அரசு என்பதன் மூலம் பிறைஸ் குழு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இராணுவ நடவடிக்கைகளின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படும் தமிழ் முதலாளித்துவ அரசு என்பதையே கருதுகின்றது என்பதை மேற்சொன்ன நிலைப்பாடு தெளிவுபடுத்துகின் ) து.

இலங்கையின் யுத்தம், விடுதலைப் புலிகளின் வர்க்கப் பார்வை சிங்கள முதலாளி வர்க்கத்தின் வர்க்கப்பார்வையில் இருந்து அவ்வளவுக்கு வேறுபட்டதல்ல என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. இலங்கை முதலாளித்துவ அரசின் இனவாதத் தாக்குதல்களுக்கு எதிராகத் தமது தற்பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளுமாறு தமிழ் மக்கள் நெருக்கப்பட்டுள்ளார்கள் என்பது உண்மை; என்றாலும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இராணுவத் திட்டங்கள் முதலாளித்துவ தேசியவாத வேலைத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இது முற்றுமுழுதாக தமிழ் தொழிலாளர்கள், ஏழைகள் மீதான தமிழ் முதலாளி வர்க்கத்தின் பிடியைப் பலப்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது என்பதைப் பூதக் கண்ணாடி வைத்துப் பார்க்க வேண்டியதில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் தனியான ஒரு தமிழீழ அரசினை நிறுவிக் கொண்டால் அது வேறு எந்தவொரு கொம்பிரதோர் (தரகு முதலாளித்துவம்) ஆட்சியாளரையும் போலவே ட்ரான்ஸ் நஷனல் கம்பனிகளுக்கு தமிழ் மக்களை இலாப உழைப்பாகப் பலியிடுவதாக இருக்கும். இன்றைய முதலாளித்துவ உலகளாவிய உற்பத்தி முறையின் கீழ் அபிவிருத்தி பற்றிய எந்தவொரு தேசிய வேலைத்திட்டத்தினையும் அமுல் செய்ய முடியாது போயுள்ளதால் இது தவிர்க்க முடியாதது.

## தேசிய இன பரிசுத்தம்

தேசிய இன பரிசுத்தத்தின் அடிப்படையிலான ஒரு புதிய அரசினை நிறுவும் கருத்துப்பாடு கொம்பிரதோர் முதலாளி வர்க்கத்தினால் தேடிக் கொள்ளப்பட்ட ஒரு சூழ்ச்சியாகும். அதன் ஒரே இலக்கு இலாபத்தைத் தேடி உலகம் பூராவும் அலைகின்ற

(12 ம் பக்கம் பார்க்க)



எட்மண்ட் சமரக்கொடி

படிப்பகம்

www.padippakam.com

# பிரித்தானிய ஓடுகாலிகள் 'விடயம் தேடும்'...

(11 ம் பக்கத் தொடர்ச்சி)

ஏகாதிபத்திய நிதி மூலதனத்தின் நலன்களுக்கு மிகவும் சிறந்த முறையில் சேவை செய்யும் பொருட்டு தொழிலாளர்களை தேசிய இனக் கோட்டின் ஊடாக பிரிப்பதாகும். இந்த தேசியவாத அபிலாசைகள் தேசிய விடுதலைக்கு அன்றி ஏகாதிபத்தியத்துக்கு தேசிய ரீதியில் அடிபணிய இட்டுச் செல்கின்றது. இலங்கையினுள் சிங்கள முதலாளி வர்க்கம் முயற்சிப்பது இதற்கே. விடுதலைப் புலிகள் தம்மைப் பொறுத்தமட்டில் தமது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பிராந்தியங்களில் சிங்கள, முஸ்லீம் மக்களை கலைத்ததன் மூலம் இந்தப் பிற்போக்குச் சொள்கையை ஏற்றுக் கொண்டுள்ளது.

இரண்டு தேசிய இனங்களையும் சேர்ந்த தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் இலங்கையில் அல்லது தமிழீழத்தில் இனரீதியில் பிரிக்கப்பட்ட முதலாளித்துவ அரசினுள் அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் இலங்கை ஆட்சியாளர்களின் இனவாத யுத்தத்தைப் பலமாக எதிர்ப்பதோடு இந்தியத் துணைக் கண்ட சோசலிச குடியரசு ஒன்றியத்தின் ஒரு பாகமாக - மக்களுடனான புரட்சிகர கூட்டினுள் சிங்கள—தமிழ் தொழிலாளர்களின் ஐக்கியத்தின் ஊடாக வெற்றி கொள்ளப்படும் தமிழீழம்--இலங்கை சோசலிச குடியரசு ஒன்றியத்துக்குப் போராடுகின்றது. தமிழ் மக்கள், சிங்கள—தமிழ் முதலாளித்துவ ஆட்சியாளர்களால்—சிறப்பாக 'சுதந்திரத்தின்' பின்னர் தமது தேசிய ஜனநாயக உரிமைகள் மீறப்பட்டதற்கு எதிர்ப்புக் காட்டவே தமது போராட்டத்தினை ஆரம்பித்தனர். 1950 பதுகளில் தேசிய பாகுபாடும் ஒடுக்குமுறையும் உக்கிரம் கண்டதற்குச் சமாந்தரமாக இந்தப் போராட்டம் உக்கிரம் அடைந்தது.

இந்த முழுக் காலப்பகுதியினுள்ளும் தமிழ் தொழிலாளர்கள் தொழிலாளர் வர்க்கத்தினை இனவாதக் கோட்டின் ஊடாகப் பிரித்துப் போட தேசிய இனங்கள் இரண்டினதும் முதலாளிகள் எடுத்த முயற்சிகளை எதிர்த்துப் போராடியதோடு ஒரே அரசியல், தொழிற்சங்க அமைப்பினுள் சிங்களத் தொழிலாளர்களுடன் இணைந்திருந்தனர். இக்காலப் பகுதி முதலாளித்துவக் கட்சிகளுக்கு எதிராக லங்கா சமசமாஜக் கட்சி சிங்கள, தமிழ் தொழிலாளர்களதும் ஒடுக்கப்படும் மக்களதும் பரந்த ஆதரவினைக் கொண்டிருந்த காலப் பகுதியின் உச்சக்கட்டத்தைக் குறிக்கின்றது.

## 1964 கூட்டரசாங்க காட்டிக் கொடுப்பு

எனினும் 1964ல் முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டரசாங்கத்தில் இணைந்ததன் மூலம் உச்சக் கட்டத்தினை அடைந்த ல.ச.ச.க.யின் திரிபுவாத நாற்றமெடுப்பு இந்நிலைமையைச் சிருஷ்டித்தது. ல.ச.ச.க. முதலாளித்துவ சிங்கள அரசின் பொறுப்பை ஏற்றுக் கொண்டு தேசிய ஒடுக்குமுறையைச் சட்டமாக்கிய அரசியலமைப்பினை தயாரிப்பதில் பங்குகொண்டது. 1964ல் கூட்டரசாங்க காட்டிக் கொடுப்பின் பின்னர் 'பாரம்பரிய இடது' தம்மைக் கைகழுவி விட்டுள்ளது என்பதை தமிழ் மக்கள் உணர்ந்தனர். இந்த மனோபாவத்தின் அடிப்படையில் நின்று தமிழ் தேசிய இனத்துக்கு தனியான ஒரு அரசு தொடர்பான பிற்போக்கு கூப்பாட்டில் இறங்குவது தமிழ் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ அரசியல் இயக்கங்களுக்குச் சாத்தியமாகியது, ஆயுதப் போராட்டத்தில் இறங்கிய குட்டி முதலாளித்துவக் குழுக்கள் படிப்படியாகத் தமிழ் தேசிய ஜனநாயக உரிமைக்கான போராட்டத்தினுள் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தன. அவர்களின் வர்க்க அபிலாசைகளுக்கும் தேசிய முதலாளி வர்க்க வேலைத் திட்டங்களுக்கும் ஏற்ப இந்தத் தமிழ் குட்டி முதலாளித்துவ குழுக்கள் அனைத்தும் ஆதரவை நாடியது இந்திய, இலங்கை தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களிடமிருந்தல்ல; மாறாக இப்பிராந்தியத்தில் ஏகாதிபத்தியத்தின் முக்கிய பொலிஸ்காரனாக சேவை செய்து வந்த இந்திய முதலாளி வர்க்கம் பக்கம் அவை திரும்பின. இந்த அவமானத்துக்குரிய திருமணத் தரகராகப் பணிபுரியும் பொருட்டு தமிழ் நாட்டின் தேசிய முதலாளி வர்க்கத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

தமிழ் குட்டி முதலாளித்துவ அமைப்புக்கள் அனைத்தும்—இவற்றின் உச்சியில் இருந்த விடுதலைப் புலிகள் உட்பட-- ஏகாதிபத்தியத்திடமிருந்தோ அல்லது இந்திய, இலங்கை முதலாளித்துவ ஆட்சியாளர்களிடமிருந்தோ எதுவிதமான சுயாதீனத்தையும் கொண்டிருக்க இலாயக்கற்றவை என்பதை வெளிக்காட்டிக் கொண்டன. இலங்கை. இந்திய ஆயுதப்படைகளுக்கு எதிராக இராணுவ தாக்குதல்களினை நடாத்திய போதிலும் விடுதலைப் புலிகள் இந்திய. இலங்கை ஏகாதிபத்தியச் சார்பு ஆட்சியாளர்களுடன் இடைவிடாத பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர். இப்பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த நிலையின் கீழ் இன்று விடுதலைப் புலிகள் ஐக்கிய நாடுகள் சபையின்—தலையீட்டுக்கு அழைப்பு விடுத்துள்ளது. அந்த ஐ.நா. வேலைத்திட்டத்தின் காட்டுமிராண்டித் தன்மை ஈராக், சோமாலியா, கம்போடியா முதலான நாடுகளினுள் ஏற்கனவே அம்பலமாகியுள்ளது. தனிநாட்டுக்கான பிறைஸ் குழுவின் பிரச்சாரம். தமிழ் முதலாளி வர்க்கத்தின் இந்த ஏகாதிபத்தியச் சார்புத் திட்டத்துக்கு முற்றிலும் பொருத்தமானது. பாரதூரமான விளக்கம் இன்மை காரணமாக பிறைஸ் குழு, தமிழ் தேசிய இனப் பிரச்சினை தொடர்பான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக நிலைப்பாட்டிற்குத் தாம் ஆதரவளிப்பதாகக் காட்டிக் கொண்டுள்ளது. அது அனைவரையும் குழப்பத்திலாழ்த்த மட்டுமே சேவைபுரிவதால் நாம் அத்தகைய ஆதரவினை ஒரேயடியாக நிராகரிக்கின்றோம். எமது நிலைப்பாடு நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட மார்க்சிச நிலைப்பாடாகும். உலகளாவிய ரீதியில் தொழிலாளர் வர்க்கத்தினால் தலைமை தாங்கப்படும் சோசலிசப் புரட்சியின் வடிவினுள் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் ஜனநாயகக் கோரிக்கைகளுக்கான தீர்வுக்காக நாம் போராடுகின்றோம்.

புகக வின் போராட்டமானது தனியொரு ஈழம் அரசை நிர்மாணிப்பது அல்ல; இந்திய துணைக்கண்ட சோசலிசக் குடியரசு ஒன்றியத்தின் ஒரு பாகமாக இலங்கை—தமிழீழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தினை நிர்மாணிக்கும் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் சிங்களத்—தமிழ் தொழிலாளர்களை ஒன்றிணைத்து ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டுவதே. ஜனநாயகப் பணிகளைத் தீர்த்து வைக்கும் எமது போராட்டத்தின் அடிப்படை, முதலாளி வர்க்கத்தினதும் சகல வகையான தேசிய சந்தர்ப்பவாதிகளதும் நிலைப்பாட்டிற்கு எதிரான பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதமாகும்.

Socialist Labour League and Young Socialists picket

**Stop the bloodbath in Sri Lanka!**

*Demand the ACTU blackban trade with Sri Lanka!*

*Demand the Laborites halt all aid to the Premadasa regime!*

**Sri Lankan Consulate**
**500 George St, Sydney**
**Friday December 14, 10am - 4pm**

றிச்சாட் பிறைசின் இலங்கைத் 'தோழர்கள்' புறமுதுகு காட்டிய ஜேவிபி பாசிசத்துக்கும், யூஎன்பி அரச பயங்கரத்துக்கும் எதிரான புகக ஐக்கிய முன்னணிக்கு ஆதரவான அவுஸ்திரேலிய ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் பிரச்சார இயக்கம்

### ந.ச.ச.க. யின் 'அனைத்துலகவாதம்'

சலிவனின் பெரும் பாராட்டுக்களைத் தட்டிக் கொள்ளும் ந.ச,ச.க. யின் 'அனைத்துலகவாதம்' பக்கம் நாம் இனித் திரும்புவோம். ''ஐக்கிய செயலகத்தினுள் ந.ச,ச,க. அங்கத்துவத்தின் ஒரு துளியேனும் உண்டு என்பதில் சந்தேகம் இல்லை'' எனச் சலிவன் குறிப்பிடுகின்றார். ஆனால் அவ்வாறு கூறி வாயை மூடியதுதான் தாமதம் அவர் இதையும் ஒப்புக் கொள்கிறார்; ''ந.ச.ச.க. வுக்கான ஐக்கிய செயலகத்தின் முக்கிய கோரிக்கையானது தத்தமது நாடுகளினுள் தாம் விரும்பிய எதையும் செய்வதற்கு அதன் கிளைகளுக்கு இடமளித்து, ஜனநாயக மத்தியஸ்தத்தின் மையச் சாராம்சத்தையே நிராகரிப்பதன் உள்ளேயே இருந்து கொண்டுள்ளது. ஐக்கிய செயலகத்தின் தலைமையைப் பற்றிக் கணக்கில் எடுக்கும் இடத்து கொடுக்கல் வாங்கல்களில் அவர்களின் பங்கானது இலங்கையினுள் பரந்த கிளையைக் கொண்டுள்ள பெருமையை அனுபவிப்பதாகும். இவை அனைத்தும் அகிலத்துக்கும் ல.ச.ச.க. வுக்கும் இடையே பல வருடகாலமாக இருந்து வந்துள்ள தொடர்பினைப் புனர்நிர்மாணம் செய்வதற்குப் பெரிதும் சமானமானதாகும்.''

எவ்வாறெனினும் ந.ச.ச.க. ஐக்கிய செயலகத்தில் சேர்த்து கொண்டது, பப்லோவாத திரிபுவாதத்தின் எதிர்ப்புரட்சி தன்மையைப் பற்றி இன்னமும் சில குழப்பங்கள் இருந்துவந்த 1950 பதுகளில் அன்றி, பேராசிரியர் மண்டேல் உலக ஏகாதிபத்தியத்துக்கு தமது கீழ்ப்படிவினை அம்பலமாக்கி அதிக காலங்களின் பின்னர்—1980 பதுகளின் இறுதியிலாகும். இன்று மண்டேல் தலைமைதாங்குவது தேசிய சந்தர்ப்பவாதத்தினதும் தத்தம் நாடுகளினுள் முதலாளித்துவ அரச கட்சிகளுடன் அணிதிரள்வதன் அடிப்படையில் இணைந்து கொண்டுள்ள அமைப்புகளின் ஒரு சம்மேளனத்துக்காகும். நவசமசமாஜக் கட்சியை வென்றெடுத்ததன் மூலம் மண்டேல் பெரும் பரிசைக் கைப்பற்றியுள்ளதாக பிறைஸ் குழுவுக்கு தோன்றுகின்றது. உண்மையில் அதற்குக் காரணம் அது பெரும் கிளையாக இருப்பது அல்ல. சலிவனின் மனதைப் பெரிதும் ஈர்த்துள்ளது ந.ச.ச.க, தலைமையாகும், அதற்கு அவர்களின் அரசியல், வேலைத்திட்டம் காரணம் அல்ல. சில தலைவர்கள் மனதைக் கவர்பவர்களாக இருந்ததே காரணம். ந.ச.ச.க. தலைவர் வாசுதேவ நாணயக்காரவுடன் இடம்பெற்ற தமது சந்திப்பைத் தூக்கிப் பிடித்து எழுதுகையில் அவர் கூறுவதாவது:''ந.ச.ச.க.வின்அரசியல் எதிரிகள் கூட தோழர். வாசுவை 'நிஜ போராளி' என அழைப்பதோடு, அவர் அந்தளவுக்கு எமது இதயத்தைக் கவர்ந்ததற்கும் அதுவே காரணம்.''

1986—87ல் பிறைசின் 'தோழர். வாசு' ஜயவர்தன அரசாங்கத்தின் வட்டமேசை பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டு இந்திய—இலங்கை உடன்படிக்கைக்கு ஆதரவு வழங்கினார். 1990 ஜூலையில் தமிழ் தேசிய இனத்துக்கு 500 கோடி ரூபா குறைநிரப்பு வரவு-செலவுத் திட்டத்தினை நிறைவேற்ற அவர் ந.ச.ச.க. பாராளுமன்ற உறுப்பினராக யூஎன்பி யுடன் இணைந்து கொண்டார். அந்தவிதத்தில் நாணயக்கார 'நிஜ போராளி' மட்டுமல்ல இலங்கைத் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை எதிர்த்து போராடுவதிலும் அவர்களை கொன்று தள்ளுவதிலும் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தாராளமாக உதவியும் உள்ளார்.

மண்டேலின் பிற்போக்கு அரசியலும் ந. ச, ச. க. யின் முதலாளித்துவச் சார்பு சந்தர்ப்பவாதமும் அம்பலமாகுவதால் பிறைசும் சலிவனும் 'தொழிலாளர் குரல் தோழர்கள்' என்ற இல்லாததொரு குழுவின் கீர்த்தியை கட்டியெழுப்பும் வேலையில் இறங்கியுள்ளனர். இந்த அணிதிரள்வுக்கான அரசியல் அடிப்படை என்ன? தத்தம் நாடுகளில் தொழிலாளர் இயக்கத்தினுள் சந்தர்ப்பவாதத்தினைப் பராமரிக்கும் பொருட்டு மிகவும் நெருங்கிய ஒத்துழைப்பினைப் பெறுவதில் இவர்கள் இணைந்து கொண்டுள்ளனர். பிரித்தானியாவிலும் இலங்கையிலும் உள்ள இந்த குட்டி முதலாளித்துவ குழுக்கள் இரண்டினையும் இணைத்து வைத்துள்ள நாற்றமெடுத்த தேசிய சந்தர்ப்பவாதத்தின் ஒரு உதாரணத்தினை மட்டும் நாம் ஆராய்ந்து பார்ப்போம். 1988—89 காலப்பகுதியில் ஜேவிபி பாசிச பயங்கரத்துக்கு எதிராகவும் யூஎன்பி அரச ஒடுக்குமுறைக்கு எதிராகவும் போராடும் பொருட்டு தொழிலாளர் வர்க்கத்தினைப் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் அனைத்துக் கட்

(13 ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



## இந்தியா:

# ட்ரொட்ஸ்கிசத் தொழிலாளர் வேட்டைக்கு தொழிற்சங்கத் தலைவர்கள் முண்டு

இந்திய ட்ரொட்ஸ்கிச சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் அங்கத்தவரும் சென்னை பீ அன்ட் சீ ஆலை தொழிற்சங்கச் செயற்குழு உறுப்பினருமான மோசஸ் ராஜ்குமார் பொய்க் குற்றச்சாட்டின் பேரில் ஆலை நிர்வாகிகளால் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டு ஒரு வருடமும் மாசமும் கழிந்து விட்டது. இக்காலப்பகுதியுள் அம்பலத்துக்கு வந்த தகவல்களின் படி, ஸ்டாலினிச இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்)கட்சி (சிபிஐ(எம்)) யின் தொழிற்சங்கம் உட்பட்ட தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் இந்த வேட்டைக்கு முண்டுகொடுத்து, முதலாளிகளின் கோபரேட்வாத ஏஜன்சியாக தொழிற்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

சி.பி.ஐ(எம்), காங்கிரஸ், தி. மு. க, அ. தி. மு. க முதலான கட்சிகளின் தொழிற்சங்கத் தலைவர்கள் மோசசைக் காப்பாற்றும் பொருட்டு சோசலிசத் தொழிலாளர் கழகம் மேற்கொண்டுள்ள பிரச்சாரத்தினை எதிர்த்துள்ளதோடு, மோசசின் சார்பில் சகதொழிலாளர்கள் சாட்சியமளிக்க முன்வராவண்ணமும் தடுத்துள்ளனர். தலைவர்களின் இத்துரோகப் பாத்திரத்தினை அம்பலப்படுத்தி பீ அன்ட் சீ கம்பனி நுழைவாயில் அருகே தொழிலாளர்களுக்கு விடயங்களைத் தெளிவுபடுத்துவதில் ஈடுபட்டிருந்த தோழர். மோசசை தாக்கவும் ஸ்டாலினிச தொழிற் சங்க தலைவர்கள் மிரட்டியுள்ளனர்.

மோசசுக்கு எதிராக நிர்வாகம் சோடித்துள்ள குற்றச்சாட்டு, மேற்பார்வையாளரைத் தாக்கினார் என்பதாகும். மோசஸ் இக்குற்றச்சாட்டை நிராகரித்துள்ளார். உண்மையில் மோசசுக்கு எதிரான இவ்வேட்டை, இந்திய சந்தையை ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகள் பலிகொண்டுள்ள நிலைமையில் நெருக்கடி மேல் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுவரும் பீ அன்ட் சீ ஆலை முதலாளிகள், தொழிலாளர்களை அடியோடு நடுத்தெருவில் தள்ளும் முயற்சியின் ஒரு பாகமாகும். பக்டரி தொழிலாளர்களிடையே ஒரு ட்ரொட்ஸ்கிஸ்டு இருப்பது தமது திட்டங்களுக்கு எதிராகத் தொழிலாளர்களை அணிதிரட்டுவதற்கு வாய்ப்பாகலாம் என்பதை நிர்வாகிகள் அறிவர். கடந்த அக்டோபர் 30ல் ஆலை நிர்வாகிகளுக்கும் தொழிற் சங்க தலைவர்களுக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடலில் பேசிய ஆலை அதிபர். மோசஸ் துண்டுப் பிரசுரம் விநியோகித்துக் கொண்டும், நுழைவாயில் அருகே கூட்டம் நடாத்திக் கொண்டும் 'தொழிலாளர் பாதை'க்கு எழுதிக்கொண்டும் வருகின்றதொரு நிலையில் அவரைத் திரும்பவும் வேலைக்கு எடுக்க முடியாது என்றுள்ளார். கம்பனியையும் 'உங்களையும்' (தொழிற் சங்கத் தலைவர்கள்) மோசஸ் விமர்சனம் செய்து கொண்டுள்ளதாக ஆலை அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து சம்பளத்தில் முக்கால்பங்கை வழங்கிக் கொண்டு மோசசை வைத்திருக்க முடியாது என அதிபர் குறிப்பிட்ட வேளையில் தொழிற்சங்கத் தலைவர்கள் தாம் அம்பலமாகலாம் என்ற அச்சத்தினால், 1703 தொழிலாளர்களை நீக்குவதற்கு தொழிற் திணைக்களத்தின் அனுமதி கிடைக்கும் வரையும் நிர்வாகத்தை பொறுத்திருக்கும் படி வேண்டியுள்ளனர். நவம்பர் 17ம் திகதி சுயவிருப்பின் பேரில் தொழிலாளர்களை ஒய்வு பெறச் செய்யும் திட்டத்தை தாம் அங்கீகரிப்பதாக தொழிற் சங்கத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். இந்த அறிவித்தல் விளம்பரப் பலகையில் போடப்பட்டுள்ளது. மோசஸ் இந்த ஓய்வுத் திட்டம் எனப்படுவதன் காட்டிக் கொடுப்பை விமர்சித்ததோடு இந்திய ஸ்டான்டர்ட் மோட்டார் கம்பனி போன்ற இடங்களில் தொழிலாளருக்கு ஏற்பட்டுள்ள தலைவிதியையும் தொழிலாளர்களுக்கு தெளிவுபடுத்தினார். இதனால் குழம்பிப்போன ஸ்டாலினிச கட்சி அங்கத்தவரான முனிசாமி என்ற பேர்வழி, மோசசை தாக்க முயன்ற போதிலும் அது தொழிலாளர் தலையீட்டினால் தடுக்கப்பட்டது.

தி.மு.க, தொழிற்சங்கத் தலைவரின் ஆலோசனை என்ன தெரியுமா? 1 இலட்சம் ரூபாவை ஒய்வூதிய திரட்டிய கொடுப்பனவாக பெற்றுக்கொண்டு வெளியேறு! ஆலை முதலாளிகளின் ஏஜன்டாக செயற்படும் இவரின் யோசனையையும் மோசஸ் நிராகரித்துள்ளார். ஸ்டாலினிஸ்டுகள் உட்பட தொழிற் சங்கத் தலைவர்களின் காட்டிக்கொடுப்பை அம்பலப்படுத்தி, மோசசை நிபந்தனையின்றி சேவையில் சேர்க்கும் படி இந்திய ட்ரொஸ்கிஸ்டுகள் பிரச்சாரம் செய்து வருகின்றார்கள்.

# பிரித்தானிய ஓடுகாலி...

(12 ம் பக்கத் தொடர்ச்சி)

சிகளதும் ஐக்கிய முன்னணியை அமைக்க வேண்டும் என்ற பிரச்சாரத்தில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஈடுபட்டது. பிரித்தானியாவினுள் பிறைஸ் குழு புககவுக்கும் அனைத்துலகக் குழுவுக்கும் தாக்குதல் தொடுக்கும் அதே சமயம் இந்தப் பிரச்சாரத்துக்குத் தனது வாயளவிலான ஆதரவினைத் தெரிவித்துக் கொண்டது. லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் முன்னால் இடம்பெற்ற மறியலில் சேர்ந்து கொள்ளும்படி நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பிரித்தானியக் கிளையான இன்டர்நஷனல் கம்யூனிஸ்ட் கட்சி (ICP) தமக்கு அழைப்பு விடுக்காதது பற்றி இந்த பிறைஸ் குழு பெரும் முறைப்பாடு செய்தது.

இலங்கையினுள் அவர்களின் புதிய சகாக்கள் அந்தச் சந்தர்ப்பத்தில் செய்தது என்ன? 'தொழிலாளர் குரலின்' வெளியீட்டாளர் அன்று பேர்போன பப்லோவாதியான எட்மண்ட் சமரக்கொடியுடன் இணைந்திருந்தார். அவர் சமரக்கொடியில் இருந்து பிளவுண்டது 1991ல் ஆகும். சமரக்கொடி குழு ஐக்கிய முன்னணி யோசனையை ஒரேயடியாக நிராகரித்தது. சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ மற்றும் அதிகாரத்துவங்கள் ஜேவீபியை எதிர்த்து போராடுவதாகக் கூறிக் கொண்டு அரச படைகளுடன் அப்பட்டமாக இணைந்து கொண்டதோடு, சமரக்கொடி ஜேவீபி மிரட்டலின் கீழ் சகல அரசியல் நடவடிக்கைகளையும் கைகழுவி விட்டார். ஜேவீபி பாசிஸ்டுகளுக்கு எதிராக இலங்கையினுள்ளும் அவ்வாறே அனைத்துலகிலும் தொழிலாளர்களை அணிதிரட்டுவது தொடர்பாக புககவையும் அனைத்துலகக் குழுவையும் கண்டனம் செய்யும் அளவுக்கு சமரக்கொடி சென்றார், 1989ல் நியூயோக் நகரில் அவரையொத்த திரிபுவாதிகளின் ஒரு குட்டிக் கூட்டத்தில் பேசிய சமரக்கொடி, புகக அரசியல் அதன் காரியாளர்களை ஜேவீபி தாக்குதல்களுக்கு அம்பலமாக்கியுள்ளது என்றார். ஆதலால் பாசிச துப்பாக்கியாளர்களின் கைகளில் புகக அங்கத்தவர்கள் மூவர் இறந்ததையிட்டு புகக பொறுப்புச் சொல்ல வேண்டும் எனக் கூறினார்.

ஜேவீபி அங்ஙனம் செய்யும் படி அவருக்குக் கூறியதும் அவர் சகல அரசியல் நடவடிக்கைகளையும் நிறுத்திக் கொண்டார், இந்தப் பயந்தாங்கொள்ளி கடைகெட்ட நிலைப்பாடு காரணமாக இலங்கையினுள் பிறைஸ் குழுவின் சகாக்களின் நிஜ சுயரூபம் வெளிப்படுகின்றது. அவ்வாறே புகக ஐக்கிய முன்னணி பிரச்சாரம் தொடர்பாக பிறைசுக்கு இருந்ததாகச் சொல்லப்படும் அக்கறையின் கடைகெட்ட தன்மையும் அம்பலமாகின்றது.

புகக, பிறைஸ் குழுவின் தேசிய சந்தர்ப்பவாதப் பொய்யர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் தமது காலத்தை வீணடிக்க ஆயத்தமில்லாதது மட்டுமன்றி பாட்டாளிவர்க்க அனைத்துலகவாத வேலைத்திட்டத்தினைபேணுவதில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினதும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினதும் போராட்டவரலாறு, அனைத்து வர்க்க நனவுள்ள புரட்சிகரப் போராளிகளின் முன்நிலையிலும் துலாம்பரமாக நின்றுகொண்டுள்ளது, கடந்த காலத்தில் கஷ்டமான நிலைமைகளின் கீழ் இலங்கையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கட்டிக் காத்துப் போராடிய மார்க்சிசம், போராட்டத்தில் இறங்கும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்குப் புரட்சிகர முன்நோக்கினையும் வேலைத்திட்டத்தினையும் வழங்குவதில் தீர்க்கமான பாத்திரத்தினை வகிக்கும்.

சோசலிச புரட்சியின் உலகக் கட்சியைக் கட்டி எழுப்பு!

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்!**

பெயர் ..............................................

முகவரி: ..............................................

..............................................

இப் பத்திரத்தை நிரப்பி அனுப்ப வேண்டிய முகவரி:
தேசிய செயலாளர்,

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்**

இல: 90, 1வது மாவிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு - 10.

# நவசமசமாஜ ஜன அரகலய

(10 ம் பக்கத் தொடர்ச்சி)

சமாஜ தலைவர்கள் அடிக்கடி பெருமையுடன் குறிப்பிட்டுச் சொல்லும் 'கதிர்காமம் நடைபவனி'யில் விக்கிரமபாகு கருணாரத்தினவுடன் தோளோடு தோள் கூட்டிச்சென்றவர்.

பேராசிரியர் ஏர்னஸ்ட் மண்டேலின் 'அனைத்துலகச் செயலகத்தின்' இலங்கைக் கிளையான ந.ச.ச.க தலைவர்கள் இந்தப் பிற்போக்கு அரசியல்வாதி அனுர பண்டாரநாயக்காவை தலைமையில் வைத்துக் கொண்டாடுகையில் கூறியதாவது; "கதிர்காம நடைபவனியாகட்டும் காணாமற் போனவர்களின் பேரில் நடாத்திய கூட்டங்கள் ஆகட்டும் முன்னணியில் நின்ற அனுரவும் அவரின ஆதரவாளர், (திலக் கருணாரத்ன உட்பட) பிரிவினருமே இடதுசாரிகளுக்கு முக்கியம். இவர்களின் பொருளாதாரக் கொள்கைகளின் வேறுபாடு அல்ல; இன்றுள்ள நிலைமைக்கு எதிராக மக்களை வழிநடாத்தத் தயாரா இல்லையா என்பதே" (ஹரய 1992 ஜூலை 10)

நவசமசமாஜக் கட்சித் தலைவர்களின் இன்றைய பிரச்சினை சமசமாஜ - கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கூறிக் கொள்ளும் பரிசுத்தமாகிவிட்ட சி.ல.சு.க. குழியில் வீழ்வதா அல்லது அனுர பண்டாரநாயக்கவுடன் சேர்ந்து யூஎன்பி குழியில் இறங்குவதா என்பதேயாகும்.

ஏகாதிபத்தியவாதிகளின் இன்றைய ஆழமான உலக யுத்த தயாரிப்பு, காலனித்துவ திருப்பத்தின மத்தியில் தேசிய முதலாளி வர்க்கம் எனப்பட்டோர் ஏகாதிபத்தியவாதிகளின் கொப்பிரதோர் அலுவல்காரர்களாக மாறியுள்ளனர். அத்தோடு 'ஏகாதிபத்திய 'ஜனநாயகவாதிகள்', 'முற்போக்கு முதலாளித்துவ தலைவர்கள்' வலைபோட்டுத் தேடிவந்த பழைய தொழிலாளர் வர்க்க அதிகாரத்துவங்கள் அனைத்தும் பெரும் திருப்பம் எடுத்துள்ளன. இவர்களின் வேலைத்திட்டம் முதலாளித்துவ வேலைத் திட்டமாகியுள்ளது. அவை ஏகாதிபத்திய மூலதனத்துடன் பிணைக்கப்பட்டுள்ளன. இவை தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக பிற்போக்காளர்களைப் பலப்படுத்துகின்றன. நவசமசமாஜ கட்சியினதும் அதன் தலைவர்களதும் வேலைத்திட்டம் அதுதான். சமசமாஜ—கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் வேலைத்திட்டமும் அதுவே. இந்த முதலாளித்துவ தேசியவாத வேலைத் திட்டங்களுக்கு எதிராக அனைத்துலகவாத சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்ட இலங்கையில் போராடுவது அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தின் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே.

**யூ. என். பி தாக்குதலுக்கு எதிரான போராட்ட வேலைத்திட்டம்**
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக வெளியீடு
விலை; 7–50

படிப்பகம்

www.padippakam.com


# ருஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி (போல்ஷிவிக்) தலைமைக்கு லியோன் ட்ரொட்ஸ்கியின் கடிதம்



பீட்டர்கிராட்டில் செஞ்சேனைப் போர்வீரர்களுடன்

**1923 அக்டோபர் 8**

பெரிதும் அந்தரங்கமானது

மத்திய குழுவினதும் மத்திய கட்டுப்பாட்டு ஆணைக் குழுவினதும் அங்கத்தவர்களுக்கு:

**1.** தோழர். டிகெர்ஷின்ஸ்கி ஆணைக் குழுவின் (வேலைநிறுத்தங்கள் மற்றும் விடயங்கள்) ஒரு பிரேரணை, கட்சியினுள் குழுத்திரள்வு பற்றி அறிந்த அங்கத்தவர்கள் அதைப் பற்றி ஜீ.பீ.யூ.வுக்கும் ம.கு.வுக்கும் ம.க.ஆ.கு.வுக்கும் உடன் அறிவிப்பது அவசியம் எனக் குறிப்பிடுகின்றது.[1]



லியோன் ட்ரொட்ஸ்கி

கட்சி அங்கத்தவர்களிடையே குரோத மூலகங்கள் இருந்து வருகின்றன என்பதைக் கட்சிக்கு அறிவிப்பது ஒவ்வொரு கட்சி அங்கத்தவரதும் ஆரம்பக் கடமையாக இருப்பினும், அக்டோபர் புரட்சியின் ஆறு ஆண்டுகளின் பின்னர், அதைப் பற்றி ஒரு பிரேரணையை நிறைவேற்றும் அவசியம் இருப்பதாகத் தோன்றவில்லை. அத்தகைய ஒரு பிரேரணைக்கான அவசியம் எழுந்திருப்பதானது அதற்கு எதுவிதத்திலும் குறையாத தெளிவான மற்றும் அறிகுறிகளுடன் சேர்ந்து எழுந்திருப்பது பெரும் ஆபத்தான ஒரு அறிகுறியாகும். அத்தகைய ஒரு பிரேரணைக்கான அவசியம் குறிப்பதாவது: (அ) புரட்சிக்கு ஆபத்தாகக் கூடிய சட்டவிரோத எதிர்ப்புக் குழுக்கள் கட்சியினுள் அமைக்கப்பட்டுள்ளன என்பதும் (ஆ) அத்தகைய குழுக்களைப் பற்றி அறிந்த தோழர்களிடையே அதைப் பற்றிக் கட்சி அமைப்புக்கு அறிவிக்காதிருக்கும் ஒரு மனப்பாங்கு கட்சியுள் இருந்து வருகின்றது என்பதாகும். இவ்விரு விடயங்களும் மத்திய குழு அறிக்கையின்படி நூற்றுக்குத் தொண்ணூறு வீதத்தினரின் ஐக்கியத்தினைப் பிரகடனம் செய்த பன்னிரண்டாவது காங்கிரசின் காலத்தில் இருந்து கட்சியின் உள்ளான நிலைமை பெரிதும் மோசமடைந்து வந்துள்ளதை ஊர்ஜிதம் செய்கின்றது. இந்த மதிப்பீடு அந்தக் காலத்தில் கூட எல்லாம் நன்மைக்கே என்ற விதத்தில் மிகைப்படுத்திக் காட்டப்பட்டது என்பது உண்மை. கட்சியின் அநேக அங்கத்தவர்கள் – எதுவிதத்திலும் கெட்டவர்கள் அல்ல – பன்னிரண்டாவது காங்கிரஸ் கூட்டப்பட்ட விதம், விதிமுறை பற்றி ஆழமாக அதிர்ச்சியடைந்திருந்தனர். காங்கிரசுக்கு வருகை தந்த பேராளர்களில் பெரும்பான்மையினர் அத்தகைய அதிர்ச்சிக்கு உள்ளாகினர். அனைத்துலக நிலைமையையும், சிறப்பாக லெனினின் சுகவீனத்தையும் கணக்கில் கொண்டு, கட்சியின் பெரும்பான்மையினர் புதிய மத்திய குழுவுக்கு ஆதரவளிக்க முற்றிலும் தயாராக இருந்தனர் என்பது சர்ச்சைக்கு அப்பாற்பட்டது.[2] எல்லாவற்றுக்கும் மேலாகப் பொருளாதார அரங்கில் கட்சியின் நடவடிக்கைகளில் ஒருமைப் பாட்டுக்கும் வெற்றிக்கும் வாய்ப்பளிக்கச் செய்வதில் இருந்துவந்த இந்த விருப்பு, கட்சிக்குள் ளேயான குழுக்களைச் சாந்தப்படுத்தவும் பலரைத் தமது அதிருப்திகளை அடக்கிக் கொள்ளும்படி நெருக்கியதோடு, தமது நியாயமான கவலையை காங்கிரஸ் மேடையில் ஏறி முறைப்பாடு செய்யாது தவிர்த்துக் கொள்ளும்படி செய்தது. எவ்வாறெனினும் புதிய மத்திய குழுவின் நடவடிக்கைகள் மூலம் பன்னிரெண்டாவது காங்கிரசினைக் கூட்டுகையில் கையாளப்பட்ட விதம், விதிமுறைகள் உக்கிரம் கண்டுள்ளன. இதன் பெறுபேறாகக் கட்சியின் உள்ளே எதிர்ப்பும் கசப்பும் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டதோடு, இந்த ஆபத்தினை அறிந்தும், அதையிட்டு மௌனம் அனுஷ்டிக்கும் பல மூலகங்கள் தோன்றின. இங்கு நாம் உள்வாரிக் கட்சி நிலைமை ஆழமாகச் சீரழிந்து போதல், மத்திய குழு கட்சியில் இருந்து அன்னியமாதல் வளர்ச்சி காணுதல் என்ற இரண்டையும் காண்கின்றோம்.



லெனின்

**2.** உள்வாரி கட்சி நிலைமை பெரிதும் சீரழிந்து போனதற்கு இரண்டு காரணங்கள் உண்டு: (அ) அடிப்படையில் தவறானதும் ஆரோக்கிய மற்றதுமான உள்வாரிக் கட்சி ஆட்சி (ஆ) புறநிலையான கஷ்டங்களின் காரணமாக மட்டுமல்லாது பொருளாதாரக் கொள்கையின் மிகவும் தெளிவான அடிப்படைத் தவறுகளின் பெறுபேறாக வளர்ச்சி கண்டுள்ள மோசமான பொருளாதார நிலைமை தொடர்பான தொழிலாளர்களதும் விவசாயிகளதும் அதிருப்தி. கீழ்க் குறிப்பிடப்படுபவற்றால் தெளிவாகுவது போன்று இவ்விரு காரணங்களும் ஒன்றுடன் ஒன்று நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன.

**3.** பன்னிரண்டாவது காங்கிரஸ் ஸ்மிச்சிகா[3] என்ற சுலோகத்தின் கீழ் கூட்டப்பட்டது. அரசினால் செய்யப்படும் உற்பத்தியின் செலவினத்தைக் குறைக்கும் திட்டவட்டமானதும் முக்கியமானதுமான பணியினை முன்னிட்டு "கட்சியின் கவனத்திலும் திடசங்கற்பத்திலும் ஒரு திருப்பத்துக்கு" அழைப்பு விடுப்பது எமது பணியாக விளங்குகையில் பன்னிரண்டாவது காங்கிரசுக்கு எமது பொருளாதாரப் பணிகள் வெறும் பிரச்சார வடிவில் முன்வைக்கப்படுமானால் ஏற்படக்கூடிய பேராபத்தினைக் காங்கிரசுக்கு முன்னதாக நடைபெற்ற மத்திய குழுவில் கைத்தொழில் பற்றிய ஆய்வின் ஆசான் என்ற முறையில் நான் சுட்டிக் காட்டினேன். இப் பிரச்சினை தொடர்பாக அக்காலத்தில் அரசியல் குழுவினுள்[4] பரிமாறப்பட்ட கட்டுரைகளை வாசித்து, அதையிட்டு விழிப்படையுமாறு மத்திய குழுவினதும் மத்திய கட்டுப்பாட்டு ஆணைக் குழுவினதும் அங்கத்தவர்களுக்கு நான் ஆலோசனை கூறுகின்றேன். வெறும் பிரச்சார இயக்கங்களில் செய்யும் விளக்கங்கள், ஸ்மிச்சிகா சுலோகத்தைப் பயன்படுத்துவதில் ஏற்படும் ஈர்ப்புக்களுடன் அதன் நிஜ பொருளாதார உள்ளடக்கத்தினைப் (திட்டமிட்ட பொருளாதாரம், கைத்தொழிலின் ஆழமான அடர்த்தி, கைத்தொழிலினதும் வர்த்தகத்தினதும் மேல்வாரிச் செலவினங்களை ஆழமாகக் குறைத்தல்) புறக்கணிப்பதன் மூலம் கைத்தொழிலின் அமைப்பு ரீதியான பணிகள் மீதான அறிக்கையின் நடைமுறை முக்கியத்துவம் கொள்ளையடிக்கப்பட்டு விட்டதென்பதை நான் அங்கு நிரூபித்தேன். எவ்வாறெனினும் கூட்டத்தொடரின்[5] வேண்டுகோளின் பேரில் நான் சமர்ப்பித்த அறிக்கையில், தோழர். லெனின் இல்லாமல் முதற்தடவையாகத் தெரிவு செய்யப்படும் எதிர்கால மத்திய குழுவின் நடவடிக்கைகளில் சிக்கல் ஏற்படுத்துவதைத் தவிர்க்கும் விதத்தில் நடந்து கொள்ள நான் முயற்சித்தேன்.

**4.** கைத்தொழில் பற்றிய பிரேரணை கொஸ்பிளான் அமைப்பினைப் பலப்படுத்துவதையும் அதை மீள ஸ்திரப்படுத்துவதையும், திட்டமிடலின் முன்னணி உறுப்பாக அதை ஸ்தாபிதம் செய்வதையும் வேண்டி நிற்கிறது.

பன்னிரண்டாவது காங்கிரசின் பின்னர் சுகவீனமுற்ற நிலையில் தோழர். லெனினால் தயாரிக்கப்பட்ட குறிப்பு, மத்திய குழுவுக்குக் கிடைத்தது என்பது பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்தது.[6] அதில் கொஸ்பிளான் அமைப்புக்குச் சட்டமியற்றும் அதிகாரம் (அல்லது இன்னும் திட்டவட்டமாகச் சொன்னால் நிர்வாக முகாமைத்துவம்) வழங்கப்படுவதன் அவசியத்தினை அவர் வெளியிட்டுள்ளார். எவ்வாறெனினும் காங்கிரசின் பின்னைய காலத்தில் கொஸ்பிளான் அமைப்பு மேலும் பின்னடிக்குக் கூடத் தள்ளப்பட்டுள்ளது. பல்வேறு துறைகளிலும் அதன் நடவடிக்கைகள் பயனுள்ளதாயும் அவசியமானதாயும் இருந்த போதிலும் பன்னிரண்டாவது காங்கிரஸ் ஸ்தாபிதம் செய்த வடிவில் பொருளாதாரத்தினைத் திட்டமிட்டு முன்னெடுப்பதுடன் இங்கு எதுவிதமான பொதுத் தன்மையும் கிடையாது. மையமானதும் பொதுவில் மிகவும் முக்கியமான அரச பொருளாதாரத் துறைகளின் வேலைகளில் திட்டத்தின் பொருந்தாத் தன்மை மிகவும் தெளிவான வடிவம் எடுத்துள்ளது. பன்னிரண்டாவது காங்கிரசுக்கு முன்னர் இருந்ததைக் காட்டிலும் பெருமளவுக்கு அரசியல் குழுவில் மிகவும் முக்கியமான பொருளாதாரப் பிரச்சினைகள், அவசியமான தயாரிப்புக்கள் இல்லாமலும் திட்டத்துடனான அவற்றின் உறவுக்கு அப்பாற்பட்டும் அவசர அவசரமாகத் தீர்மானிக்கப்பட்டன. அரச கைத்தொழிலிற்குப் பொறுப்பாக உள்ள தோழர்கள். ரிக்கோவும் பியாட்டகோவும் (முழுப் பொருளாதாரத்துக்கும் தோழர். பியாட்டகோவ் பொறுப்பாகவுள்ளார்) செப்டம்பர் 19ம் திகதி மத்திய குழுவுக்கு ஒரு அறிக்கையை அனுப்பினர். அதில் அவர்கள் மிகவும் அவதானத்துடன் கூறியதாவது: "அபிவிருத்தி கண்டுள்ள நிலைமைகளின் கீழ் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அரச கைத்தொழிலை வழிநடாத்துவது மேலும் மேலும் சிரமமாகிக் கொண்டுள்ளது என்ற விடயம் தொடர்பாக கவனம் செலுத்த அரசியல் குழுவின் பல தீர்மானங்கள் எம்மை நெருக்கியுள்ளது."[7] தொடர் கூட்டத்தில் இந்தத் தலையங்கத்தின் கீழ் கலந்துரையாடலை ஆரம்பிப்பது புத்திசாலித்தனமானது அல்ல எனக் கருதிய மேற்குறிப்பிட்ட தோழர்கள், தமது கடிதத்தினை விநியோகிக்க மறுத்தது உண்மையே. எனினும் அந்த விடயம் (தமது கடிதத்தினை விநியோகிக்க மறுத்தமை) எது விதத்திலும் நிலைமையை மாற்றிவிடாது. அதாவது பொருளாதார நடவடிக்கைகளின் பணிப்பாளர்கள் பொருளாதாரப் பிரச்சினை தொடர்பான அரசியல் குழுவின் கொள்கையைத் தற்செயலானதும் ஒழுங்கற்றதுமான தீர்மானங்களின் கொள்கையாகவும் பொருளாதாரத்தின் எந்தவொரு திட்டமிட்ட நெறிப்படுத்தலையும் 'பெரிதும் சங்கடமாக்குவது' ஆகவும் பண்புமயமாக்கம் செய்துள்ளனர். தனிப்பட்ட சம்பாஷ



பிரியோபிரஜென்ஸ்கி

களில் இந்த மதிப்பீடு ஈடிணை
பெரும் ஸ்தூலமான பண்பை எடுக்கின்
பொருளாதாரப் பிரச்சினைகளை அவர்
உள்ளார்ந்த தொடர்புகளுடனும் அ
மான முன்னோக்குடனும் ஆய்வு செ
வரைந்து கொள்ளும் எந்தவொரு கட்சி
அல்லது சோவியத் உறுப்போ கிடைய
மிகவும் திட்டவட்டமான முறையில்
பின்வருமாறு கூறுவோம்: பொருளாத
துக்கு எந்தவிதமான நெறிப்படுத்
கிடையாது: உச்சியில் இருந்து குழ
பெருக்கெடுக்கின்றது.

**5.** பெருமளவுஆதாரங்களுடன் ச
அறிமுகத்துடன் இது மிகவும் சிக்க
வாதங்களை அபிவிருத்தி செ
வேண்டியுள்ளதால் இக்கடிதத்
எல்லைக்குள் நான் நிதி, கைத்தொ
தானியம் கைப்பற்றல், தானிய ஏற்று
அல்லது வரி பற்றிய துறைகளில் எ
கொள்கையைப் பற்றி ஒரு ஸ்தூல
ஆய்வினை நடாத்த முயற்சிக்கவில்
இன்றைய வர்த்தக, கைத்தொ
நெருக்கடிக்கான முக்கிய காரணங்க
ஒன்று, எமது நிதிக் கொள்கை
சுயபூர்த்தித் தன்மையாகும்; அதாவது
ஒரு பொதுப் பொருளாதாரத் திட்டத்து
கீழ்ப்படுத்தப் படவில்லை என்பதைய
இன்று எதுவிதமான சந்தேகமும் இ
முடியாது. கைத்தொழிலின் தனிப்
மாபெரும் வெற்றிக்கு ஒன்றில் இடையூ
ஏற்படும். இல்லையேல் அ
இடையூறுகளுக்கு முகம் கொடுக்
ஆபத்தைக் கொண்டுள்ளன. அத
காரணம் அரச பொருளாதாரத்
அடிப்படைத் துறைகளிடையே தொ
இல்லாததே. அவ்வாறே பு
பொருளாதாரக் கொள்கையின் தவ
காரணமாக அரச கைத்தொழிலிலும்
வர்த்தகத்திலும் ஏற்படும் ச
இடையூறுகளினதும் அர்த்தம்,
மூலதனத்தின் செலவில் தனியார் மூலத
பெருகுகின்றது என்பதே.[8] கைத்தொ
விவசாயப் பொருட்களின் விலை
வளர்ச்சி கண்டு வரும் சமத்துவமின்
மூலம் புதிய பொருளாதாரக் கொள்கை
அடிப்படையான விவசாயியைப் பொரு
மட்டில் அந்தப் புதிய பொருளாத
கொள்கை அழிக்கப்பட்டு விட்
என்பதையே இத்தருணம் முக்கியம
பண்புமயமாக்கம் செய்கிறது. தம
கொள்வனவுச் சக்தி இல்லாதது சட்டத்
மூலம் வர்த்தகம் த
செய்யப்பட்டுள்ளதனாலா அல்
இரண்டு தீப்பெட்டிகள் 36 இறாத்
தானியத்தின் விலைக்குச் சம
இருப்பதாலா என்பதையிட்டு விவசாய
அக்கறை இல்லை. கைத்தொழிலு
வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே
பிரச்சினையான செறிவு, ஒவ்வொ
படியிலும் 'அரசியல்' (அதாவது உள்
நலன்களுடன் மோதிக் கொண்
கைத்தொழில் பொருட்களின் வி
ற்றத்தினைக் காட்டிலும் பெரிதும் மெது
மேலே நகர்ந்து செல்வது பற்றிய
படத்தினைக் கீற நான் இப்போ
ஆரம்பிக்கவில்லை. எனினும் மு
பிரச்சினையைப் பற்றியும் நன்கு தெளிவ
ஒரு சித்திரத்தினை வழங்
பிரச்சினையின் ஒரு சிறிய அம்சத்
பற்றியும் குறிப்பிடுதல் அவசியம்
நான் உணர்கின்றேன். ஒரு திட்
விதிமுறை, சரியான கட்சிப் பே
இல்லாமல் கட்சி மேற்கொள்
பொருளாதார நடவடிக்கைகள் எவ்வ
சீரழிவுக்கு உள்ளாகும் என்பதை
காட்டுகின்றது.

www.padippakam.com




ட்ரொட்ஸ்கியும்

பல கட்சி அமைப்புக்களின் கைத்தொழில், வர்த்தக விளம் பரங்கள் பற்றிய அதிர்ச்சி தரும் ஊழல்கள், பன்னிரண்டாவது காங்கிரசில் சுட்டிக் காட்டப் பட்டன. இந்த ஊழல்களின் சாராம்சம் என்ன? மனச்சாட்சி, தவறின்மை, சிக்கனம், பொறுப்புணர்வு தொடர்பாக உயர்ந்த மட்டப் போதனை வழங்குவதன் மூலம் பொருளாதார அமைப்புக்களிற்குத் தலைமை வழங்குவர் எனக் கருதப்பட்ட சில கட்சி அமைப்புக்கள் உண்மையில் செய்தது அவற்றைக் களங்கப்படுத்தியதே: அதற்காக அரசாங்கத்தை ஏமாற்றி அநாகரிகமானதும் பெரிதும் உதவாக்கரை யானதுமான வேலைகளில் ஈடுபட்டமை அதில் சுட்டிக் காட்டப்பட்டது. இது சட்டவிரோதமாக இருப்பினும் குறைந்தது அர்த்தம் உள்ள விதத்தில் கட்சி அமைப்புக்களின் சார்பில் கைத்தொழில் நிறுவனங்களின் மீது சாதாரணமான முறையில் வரி விதிப்பதற்குப் பதிலாகக் கடதாசி, எழுத்துக் கோர்க்கும் உழைப்பு அத்தகைய ஏனைய •பிறவற்றையும் நாசமாக்கிச் செய்யும் சிரிப்புக்கிடமான விளம்பரங்களைப் பலாத்காரமாகப் பெற்றுக் கொள்வதன் மூலம் இடம்பெற்றது. இந்தக் கொள்ளைக்கும் ஒழுக்கக்கேடான நடவடிக்கைக்கும் எதிர்ப்புக் காட்டப் பக்டரி முகாமையாளர்கள் தீர்மானம் செய்யாதது இவை எல்லாவற்றையும் விட அவமானம் நிறைந்ததாய் விளங்கியது. அதற்குப் பதிலாக அவர்கள் நகரக் கமிட்டிச் செயலாளரின் நிர்ப்பந்தத்திலான கட்டளையின் பேரில் ஏதோ 'கம்யூனிஸ்ட் க்பாடி' என்ற பத்திரிகையில் அரைப் பக்க அல்லது முழுப் பக்க விளம்பரத் துக்கான கீழ்ப்படிவுடன் பணம் செலுத்திய தயாகும். ஏதேனும் ஒரு முகாமையாளர் இதை எதிர்க்கும் அளவுக்குத் துணிந்தால், அதாவது கட்சியின் பொறுப்புப் பற்றி அவரின் நிஜ விளக்கத்தினை வெளிக் காட்டியிருப்பின் அவர் உடனடியாக கட்சித் தலைமையை" அங்கீகரிக்கத் தவறியவர்களின் கும்பலில் - அத்துடன் கூடிய தீய விளைவுகளுடன் - தள்ளப் படுவார். ஒரு சில தனி இடங்களைத் தவிர பன்னிரண்டாவது காங்கிரசின் பின்னர் இந்தத் துறையில் நடவடிக்கைகள் முன்னேற்றம் காணவில்லை. இந்த விதத்திலான பொருளாதாரத் 'தலைமை' கிடைத்த போது அதையிட்டு அண்ணார்ந்து பார்க்கவோ அல்லது அத்தகைய செயற்றப்பாட்டுக்கு பெறுமானம் குறைவு எனக் கொள்ளவோ ஒருவருக்கு உரிய பொருளாதார வேலை என்ன என்பதை இட்டு விளக்கமோ பொறுப்புணர்வோ அவசியம் அன்று.

**6.** தனது பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பாகக் கடைப்பிடிக்கும் விதி முறைகள் பெறுபேறுகள் சம்பந்தமாக முகாமையாளர்களை வழிநடாத்துவது, அவர்கள் மீது நிஜ பொறுப்பினை வைப்பது பற்றிக் கட்சிக்கு உள்ள தலைமை, கட்டுப்பாட்டுச் செல்வாக்கினை மீள எழுப்ப முழுக் கட்சியுடனும் பன்னிரண்டாவது காங்கிரஸ் முயற்சித்தது என்பதில் சந்தேகம் இல்லை. எனினும் இந்தத் திக்கிலான சாதனைகள் (அடக்கிவைப்பு, செலவுச் சிக்கனம், பொறுப்பு ஆதியன உட்பட) குறைந்த அளவிலானதாகவே உள்ளன. எந்தவொரு நிஜ வழிகாட்டலோ அல்லது கட்டுப்பாடோ இல்லாமல், தமது அடிப்படை நடவடிக்கைகளை முன்னர் போன்று நடத்திச் செல்லக் கூடிய விதத்தில் கட்சித் தலைமைக்குத் தாமாகவே பெரிதும் நம்பிக் கீழ்ப்படியும் (அர்த்தமற்ற விளம்பரங்களதும் மற்றும் கொள்ளை யினதும் உருவிலான) தலைவர்களைக் கொண்ட பல பொருளாதார அமைப்புக் களில் ஊதாரித்தனமானதும் கணக்


ட்ரொட்ஸ்கியுடன் இடதுசாரி எதிப்புக் குழு - 1927 மாஸ்கோவில்

கெடுபடாத் தன்மையுமே மக்களின் அதிருப்தி உருவாக ஆரம்பக் காரணமாகும்.

**7.** மத்திய குழுவின் கடந்த கூட்டத்தொடர் செலவுகளைக் குறைக்கவும் விலைகளை குறைக்கவும் ஒரு அதிவிசேட ஆணைக்குழுவை நியமனம் செய்தது. இந்த விடயமே எமது பொருளாதார வேலை களின் பிழையான தன்மைக்கு ஒரு இரக்கமற்ற சாட்சியாகும். விலை நிர்ணயம் தொடர்பான சகல மூலகங்களையும் காலத்துக்கு ஏற்ற விதத்தில் ஆய்வு செய்த பன்னிரண்டாவது காங்கிரசில், உற்பத்திச் செலவையும் வர்த்தகச் செலவினங்களையும் குறைக்கும் பிரேரணைகள் ஏகமனதாக நிறைவேறின. இந்தப் பிரேரணைகளை அமுல் செய்ய வேண்டிய அமைப்புக்கள் நன்கு பிரசித்தமானவை: அவையாவன, பொதுஜன பொருளாதாரத்தின் சுப்ரீம் சோவியத், கொஸ்பிளான், உழைப்பு, பாதுகாப்புக்கான சோவியத், முன்னணி அரசியல் அமைப்பு என்ற முறையில் அரசியல் குழு.[9] இந்த நிலைமையின் கீழ் ஒரு அதிவிசேட ஆணைக் குழுவின் நியமனம் எதைக் குறிக்கிறது? முடிந்த மட்டும் குறைந்த செலவில் உற்பத்தியை நடாத்துவதை நேரடிப் பணியாகக் கொண்ட அமைப்புக்கள் வேண்டிய பெறுபேறு களைப் பெற்றுத்தரத் தவறிவிட்டன என்ற உண்மையை இது குறிக்கிறது. ஒரு அதிவிசேட ஆணைக்குழுவின் மூலம் அடையக் கூடியது என்ன? ஒரு புறத்தில் இருந்து செயற்பட்டு, அங்கு அல்லது இங்கு நடவடிக்கைகள் இடம்பெறச் செய்யவும், சரியான திசையில் தள்ளி விடவும், சில நடவடிக்கைகளை வலியுறுத்தவும், இறுதியாக நிர்வாக ரீதியில் பல விலை களைக் குறைக்கும்படி கட்டளையிடவும் அதனால் முடியலாம்.


ஸ்டாலின்

ஆனால் அரசியல் நெருக்குவாரத்தின் கீழ் அரசாங்க ஏஜன்சிகளைக் கொண்டு விலைகளை பொறிமுறையாகக் குறைப்பது அநேக தருணங்களில் தரகர்களை மட்டும் வலுப்படுத்தும் என்பதும், விவசாய சந்தையில் எதுவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்பதும் நன்கு தெளிவானது. கத்தரிக்கோலை மூடுவது - அதாவது ஒரு நிஜமானதும், அசலானதுமான பொருளாதார ஸ்மிச்காவை அணுகுவது உயிர்புஷ்டியான முறையில் மட்டுமே சாதிக்க முடியும்: அதாவது கண்டிப்பான முறையில் திட்டமிடப்பட்ட செறிவினாலும். முரட்டுத்தனமற்ற உயிர்ப்புஷ்டியான உற்பத்திச் செல வினத்தைக் குறைப்பதாலும் அவர்களின் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பான விதிமுறைகள், பெறுபேறுகள் பற்றிய முகாமையாளர்களின் நிஜ பொறுப்புக்களை உத்தரவாதம் செய்வதன் மூலமேயாகும். விலைகளைக் குறைப்பதன் பேரில் ஒரு ஆணைக்குழு சிருஷ்டிக்கப்பட்டமை பேச்சுத்திறன் கொண்டது. அதே சமயம் தனது சொந்த தவிர்க்க முடியாத விளைவுகளின் தாக்கத்தின் கீழ் மீண்டும் யுத்தக் கம்யூனிசத்தின் கீழ் போல் விலைகளை ஒழுங்குபடுத்தச் செய்யும் முயற்சியில் கூச்சலிடுகின்றதும் அத்தோடு அழிவுநிறைந்ததுமாகும். ஒன்று மற்றொன்றுக்கு இட்டுச் செல்கின்றது: பொருளாதாரத்தினைச் சமப்படுத்துவதற்குப் பதிலாக அதற்குக் குழிபறிக்கிறது.

**8.** பயங்கரமான விலைச் சமத்துவமின்மை, நிஜ பொருளாதார உறவுகளுக்குப் பொருத்தமில்லாததால் ஒரு சுமையாக மாறிய ஒற்றை வரி முறையின் பளுவுடன் சேர்ந்து, மீண்டும் ஒரு தடவை விவசாயிகளிடையே பெரும் அதிருப்தியை உண்டுபண்ணியது. இது தொழிலாளர் களின் மனோநிலையில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பிரதிபலிக்கச் செய்தது. இறுதியாக தொழிலாளர்களின் இந்த மனோநிலையின் மாற்றம் கட்சியின் கீழ்த்தட்டினரிடையேயும் பரவியது. எதிர்ப்புக் குழுக்கள் உயிர்பெற்று, பலமடைந்தன. அவற்றின் அதிருப்தி ஆழமடைந்துள்ளது. இதன் மூலம் ஸ்மிச்கா: விவசாயிகளில் ஆரம்பித்துத் தொழி லாளர்கள் ஊடாகச் கட்சிக்குள் ஊடுருவி, அதன் பின்புறத்தைக் காட்டியுள்ளது. இதை முன்கூட்டியே காணாதவர்களும் அல்லது சமீபகாலம் வரை இதற்கு கண்ணைமூடிக் கொண்டிருந்தவர்களும் இதன் மூலம் பெரிதும் தெளிவான படிப்பினையைப் பெற்றனர். மையப் பிரச்சினைக்கு தீர்வு இல்லையேல் ஸ்மிச்காவின் பெரிதும் கிளர்ச்சி வாய்பாடுகள் நேர் எதிரான பெறுபேறுகளையே கொணரும்: மையப் பிரச்சினை அரச உற்பத்தியை நியாயப் படுத்துவதும் கத்தரிக் கோலை மூடுவதுமே. பன்னிரண்டாவது காங்கிரசின் சமயத்தில் அரசியல் குழுவின் உள்ளேயான ஆழமான மோதல்களுக்கு இதுவே சாராம்சமாக விளங்கியது. இந்த வாதத்துக்கு வாழ்க்கை ஒரு மறுக்கமுடியாத பதிலை வழங்கி யுள்ளது. பொருளாதாரக் காரணி களிடையேயான தொழிற்பாடுகளைப் பற்றிய சரியான கணக்கீட்டு அணுகு முறையும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான ஒரு திட்டமிடப்பட்ட அணுகுமுறையும் இருந்திருப்பின் எம்மால் இன்னமும் தீர்க்க முயற்சிக்கப்படாத இக் கொடூரமான படிப்பினைகளில் முக்கால் பங்கு இல்லாது போனாலும் குறைந்தது அரைவாசியையேனும் தவிர்த்துக் கொள்ள இடமிருந்தது.

**9.** புதிய மத்திய குழுவின் மிகவும் முக்கியமான பணி, அடி முதல் தலைவரை முகாமையாளர்களை மிகவும் அவதானத் துடன் தனிப்பட்ட முறையில் தெரிந் தெடுப்பதாகும் என பன்னிரண்டாவது காங்கிரஸ் சுட்டிக்காட்டியது. எவ்வா றெனினும் ஆட்களைத் தெரிவு செய்யும் அமைப்புக் குழுவின் கவனம் முற்றிலும் வேறு திசையில் திருப்பப்பட்டிருந்தது. கட்சி அங்கத்தவர்களினை நியமனம் செய்வதிலும் நீக்குவதிலும் இடம்மாற்று வதிலும் எல்லாவற்றுக்கும் மேலாக மதிக்கப்பட்டது. அமைப்புப் குழுவினாலும் மத்திய குழுவின் செயலாளர் குழுமத்தி னாலும் இரக்சியமாகவும் உத்தியோகப் பற்றற்ற முறையிலும் பெரிதும் அதிகாரத்துவ ரீதியிலும் நடாத்தப்பட்டு வரும் உள்ளார்ந்த கட்சி ஆட்சியைப் பராமரிப்பதற்கு எந்தளவுக்கு உதவுகின்றது அல்லது எதிர்க்கின்றது என்பதே.[10] மத்திய குழு சுயாதீனமான ஆட்களைக் கொண்டிருக்க வேண்டும் என பன்னிரண்டாவது காங்கிரசில் கூறப்பட்டது. இந்த வார்த்தைக்கு இன்று மேலதிக அர்த்தம் தேவை இல்லை. இதன்பின்னர் 'கப்கோம்' (பிராந்தியக் கமிட்டிகள்) செயலாளர்களும், அதற்கும் அப்பால் கட்சியின் மிகச் சிறிய கலம் வரை, அவற்றின் அடி முதல் தலைவரை செயலாளர்களை நியமனம் செய்கையில் பொதுச் செயலகம் இந்தச் சுயாதீனம் பற்றிய பிரமாணங்களை முன்வைக்கத் தொடங்கியது. மேற்குறிப்பிட்ட அர்த் தத்தில் செயலகத் தினால் சுயாதீன மானவர்களாக அங்கீ கரிக்கப்பட்ட தோழர் களில் இருந்து கட்சி அதிகாரிகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கை, இதுவரை கேள்விப் பட்டிராத உத்வேகத் துடன் முன்சென்றது.


ஸமிநெவ்

இத்தகைய நூற்றுக் கணக்கான பிரபல சம்பவங்களையிட்டு முழுக் கட்சியும் அறிந்துள்ளதோடு அதையிட்டுப் பேசிக் கொண்டுள்ள ஒரு நிலைமையின் கீழ் வேறு புறம்பான உதாரணங்களை அறிமுகம் செய்வது அவசியம் இல்லை. எதிர்வரும் மாதங்களில் உண்மையாகவே நாசகாரியான இந்த நடவடிக்கைகளின் பாரதூரமான விளைவுகளை நாம் நிச்சயமாக அனுபவிக்க நேரிட்டுள்ள உக்ரேனைப் பற்றி மட்டும் நான் சுட்டிக்காட்டுகின்றேன்.

**10.** யுத்த கம்யூனிசத்தின் மிகவும் உக்கிரமான தருணங்களின் போது கட்சியின் உயர்மட்டத்தினால் செய்யப்படும் நியமனங்கள், இப்போது செய்யப்படும் தொகையில் பத்தில் ஒரு பங்கு அளவுக்குக் கூடப் பரந்திருக்கவில்லை. 'கப்கொம்' செயலாளர்களை உயர் மட்டத்தில் இருந்து நியமனம் செய்வது இப்போது விதியாகிவிட்டது. இதனால் செயலாளர்கள் உள்ளூர் அமைப்புக்களில் இருந்து முக்கியமாகச் சுயாதீனமான முறையில் விளங்கும் நிலைமை உருவாகியுள்ளது. அவர் எதிர்ப்புக்கு, கண்டனத்துக்கு அல்லது அதிருப்திக்கு முகம் கொடுக்கும் இடத்து செயலாளர் மத்தியை ஆதாரமாகக் கொண்டு இடமாற்றம் பெற முயற்சிக்க முடியும். மாகாணங்கள் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்படுமிடத்து இணைக்கப்பட்ட அமைப்புக்களின் அக்கறைக்குரிய ஒரே விடயமாக கப்கொமின் செயலாளர் யார் என்பதே தலையெடுத்தது என்பது அரசியல் குழுவின் ஒரு கூட்டத் தொடரில் மனத்திருப்தியுடன் குறிப்பிடப்பட்டது. மத்தியினால் (center) நியமனம் செய்யப்பட்டதனாலும் ஆதலால் உள்ளூர் அமைப்புக்களில் இருந்து பெரிதும் சுயாதீனமானதாலும் செயலாளர் மாகாணத்தின் எல்லைகளுக்குள்ளே வேறு நியமனங்களதும் வேலைநீக்கங்களதும் மூலமாக மாறினார். செயலக கருவிகள் - அடிமுதல் தலைவரை சிருஷ்டிக் கப்பட்டவை - முன்னரைக் காட்டிலும் சுயபூர்த்திமிக்கதாக மாறிவந்த தோடு, கயிறு கைக்குள் அனைத்து நூல் களையும் போட்டுக் கொண்டது. கட்சி அமைப்புகளின் நிஜ ஸ்தாபிதத்தில் கட்சி வெகுஜனங்களின் பங்கெடுப்பு முன்னரைக் காட்டிலும் அரிதாகி வந்தது. கடந்த ஒன்றரை வருட காலத்தில் ஒரு திட்ட வட்டமான செயலக உளவியல் உருவாக்கப்பட்டுள்ளது: கையில் உள்ள பிரச்சினையின் உள்ளடக்கத்தைப் பற்றி விளக்கமில்லாமல் ஒவ்வொரு பிரச்சினையைப் பற்றியும், சகல பிரச்சினைகளைப் பற்றியும் தீர்மானம் செய்யச் செயலாளர் திறமையானவர் என்ற நம்பிக்கை கொள்வது அதன் முக்கிய இலட்சணமாக உள்ளது. தாம் சோவியத் அமைப்புக்களிற்குத் தலைமை தாங்கிய போது எதுவிதமான அமைப்பு, நிர்வாக அல்லது வேறு விதமான தகுதிகளை வெளிக்காட்டியிராத தோழர்கள், தமக்குச் செயலாளர் பதவிகள் கிடைத்ததுதான் தாமதம், பொருளாதார, இராணுவ, மற்றும் பிரச்சினைகள் தொடர்பாகத் திமிருடன் தீர்மானம் செய்யத் தொடங்குவதை நாம் அடிக்கடி காண் கின்றோம். அத்தகைய ஒரு நடைமுறை, பொறுப்பு உணர்வினை பலவீனமாக்குவதால் அல்லது நாசமாக் குவதால் பெரிதும் கெடுதியானது.


நிக்கோவ்

**11.** பத்தாவது கட்சிக் காங்கிரஸ், தொழிலாளர் ஜனநாயகம் என்ற சின்னத்தின் கீழ் இடம்பெற்றது.[11] முழுமினை

(25 ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

 இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது


# தொழிலாளர் பாதை

3/-

மாதமிரு இதழ் — 443 ● 1993 டிசம்பர் 17 வெள்ளிக்கிழமை


1 இடதுசாரி எதிர்ப்பு 1
9 நிறுவப்பட்ட 9
2 70 ஆண்டு நிறைவு 9
3 கொண்டாடப்பட்டது 3

ஆண்டு நிறைவுக் கூட்டத்தில் நான்காம் அகிலத்தின் இன்றையத் தலைவர் டேவிட் நோர்த் நிகழ்த்திய சிறப்புரை 4ம் 5ம் பக்கங்களில் பிரசுரமாகின்றது.

# ஸ்டாலினிசத்துக்கு எதிராகப் போராடிய மார்க்சிச இடதுசாரி எதிர்க்கட்சியின் போராட்டம் நினைவுகூரப்பட்டது


இளம் சோவியத்யூனியனுள் ஏகாதிபத்திய நெருக்குவாரத்தின் தாக்கம் காரணமாக வளர்ச்சி கண்ட ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கு எதிராக 1923ல் மார்க்சிச இடதுசாரி எதிர்க்கட்சி ஆரம்பித்த போராட்டத்தின் எழுபதாவது ஆண்டு நிறைவினை நினைவுகூரும் முகமாக, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கிளைகள் நவம்பர்—டிசம்பர் மாதங்களில் ஏற்பாடு செய்த மிக முக்கியமான வேலைத்திட்டங்களில் ஒரு பாகமாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் டிசம்பர் 05ம் திகதி கொழும்பு பொது ஜன நூலக கேட்போர் கூடத்தில் கண்காட்சியையும் பொதுக் கூட்டத்தினையும் வெற்றிகரமாக நடாத்தியது. இக் கூட்டத்தின் சிறப்புப் பேச்சாளராக நான்காம் அகிலத்தின் இன்றைய தலைவரும் அமெரிக்க வேர்க்கஸ் லீக்கின் தேசியச் செயலாளருமான டேவிட் நோர்த் கலந்து கொண்டார்.

இக்கூட்டம் நான்காம் அகிலம் ஸ்தாபிக்கப்பட்டதன் 55 ஆண்டு பூர்த்தியையும் நான்காம் அகிலத்தின் இன்றைய தலைமையாலான அனைத்துலகக் குழுவின் ஆரம்பத்தின் 40 ஆண்டுகள் நிறைவையும் நினைவு கூருமுகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தப் பொதுக் கூட்டத்தில் தீவின் நாலாபுறங்களில் இருந்தும் 350க்கும் அதிகமானோர் கலந்து கொண்டதோடு ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் போராட்ட வரலாற்றை விளக்கும் விதத்தில் நடாத்தப்பட்ட கண்காட்சியை 500க்கும் அதிகமானோர் ரசித்தனர். கூட்டத்தில் கலந்து கொண்டோரில் தோட்டத் தொழிலாளர்கள், கொழும்பு மற்றும் சுற்றுப்புற பக்டரி தொழிலாளர்கள், கிராமப்புற இளைஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என்போர் அடங்குவர். தோழர்.டேவிட் நோர்த்தும் பு. க. க.பொதுச் செயலாளர் விஜே டயசும் இடதுசாரி எதிர்க்கட்சி ஆரம்பித்துவைத்த ட்ரொட்ஸ்கிச இயக்கப் போராட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கான தீர்க்கமான கட்டங்களைக் குறிப்பிட்ட போது கூட்டத்தினர் அவற்றை அங்கீகரிக்கும் விதத்தில் கரகோஷம் செய்தனர். பு. க. க. மத்தியகுழு உறுப்பினரும் 'கம்கறு மாவத்த' ஆசிரியருமான கே.ரத்னாயக்க தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ம. கு உறுப்பினர் எம்.அரவிந்தன், இளம் சோசலிஸ்ட் இயக்க தேசியச் செயலாளர் தீபால் ஜயசேகர ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

''மார்க்சிசத்தின அந்த மாபெரும் ஸ்தாபகர்களும் தொழிலாள வர்க்கத்தின் மாபெரும் தலைவர்களும் போராடிய அடிப்படைக் கொள்கைகளில் காலூன்றி நிற்கும் உலகில் இன்றுள்ள ஒரே இயக்கம் எமது கட்சியே என்பதையிட்டு நாம் பெருமைப் படுகின்றோம். எனினும் இக் கூட்டத்தின் இலக்கு கடந்த கால வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவது மட்டும் அன்று; அனைத்துலகத் தொழிலாளர் இயக்கத்தின் இன்றைய பணிகளதும் பிரச்சினைகளதும் துருஷ்டி கோணத்தில் இருந்து அவர்களது போராட்டத்தின் அர்த்தத்தை பரீட்சிக்க ஈடுபடுவதே'' என தோழர். டேவிட் நோர்த் தமது பேச்சில் குறிப்பிட்டார் (முழுப்பேச்சு 4ம், 5ம் பக்கங்களில் பிரசுரமாகியுள்ளது.)

ஸ்டாலினிசத்தை தூக்கி வீச ஆரம்பமான ட்ரொட்ஸ்கிச போராட்டத்தின் வரலாற்று உரிமைகளின் அடிப்படையில் நின்று இப்பிராந்தியத்தில் போராடும் ஒரே கட்சி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே எனவும் டேவிட் நோர்த் சுட்க்டிகாட்டினார். ஸ்டாலினிச 'அதிகாரத்துவத்தின் வேலைத் திட்டத்தை தவிர்க்காது போனால் அது சோவியத் யூனியனை அழிவுக்கு இட்டுச் செல்லும் என 70 ஆண்டுகளுக்கு முன்னரே ட்ரொட்ஸ்கி சுட்டிக்காட்டியதை நினைவு கூர்ந்த தோழர்.நோர்த், 1927ல் ஸ்டாலினுக்கு விரல் நீட்டி 'இந்த மனிதன் தான் ருஷ்யப் புரட்சிக்கு படுகுழி தோண்டுபவன்' எனத் தீர்க்க தரிசனமாகக் கூறிவைத்ததையும் கூட்டத்தினரின் கவனத்துக்குக் கொணர்ந்தார்.

(23ம் பக்கம் பார்க்க)




ஆண்டு நிறைவுக் கூட்ட மேடை

# தோ.தொ. தவறானவழியில் திருப்பும் தொண்டமானின் அரசியல் சிலம்படி

யூ. என். பி. அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான ஒரு தொகை புதிய தாக்குதல்களுக்கு ஆயத்தமாகிக் கொண்டுள்ளதை விசேட அடையாள அட்டை விநியோகத் தாரிப்புக்கள் எடுத்துக் காட்டுகின்றது. தோட்டப்பகுதிக்கு வரும் 'பயங்கரவாதிகளை'யும் வெளியாட்களையும் இலகுவில் அடையாளம் காணவே இந்த அடையாள அட்டை விநியோகிக்கப் படவுள்ளதாக விஜேதுங்க அரசாங்கம் கூறிக்கொண்டுள்ள போதிலும், தோட்டத் தொழிலாளர்களின் எந்தவொரு அடிப்படைப் பிரச்சினையையும் தீர்ப்பதில் காட்டாத வேகத்தை' புதிதாகத் திறக்கப்பட்ட கண்டி அலுவலகம் காட்டிக் கொண்டுள்ளது; இது தோட்டத் தொழிலாளர்களை நாட்டின் ஏனைய தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கட் பிரிவிலிருந்தும் மேலும் அந்நியப்படுத்தி தாக்குதல் தொடுப்பதற்கு வாய்ப்பான நிலைமையை சிருஷ்டிக்கும் ஒரு தயாரிப்பாகும்.

யூஎன்பிக்கும் இதொகா தலைமைகளுக்கும் இடையேயான பிற்போக்கு உறவில் என்னதான் விரிசல் ஏற்பட்டாலும் அது தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான தாக்குதலை மேலும் உக்கிரமாக்குவது தொடர்பாக ஏற்பட்ட கொள்கை முரண்பாடோ அல்லது கருத்து வேறுபாடோ அல்ல. தோட்டத் தனியார்மயமாக்கம் சம்பந்தமான இதொகா தலைமையின் இறுக்கமான பிற்போக்கு நிலைப்பாடு மேலும் உக்கிரம் கண்டுள்ளது. தோட்டங்களைப் பொறுப்பேற்ற தனியார் கம்பனிகளின். நிர்வாக காலத்தை மேலும் 30 ஆண்டுகளால் நீடிக்கும் திட்டத்துக்கு தொண்டமான் — செல்லச்சாமி எதிர்ப்புக் காட்டுவதற்கும் தனியார் மயமாக்கத்தை தொடர்ந்து தோட்டங்களில் தொழிலாளர் காட்டும் எதிர்ப்பும் ஒன்றுக்கொன்று முரணானவை. தொண்டமான்—செல்லச்சாமி இந்த நிர்வாகம் 'டென்டர்' வரவழைக்கப்பட்டு 'புகழ் பெற்ற' கம்பனிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றனர். ஆனால் வேலைநாள் வெட்டு, சம்பள உயர்வு, குடியிருப்பு வசதி பற்றிய பிரச்சினைகளின் அடிப்படையில் போராடி வரும் தொழிலாளர்கள் பிற்போக்கு கடிவாளங்களை தாண்டி வர்க்க யுத்தத்தில் இறங்கும் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர். நீட்வூட், ஸ்ரத்தன்மரே, தோட்டத் தொழிலாளர்களின் நீண்டதும் திடசங்கற்பம் கொண்டதுமான போராட்டம் இதை எடுத்துக் காட்டுகின்றது.

தோட்டங்களை தொழிலாளர்களின் நிர்வாகத்தின் கீழ்

(23ம் பக்கம் பார்க்க)

**வடக்கு —கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**